


www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஜூலை 2008
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 10.00









## மகரஜோதி பொய்!
## ஐஸ் லிங்கம் பொய்!
## பக்திப் பரவசமும்
# பொய்!



படிப்பகம்

www.padippakam.com

# இன்னா பண்றது? சோறு துன்னாவணுமே!



துன்பப்படுகிறவர்களைக் கண்டால் ஓடோடி துயர் நீக்கும் ஹீரோக்களும், குத்தாட்டம் போட்டே கலைச்சேவை செய்கிற ஹீரோயின்களும் நிறைந்த கோடம்பாக்கத்தில் ஒரு நாள்.

இடுப்பில் கோவணம், கையில் ஒரு மூங்கில் கழியோடு தள்ளாத வயதில் சேற்றில் புதைந்து கிடந்தார் அந்த மனிதர். வகைவகையாய் மனிதர்கள் தின்று கழித்த சேறு அது. கைக்குட்டையால் மூக்கைப் பொத்திக் கொண்டு இரண்டு கால் ஜீவன்கள் சிரமத்துடன் கடந்து கொண்டிருந்தனர். அருகில் நின்று பேச்சுக் கொடுத்தேன். ''வயசானவன்னு பாக்கறியா! தொழில் சுத்தமா இருக்கும்'' என்று ஆரம்பித்தார்.

''பேரு ஆதிமூலம். ஊரு மதுராந்தகம். எத்தினி வயசுன்னு எனக்கே தெரியாது. 53-ல வேலைக்கு சேந்தேன். 96-ல ரிட்டைடு ஆயிட்டேன். மூவாயிரம் ரூபா சம்பளம். மொத சம்சாரம் அம்மச்சி செத்துப் போனப்புறம் ரெண்டாவதா சந்திராவ கல்யாணம் பண்ணிக்கிட்டேன். மொத்தம் எனுக்கு நாலு பசங்க. ஒரு பையன் மூணு பொண்ணு.

ஒரு பொண்ணுக்கு கல்யாணம் பண்ணிக் குடுத்துட்டேன். ரெண்டு பொண்ணுங்களும் இப்பத்தான் ஏழாவது, எட்டாவது படிக்குதுங்க. பையன் செரியான தண்டச்சோறு. அவனால ஒரு புரோசனமும் இல்ல. ஊரோட போயிட்டான். நான் ஒத்த ஆளு சம்பாரிச்சித்தான் இதுங்கள கரையேத்தணும். வயசாயிடுச்சி, ஒடம்புக்கு முடியலைன்னு ஒக்காந்திருந்தா சோறு சும்மாவா வந்துரும்?

இப்பத்தான் கண் ஆப்ரேசன் பண்ணேன். அப்பவும் பார்வ செரியா தெரில. இந்த சிலாப தூக்குறேன். உள்ள 'தண்ணி நிக்கிதா'ன்னு பாத்து சொல்றியா? கோச்சிக்காதே...'' என்று உதவி கேட்கிறார்.

ஒரு நாளைக்கு ஒம்பது வாட்டி
வாந்தியா எடுத்துக் கெடந்தேன்.
சோத்த அள்ளி வாயில வச்சாப் போதும்,
அப்பத்தான்
எங்கங்க கைய வச்சி அள்ளனமோ
அதெல்லாம் ஞாபகத்துக்கு வரும்.

***''மாசத்துக்கு எவ்ளோ வருமானம் வருது. வேலைன்னா எப்படி***

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே!

- புதிய கலாச்சாரம்
- மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்
- போர்: **25,26**
- குரல்: **11-12, 1-2**
- ஏப்ரல்-ஜூலை 2008

உள்நாடு: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 150.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா ரூ. 500.00

*சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்*

இரா. சீனிவாசன்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
(15-ஆவது தெரு அருகில்),
அசோக் நகர்,
சென்னை - 600083.
தொலைபேசி: 044-23718706,
99411 75876
மின் அஞ்சல் முகவரி:
pukatn@gmail.com

அலுவலக நேரம்:
காலை 10 முதல் மாலை 5 மணி வரை.

*அட்டை வடிவமைப்பு:*
ஸ்பார்ட்டகஸ்

## பணவீக்கம்:
# பொருளாதாரப் புதிருக்கு அரசியல் விடை!

பணவீக்கம் 11 விழுக்காட்டையும் தாண்டி எகிறிப் பாய்ந்து கொண்டிருக்கிறது. இயற்கையின் மர்மப் புதிர்களை அவிழ்த்து சுனாமி எனும் பேரழிவுக்குக் கூட அறிவியல் விளக்கமளித்து விட்டது. ஆனால் செயற்கையாக உருவாக்கப்பட்ட இந்த மனிதப் பேரழிவுக்கு விளக்கம் கிடைக்கவில்லை. யானையைத் தடவிய குருடர்களைப் போல பணவீக்கத்துக்கு வல்லுநர்கள் கூறும் விளக்கங்கள், பணவீக்கத்தைக் காட்டிலும் பெரிதாக வீங்கிக் கொண்டே செல்கின்றன.

எந்தக் கோணத்தில் செய்யப்படும் வியாக்கியானமாக இருந்தாலும், அவையனைத்தும் உலக நிதிமூலதனக் கும்பலை, பன்னாட்டு நிறுவனங்களை, அமெரிக்க வல்லரசை, ஒரு வார்த்தையில் கூறினால் உலக முதலாளித்துவத்தையே குற்றவாளி என்று அடையாளம் காட்டுகின்றன. உலகமயமாக்கத்தின் விளைவாக உலகெங்கிலும் ஒரே நேரத்தில் எழும்பியிருக்கும் இந்த செயற்கை சுனாமி, இயற்கை சுனாமியைப் போலன்றி, ஏழைகளின் மீது மட்டுமே பேரழிவை ஏவி வருகின்றது.

'உழைப்புச் சக்தி உள்ளிட்ட எல்லாப் பண்டங்களின் பணமதிப்பும் (விலையும்) உயருதல்'-இதுதான் பணவீக்கம் என்ற சொல்லுக்கு முதலாளித்துவப் பொருளாதார வல்லுநர்கள் அளிக்கும் விளக்கம். ஆனால் நாம் காணும் உண்மை நிலைமை என்ன? அரிசி முதல் பெட்ரோல் வரையிலான அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்து கொண்டே செல்கிறது. ஆனால் ஊதியம் உயரவில்லை. எனவே இந்த விலைவாசி உயர்வைச் சமாளிப்பதற்காக உணவு உள்ளிட்ட தமது நுகர்வுகளை மக்கள் குறைத்துக் கொள்கிறார்கள்; அல்லது வருமானத்தைக் கூட்டுவதற்காக உழைப்பு நேரத்தை அதிகரித்திருக்கிறார்கள். 'உழைப்பை அதிகரிப்பது அல்லது நுகர்வைக் குறைப்பது' - இரண்டின் பொருளும் ஒன்றுதான். பணவீக்கத்தின் காரணமாக வீழ்ச்சி அடைந்திருப்பது பணத்தின் மதிப்பு அல்ல; உழைப்புச் சக்தியின் மதிப்பு. இது உலகம் முழுதும் உள்ள உழைக்கும் மக்களின் மீதும் உலக முதலாளித்துவம் ஏவியிருக்கும் மறைமுக ஊதிய வெட்டு!

இந்தப் 'பண வீக்கத்தின்' மூலம் பிழிந்தெடுக்கப்படும் உழைப்புச் சக்தியின் மதிப்புதான், கொள்ளை இலாபமாகக் குவிந்து கொண்டிருக்கின்றது. விலை உயர்வைச் சமாளிக்க நீங்கள் குறைத்துக் கொண்ட ஒரு வேளைச் சோறு, நிறுத்தப்பட்ட உங்களது மகனின் படிப்பு, தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் பணம் .. இவைதான் தங்கக் காசுகளாக மாறி அம்பானி, டாடாக்களின் பணப் பெட்டியை நிரப்பிக் கொண்டிருக்கின்றன. எனவேதான் நிதி மூலதனக் கொள்ளையர்கள், பன்னாட்டு முதலாளிகளின் இலாபம் வீங்கிக்கொண்டே போகிறது.

பணவீக்கம்-விலைவாசி உயர்வு ஆகியவை குறித்த பொருளாதாரச் சொற்சிலம்பங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, இப்படியொரு எளிமையான கேள்வியை எழுப்பிப் பாருங்கள். கச்சாப் பொருட்களின் விலையும் உற்பத்திச் செலவும் அதிகரிக்காத போது, இரும்பின் விலையும் சிமெண்டின் விலையும் பிற பொருட்களின் விலையும் ஏன் உயர வேண்டும்? அவற்றின் விலைக்கு அரசாங்கம் ஏன் ஒரு உச்ச வரம்பை நிர்ணயிக்கக் கூடாது? ''முடியாது. சந்தையின் சுதந்திரத்தில் அவ்வாறு தலையிட முடியாது'' என்று இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கிறார் சிதம்பரம். 'பணவீக்கத்தை அரசியலாக்காதீர்கள்'' என்கிறார் மன்மோகன் சிங்.

ஒரு குடிமகனின் உயிர் வாழும் உரிமையைக் காட்டிலும், ஒரு மனிதனின் உணவுக்கான உரிமையைக் காட்டிலும், கொள்ளை இலாபம் ஈட்டுவதற்கான முதலாளிகளின் உரிமைதான் மேன்மையானதாம்! ''எனினும் இது ஒரு பொருளாதாரக் கொள்கை மட்டுமே. இதனை அரசியலாக்காதீர்கள்'' என்கிறார் பிரதமர். இதனைப் பொருளாதாரக் கொள்கையாக மட்டுமே நாம் ஒப்புக் கொள்வோமானால் அந்தக் கொள்கை வழங்கும் தீர்வான பட்டினிச்சாவையும் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும்.

மாறாக, உழைக்கும் மக்கள் உயிர் வாழ்வதற்கு ஏற்ற தீர்வை, பட்டினிச் சாவையும் வறுமையையும் ஒழிக்கின்ற வகையிலான பொருளாதாரத் தீர்வை நாம் தேடுவோமாயின், 'நாம் உயிர் வாழ வேண்டுமானால், உலக முதலாளித்துவம் உயிர்வாழக் கூடாது' என்ற தீர்வே நமக்கு விடையாகக் கிடைக்கிறது. இதனைப் 'பொருளாதாரத் தீர்வு' என்று ஆளும் வர்க்கம் ஒப்புக் கொள்வதில்லை. இதைத்தான் 'அரசியல்' என்கிறார் மன்மோகன் சிங். ●

படிப்பகம்

www.padippakam.com

# மகரஜோதி பொய்! ஐஸ் லிங்கம் பொய்! பக்திப் பரவசமும் பொய்!

''சபரி மலையின் மகரஜோதி என்பது தானே எரிவது அல்ல, அது கோயில் ஊழியர்களால் கொளுத்தப்படுவதுதான்'' என்று ஐயப்பன் கோயில் தலைமைப் பூசாரியின் குடும்பத்தைச் சேர்ந்த ராமன் நாயர் சமீபத்தில் ஒரு பேட்டியில் தெரிவித்தார். இதனை ஒட்டி பதில் சொல்லியாக வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டார் கோயிலின் தலைமைத் தந்திரி கண்டரரு மகேஸ்வரரு. அவர் சார்பில் அறிக்கை வெளியிட்ட அவரது பேரனும் கோயில் தந்திரியுமான ராகுல் ஈஸ்வர், ''வனத்துறை அதிகாரிகளும், தேவசுவம் போர்டு (அறநிலையத் துறை) அதிகாரிகளும், போலீசும் கூட்டாகச் சேர்ந்து கொளுத்தும் தீப்பந்தம்தான் மகரவிளக்கு'' என்ற உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார்.

'இந்த அளவுக்கு குட்டு உடைந்த பிறகும் மார்க்சிஸ்டு அரசு மகரஜோதியைக் கொளுத்துமா?' என்ற கேள்விக்கு ''சபரிமலையில் மகரவிளக்கு வெளிச்சம் எப்படி உருவாகிறது என்பதைக் கண்டறிய விசாரணை நடத்தப்படும். ஆனால் பக்தர்களின் நம்பிக்கைக்கு எதிராக அரசு எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாது'' என்று பதிலளித்திருக்கிறார் மார்க்சிஸ்டு முதல்வர் அச்சுதானந்தன். யாரை யார் விசாரிப்பது? பந்தம் பிடிப்பவனை பற்ற வைப்பவன் விசாரிப்பதா? ''தீவட்டியைத் தொடர்ந்து கொளுத்துவோம். தீவட்டிக் கொள்ளையைத் தொடர்ந்து நடத்துவோம்'' என்பதுதான் அச்சுதானந்தனுடைய கூற்றின் பொருள்.

மகரஜோதி அம்பலமாவது இது முதல் முறையல்ல. பந்தம் கொளுத்திய மின்வாரிய ஊழியர்களைப் பிடித்துக் கொண்டு வந்தார்கள் கேரள மாநில பகுத்தறிவாளர் சங்கத்தினர். ''அரசியல்ல இதெல்லாம் சகஜமப்பா, அரசாங்க வருமானத்துக்கு ஆப்பு வைக்காதீங்கப்பா'' என்று அன்பு வேண்டுகோள் விடுத்து அன்று பகுத்தறிவாளர்களை அமுக்கினார் அந்நாள் மார்க்சிஸ்டு முதல்வர் ஈ.கே. நாயனார்.

கோயில் தந்திரி கண்டரரு மோகனரு, தனது லீலாவிநோதங்கள் மூலம் ஐயப்பன் மகிமையைக் கந்தலாக்கியது தனிக்கதை. அவருக்கு வேதம், மந்திரம் போன்ற வெங்காயம் எதுவும் தெரியாதென்பதும் விலைமாதர் வீட்டு முகவரிகள் மட்டுமே தெரியும் என்பதும் அவரிடம் நடந்த விசாரணையில் அம்பலமானது. இப்போது தலைமைத் தந்திரியின் ஒப்புதல் வாக்குமூலம் வந்திருக்கிறது.

தெற்கே தீவட்டி பிசினஸ்; வடக்கே பனிக்கட்டி பிசினஸ். காஷ்மீரில் அமர்நாத் எனுமிடத்தில் குளிர் காலத்தில் ஒரு குகைக்குள்ளே பெரிய 'குச்சி ஐஸ்' வடிவத்தில் உருவாகும் பனிக்கட்டியைத் தரிசிப்பதற்கு ஆண்டுதோறும் 4 லட்சம் பக்தர்கள் அங்கே சென்று கொண்டிருக்கிறார்கள். இந்த பக்தர்களை பயங்கரவாதிகளிடமிருந்து பாதுகாக்க 40,000 சிப்பாய்களை மாதக்கணக்கில் காவல் வைக்கிறது அரசு.

மேற்படி சிவலிங்கத்திற்கும் வந்தது சோதனை! ''முன்னர் சுமார் 12 அடி உயரம் இருந்த பகவான் தற்போது 6 அடிக்கும் கீழே போய்விட்டார். காரணம் புரியவில்லை'' என்று சென்ற ஆண்டு அபாயச்சங்கு ஊதினார் அந்தக் கோயிலின் நிர்வாக அதிகாரி. பகவானைக் கண்டு பக்தர்கள் உருகலாம், பக்தர்களைக் கண்டு பகவான் எப்படி உருகமுடியும்? ''பக்தர்கள் விடும் மூச்சுக்காற்றின் வெப்பத்தைப் பனீசுவர பகவானால் தாங்கமுடியவில்லை'' என்றன சில பத்திரிகைகள். பக்தர்களின் மூச்சை நிறுத்த முடியாதே! ''குகைக்கு அருகில் அடுப்பு பற்ற வைத்து பக்தர்கள் சப்பாத்தி போடுகிறார்கள். சூடு தாங்கமுடியாமல்தான் பகவான் கசிந்துருகுகிறார்'' என்றன வேறு சில பத்திரிகைகள். புவி சூடேறுதல்தான் காரணம் என்றனர் வேறு சிலர்.

காரண காரியங்கள் குறித்த அறிவுப்பூர்வமான ஆய்வுகள் தொடர்வது ஆன்மீகத்துக்கு ஆபத்து என்பதால் குப்தா கமிசன் என்றொரு கமிசனைப் போட்டு ஆராயச் சொன்னது அரசு. பகவான் கரையாமலும், பக்தர்கள் கூட்டம் கலையாமலும் பாதுகாக்கும் பொருட்டு குகைக்கு குளிர் சாதன வசதி செய்து சிவபெருமானை ஸீரோ டிகிரியில் பாதுகாப்பது; பக்தர்கள் சப்பாத்தி போட 100 ஏக்கர் வனப்பகுதியைக் கோயிலுக்கு தானம் கொடுத்து அடுப்புச் சூட்டிலிருந்து ஆண்டவனைப் பாதுகாப்பது என்று முடிவு செய்தது அரசு. இந்த 100 ஏக்கர் தானத்துக்கு எதிராகக் காஷ்மீரே பற்றி எரியத் தொடங்கி, அதன் விளைவாக அம்மாநில காங்கிரசு அரசு இப்போது உருகிக் கொண்டிருக்கிறது.

எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற கதையாக, 'அமர்நாத் பனிலிங்கம் செயற்கையானதல்ல' - என்று கொட்டை எழுத்தில் செய்தி போடுகிறது தினமணி (24.6.08).

இயற்கையாக உருவான எல்லாம் வல்ல இறைவனை செயற்கையாகப் பாதுகாப்பது ஏன் என்ற கேள்விக்கு மட்டும் அவர்கள் பதில் சொல்லவில்லை.

'இராமன் பாலம் என்பது இயற்கையாக அமைந்த மணல்திட்டு' என்று

**கடன் பட்டதும்
காவியணிந்ததும்
மது-மாமிசம்-
மனைவியைத் துறந்ததும்
கேவலம் ஒரு
தீவட்டியைத்
தரிசிக்கத்தானா?
பகவானை எண்ணிப்
பனியைச் சகித்ததும்,
பன்னிரெண்டாயிரம் அடி
மலையேறியதும் ஒரு
குச்சி ஐஸைத்
தரிசிக்கத்தானா?
என்று பக்தர்கள்
பதறவில்லையே!**



படிப்பகம்

www.padippakam.com



சாமியே ஐயப்பா மகர ஜோதி பொய்யப்பா!

சொன்னால், 'இல்லையில்லை, அது இராமனால் கட்டப்பட்டது, செயற்கையானது - எனவே தெய்வீகமானது' என்று கத்துகிறார் இராம. கோபாலன். 'அமர்நாத் பனிலிங்கம் செயற்கையானது' என்று சொன்னால் 'இல்லையில்லை, அது இயற்கையானது - எனவே தெய்வீகமானது' என்கிறார்கள். வடக்கே இயற்கை தெய்வீகம்! தெற்கே செயற்கை தெய்வீகம்!

மக்களை மயக்கத்தில் ஆழ்த்துவதற்காக ஆளும் வர்க்கம் உருவாக்கிய மடமைகள் உடைபடும்போது மதவாதிகள் பதறுகிறார்கள்; அதற்குக் காரணம் இருக்கிறது. ஆனால் அற்புதம் என்றும் தெய்வீகம் என்றும் தாங்கள் இதுகாறும் நம்பிக் கொண்டிருந்தவை அயோக்கியத்தனமான மோசடிகள் என்று ஆதாரப்பூர்வமாகத் தெரியும்போது பக்தர்கள் பதறியிருக்க வேண்டாமா?

“கடன் பட்டதும், காவியணிந்ததும், மது-மாமிசம்-மனைவியைத் துறந்ததும், காடு மலைகளில் நடையாய் நடந்ததும் கேவலம் ஒரு தீவட்டியைத் தரிசிக்கத்தானா?” என்று குமுறியிருக்க வேண்டாமா? 'அது தீவட்டியில்லை, தெய்வீகத் தீபம்தான். நாங்கள் நம்பமாட்டோம்' என்று நக்கீரனுக்குப் பேட்டி கொடுக்கிறார்கள் ஐயப்பசாமிகள். “பகவானை எண்ணி பனியைச் சகித்ததும், பயங்கரவாதிகளை எண்ணிப் பயந்து செத்ததும், 12,000 அடி உயரம் மூச்சு வாங்க மலையேறியதும் ஒரு குச்சி ஐஸைத் தரிசிக்கத் தானா?” என்று கொதித்திருக்க வேண்டாமா? அந்தக் குச்சி ஐஸைப் பாதுகாக்க பாரத் பந்த் நடத்துகிறது பாரதிய ஜனதா. அதற்கும் கூட்டம் சேருகிறது.

பகுத்தறிவின் ஒளி பட்டவுடனே மூடநம்பிக்கை இருள் அகலவில்லையே ஏன்? 'மகரஜோதி பொய்' என்பதை அந்தக் கோயிலின் தந்திரியே பிரகடனம் செய்த பின்னரும் அய்யப்பன்மார்கள் திருந்தவில்லையே ஏன்? இந்த பக்தர்களை 'மூட நம்பிக்கைக்குப் பலியானவர்கள்' என்று மட்டும் நாம் கருதமுடியுமா? என்ன வகை பக்தி இது?

மூடநம்பிக்கை-பகுத்தறிவு, ஏமாறுபவன்-ஏமாற்றப்படுபவன் என்ற வகைப்பாடுகளின் வரம்பைத்தாண்டி ஒரு விநோதக் கலவையாக உருப்பெற்று வருகிறது இந்த 'பக்தி'. காமவெறி பிடித்த பித்தலாட்டக்காரனாக அர்ச்சகன், இந்தப் பித்தலாட்டத்துக்குப் பந்தம் பிடிக்கும் அரசு, அதற்குக் காவல் நிற்கும் போலீசு, ஐயப்ப சீசனில் திருடுவதற்காகவே மாலை போட்டுக் கொள்ளும் பிக்பாக்கெட்டுகள், டாஸ்மாக் கடைகளில் அய்யப்பன்மார்களுக்கென்றே ஒதுக்கப்பட்டிருக்கும் தனிக் கோப்பைகள், சுத்தம் கருதி சாக்கனாக் கடைகளில் அவர்களுக்கு மட்டும் இலை போட்டுப் பரிமாறப்படும் புரோட்டாக்கள்..! மோசடியும் சுயமோசடியும் சரிவிகிதத்தில் கலந்து உருவாகியிருக்கும் இந்தக் கூட்டுக் களவாணித்தனத்தில் ஏமாற்றுபவன் யார், ஏமாற்றப்படுபவன் யார் என்று பிரித்தறிய முடியவில்லை.



சப்பினால் குச்சி ஐஸ்
கும்பிட்டால் சிவலிங்கம்

புதுப்பட ரிலீஸ் அன்று கட்அவுட்டுக்குப் பால் அபிசேகம் செய்யும் ரசிகனின் பரவசம், நூறு ரூபாய்-ஒரு குவாட்டர் என்று கறாராக ரேட் பேசிக் கொண்டு லாரியில் ஏறி வந்து 'தலைவா' என்று உணர்ச்சி வசப்படும் தொண்டனின் மனக்கிளர்ச்சி, இலஞ்சத்தை அழுதுவிட்டு அப்புறமும் அதிகாரியிடம் 'ங'ப் போல் வளையும்' நெளிவு சுளிவு, மொய் எழுதும் வயிற்றெரிச்சலை மறைத்தபடி திருமண வீட்டில் மலர்ந்து மணம் பரப்பும் புன்னகைகள்..! அன்றாட வாழ்வில் நாம் காணும் இந்த 'உணர்ச்சிகள்' எல்லாம் அமர்நாத் யாத்ரீகர்களின் பரவசத்தையும் அய்யப்பன்மார்களின் மனக் கிளர்ச்சியையும் பிரதிபலிக்கவில்லையா?

இந்த மத உணர்ச்சி ஒரு மயக்கமென்றால், அது ஆட்படுத்தப்பட்ட மயக்கம் மட்டுமல்ல, விரும்பி ஆட்படும் மயக்கம். இது தெய்வீக அபினி மட்டுமல்ல, லவுதீக அபினியும் கூட. இது புனித யாத்திரை என்ற முகமூடி அணிந்த இன்பச் சுற்றுலா. இந்தப் போலி பக்தியை ஆன்மீக அனுபவமாக 'உணர்ந்து' மயங்கும் பொருட்டு ஒரு 'தெய்வீக கிளைமாக்ஸ்' பக்தனுக்கே தேவைப்படுகிறது.

எனவேதான் பக்தன் பதறுவதில்லை. சாம்சங் ரெப்ரிஜிரேட்டரையே கருவறையாக்கி, அதற்குள் பனி லிங்கம் ஒன்றை உறையவைத்து, ஆண்டுக்கு ஒரு முறை திறந்து காட்டினாலும் 'ஹர ஹர மகாதேவா' என்று கன்னத்தில் போட்டுக்கொள்ள இந்த பக்தர்கள் தயார்! மகரஜோதிக்குப் பதில் சிலிண்டரை வைத்து 'ஸ்பிக் ஜோதி'யைக் கொளுத்திக் காட்டினாலும் அதனைத் 'தரிசிக்கும்' பொருட்டு விரதமிருக்கவும், இருமுடி சுமக்கவும் அய்யப்பன்மார்கள் தயார்!

'டென் கமாண்ட்மெண்ட்ஸ்' என்ற திரைப்படத்தில் பார்த்த ஒரு காட்சி இங்கே நினைவுக்கு வருகிறது. பல வகையான விக்கிரக வழிபாடுகளில் மூழ்கியிருக்கும் யூத மக்களிடம் “இவையெல்லாம் கடவுளல்ல, உண்மையான கடவுளின் செய்தியை நான் உங்களுக்குக் கொண்டுவருகிறேன்” என்று கடவுளைத் தேடி மலைக்குச்


படிப்பகம்


www.padippakam.com

செல்வார் மோசஸ். போனவர் திரும்புவதற்குத் தாமதமாகவே, ''ஒரு கடவுளில்லாமல் இன்னும் எத்தனை நாள்தான் நாம் காத்திருக்க முடியும்?'' என்று விசனப்பட்ட மக்கள் ஒரு எருமைக்கிடா பொம்மையைக் கடவுளாக்கி அதைத் தலையில் வைத்துக் கூத்தாடத் தொடங்குவார்கள்.

அந்தக் கூத்தும் இந்தக் கூத்தும் ஒன்று போலத் தோன்றினாலும் ஒன்றல்ல. அது அச்சத்திலும் மவுடீகத்திலும் மனிதகுலம் ஆழ்ந்திருந்த, அறிவியல் வளராத காலம். அது பல் முளைக்காத குழந்தையின் மழலை. இன்று நாம் காண்பதோ கிழவனின் மழலை. ''ஒரு பொய்யாவது சொல் கண்ணே உன் காதலன் நான்தான் என்று, அந்தப் பொய்யில் உயிர்வாழ்வேன்'' என்று மன்றாடும் காதலனைப் போல, 'எங்களுக்கு ஒரு மாயையை வழங்கு' என்று இறைஞ்சுகிறார்கள் இந்த பக்தர்கள்.

சென்னை தீவுத்திடலில் அமர்நாத்தைப் போலவே பனிக்கட்டி லிங்கத்தை உருவாக்கி 'சென்னையில் அமர்நாத்' என்று விளம்பரம் செய்யப்படுகிறது. ராட்டினம் ஏறப்போன பொருட்காட்சிக் கூட்டம் உடனே பக்தர்களாக உருமாறி அந்த செயற்கை லிங்கத்தைப் பரவசத்துடன் வழிபடுகிறது. திருப்பதி வரை சென்று தரிசிக்க முடியாத பக்தர்களுக்காக 'சீனிவாச திருக்கல்யாணத்தை' சென்னையிலேயே நடத்தி, 'சென்னையில் ஒரு திருப்பதி' என்று விளம்பரம் செய்கிறது திருப்பதி தேவஸ்தானம். 'கோயிந்தா கோயிந்தா' என்று அங்கேயும் கூட்டம் அலைமோதுகிறது.

ஷாம்பு பாட்டில் வாங்கும் வசதியில்லாதவர்களுக்காக இப்போது சாஷேக்களில் தொங்குகிறார் கடவுள். நுகர்வு தரும் சிற்றின்பத்துக்கும் ஆன்மீகப் பேரின்பத்துக்கும் இடையில் நிலவுவதாகச் சொல்லப்படும் சீனப்பெருஞ்சுவர் மாயமாக மறைந்து விட்டது. இந்தப் பேரின்பமென்பது சிற்றின்பத்தின் வாலில் தடவப்பட்டிருக்கும் ஆன்மீக வாசனைத் தைலம். தமது இஷ்ட தெய்வங்கள் மீது இந்த பக்தர்கள் கொண்டிருக்கும் ஈடுபாடு, தமது இஷ்ட பிராண்டுகள் மீது நுகர்வோர் கொண்டிருக்கும் ஈடுபாட்டையே பெரிதும் ஒத்திருக்கிறது.



சென்னை அபிராமி தியேட்டரில் அமர்நாத்:
சினிமாவை தரிசிக்கலாம் பகவானை ரசிக்கலாம்

இது உத்திரவாதமில்லாத பரலோக இன்பவாழ்வை இலட்சியமாகக் கொண்டு இகலோகத் துன்பங்களைச் சகித்துக் கொள்ளும் இலக்கண வகைப்பட்ட ஆன்மீகமல்ல; உத்திரவாதமான இன்பத்துக்கான தேட்டம். 'பக்தி' என்று புனைபெயர் சூட்டிக் கொண்ட பிழைப்புவாதம். ஜோதியோ, லிங்கமோ, பக்திப் பரவசமோ அனைத்தும் இங்கே பிஸ்கெட் பாக்கெட்டுகளின் பளபளப்பான மேலுறைகள் மட்டுமே.

கஞ்சாச் செடியின் போதையைத் தெய்வீகமென்றும் பேரின்பமென்றும் தவமென்றும் எண்ணிக் கொண்டிருந்த கருத்து மயக்கமல்ல இது. 'கஞ்சாவே பேரின்பம்' என்று அறிவுப்பூர்வமாகத் தேர்ந்து தெளிந்த விழிப்பு நிலை. சொல்லப்போனால் இது வேறு ஒரு வகைப் பகுத்தறிவு. சுயநலத்துக்காகத் தெரிந்தே தன்னை மடமையில் ஆழ்த்திக் கொள்ளும் பகுத்தறிவு. கல்லையும் மரத்தையும் கண்டு அஞ்சி வணங்கிய மூடநம்பிக்கையைக் காட்டிலும் அபாயகரமான பகுத்தறிவு.



கேரள முதல்வர் அச்சுதானந்தன்
"தீவட்டியைக் கொளுத்துவோம்!
தீவட்டிக் கொள்ளையைத் தொடருவோம்!
கட்சிக்கு கம்யூனிஸம், காசுக்கு ஐயப்பன்!"

'மாலை போடுவது மடமை' என்று நீங்கள் சாடினால், 'ஒரு மண்டலம் விரதமிருப்பதும், புலால் மறுப்பதும் ஆரோக்கியத்தை மேம்படுத்தும்' என்று அறிவியல் பூர்வமாக விளக்கி உங்களைத் திகைப்படையச் செய்வார்கள் இந்த பக்தர்கள். 'பனிலிங்கம் பொய்' என்று நீங்கள் கூறினால், ''இந்த விசயம் உங்களுக்கு இப்போதுதான் தெரியுமா, எனக்கு ஏற்கெனவே தெரியும்'' என்று சொல்லி உங்களை அதிர்ச்சியில் உறைய வைப்பார்கள். நீங்கள் அறிந்திராத மேலும் இரண்டு ஆன்மீக மோசடிகளை உங்களுக்கு விளக்கி, தங்களது உலக ஞானத்தின் மேன்மையை உங்களுக்குக் குறிப்பாலுணர்த்துவார்கள்.

அல்லது ''மகரஜோதியும் பனிலிங்கமும் மட்டுமா, உலகமே மோசடிகளால்தான் நிறைந்து இருக்கிறது'' என்று தத்துவஞானத்தின் தளத்துக்கு விவாதத்தை தள்ளிச் செல்லுவார்கள். லஞ்சம், வரதட்சிணை, சாதி, வாஸ்து, சாமியார்கள், ராசிக்கல் என நியாயப்படுத்த முடியாத எல்லா அயோக்கியத்தனங்களையும் கொள்கையளவில் மறுப்பதற்கும், நடைமுறையில் அவற்றுடன் அனுசரித்துச் செல்வதற்கும் என்ன விதமான நியாயப்படுத்தல்களை சமூக வாழ்வில் நாம் எதிர்கொள்கிறோமோ, அவற்றைத்தான் பக்தர்களும் பயன்படுத்துகிறார்கள். பிழைப்புவாதமும் காரியசாத்தியவாதமும் பழகி விட்டதால், அந்த வாதங்கள் அனைத்தையும், 'பழகிய சைக்கிளை பழகிய ரோட்டில் ஓட்டும் இலாவகத்துடன்' பயன்படுத்தி பகுத்தறிவை முறியடிக்கிறார்கள் இந்த பக்தர்கள்.

'டபுள்யூ.டபுள்யூ.எஃப்' என்றொரு அமெரிக்க மல்யுத்தத்தைத் தொலைக்காட்சிகளில் நீங்கள் பார்த்திருக்கலாம்.


படிப்பகம்

www.padippakam.com

அதில் இரண்டு மாமிசமலைகள் மோதிக்கொள்வார்கள். நாக்கூசும் வார்த்தைகளால் ஏசிக் கொள்வார்கள். கொலைவெறியுடன் கட்டிப் புரளு வார்கள். எனினும் அது உண்மையான சண்டையல்ல. யார் வெல்ல வேண்டும் யார் தோற்க வேண்டும் என்பதை முன்னரே தீர்மானித்து நிகழ்ச்சியை நடத்தும் முதலாளிகள் காட்சிப் படுத்தும் நாடகம் அது. இரசிகர் களுக்கும் இது தெரியும். இருந்தாலும் பணம் கொடுத்து டிக்கெட் வாங்கி சண்டையை ரசிக்கிறார்கள். 'குத்து.. கொல்லு' என்று வெறிகொண்டு கூச்சலி டுகிறார்கள்.

**இது பரலோக இன்பவாழ்வுக்காக இகலோக துன்பங்களைச் சகித்துக்கொள்ளும் இலக்கண வகைப்பட்ட ஆன்மீகமல்ல; உத்திரவாதமான இன்பத்துக்கான தேட்டம்! பக்தி என்று புனைபெயர் சூட்டிக்கொண்ட பிழைப்புவாதம்!**

இந்த நிகழ்ச்சியில் ஏமாற்றுபவன் யார், ஏமாற்றப்படுபவன் யார்? நடிகன் யார், ரசிகன் யார்? தீவட்டி கொளுத்து பவன் யார், கன்னத்தில் போட்டுக் கொள்பவன் யார்? கண்டரரு யார், காணதவரு யார்? குருசாமி யார், கன்னிச்சாமி யார்?

இது ஒரு வகைப் 'பகுத்தறிவு'. இதுதான் நம் முன் பக்திவேடம் பூண்டு ஆடுகிறது. வெறும் கருத்துப் போராட் டத்தால் இதனை வீழ்த்த முடியாது. இதன் இதயம் ஆன்மீகத்தில் இல்லை ; லௌகீகத்தில் இருக்கிறது சமூக வாழ்க் கையின் எல்லாப் பரப்புகளிலும் வேர் பரப்பியிருக்கும் இந்தப் 'பகுத்தறிவை' எதிர்த்துப் போராடுவதென்பது 'ஒரி ஜினல் மூடநம்பிக்கையை' எதிர்த்துப் போராடுவதைக் காட்டிலும் கடின மானது.

● மருதையன்

# கல்விக் கடவுள் டில்லி பாபு!

கல்விக் கடவுள் சரசுவதி
கையிலிருக்கும்
வீணையை எறிந்து
வெகுநாளாயிற்று.
எடை மிசினை ஏந்தியபடி
எதிர்பார்த்திருக்கிறாள்
பக்தர்களை.

மெனக்கெட்டுப் படித்து
நல்ல மதிப்பெண் வாங்கிய
பையனை
பணக்கட்டு ஏதுமின்றி
பள்ளிப்படியிலேற்றினார்
சுமைதூக்கும் தொழிலாளி
டில்லிபாபு.

பத்தாயிரம்
நன்கொடை தந்தால்
பதினோராம் வகுப்பு
கிடைக்குமென்று
கட்டாயமாகச் சொன்னார்
பள்ளி நிர்வாகி.
ஆவேசமடைந்த தொழிலாளியை
ஆற்றுப்படுத்தினர்
சில ஆசிரியர்கள்.

இங்காவது இத்தோடு,
மற்ற இடத்தில்
அதுக்கு, இதுக்கு என்று
பணத்தைப் பறிப்பான்
கொத்தோடு!
கூட்டிக் கழித்துப்பார்!
பேசாமல்
கேட்டதைக் கொடுத்து
பிள்ளையைச் சேர்!
என்று
கணக்கு வாத்தியார்
புரியவைத்தார்.

கஷ்டப்பட்டு விதைச்சாதான்
இஷ்டப்பட்ட விளைச்சல் வரும்!
பருவத்தே பயிர் செய்ய
பணத்தைப் பார்க்காதே!
என்று
புத்தி சொன்னார்
புவியியல் ஆசிரியர்.

ஒவ்வொரு வினைக்கும்
எதிர்வினை உண்டு -
அதுபோல
ஒவ்வொரு படிப்புக்கும்
ஒரு விலை உண்டு
என்ன நீ இது புரியாம இருக்க?
என்று
எரிச்சலடைந்தார்
அறிவியல் ஆசிரியர்.

தன்மையோடு இடைமறித்தார்
தமிழாசிரியர்:
உயிரும் மெய்யும் சேர்ந்தாதான்
உயிரமெய்யெழுத்து.
அதுபோல-
பணமும் படிப்பும் சேர்ந்தால்தான்
பளபளப்பு.
பணத்துக்காக
நல்ல பள்ளியை விட்டால்
அப்புறம்
உன் பையனின் தலையெழுத்து?

எதற்கும் சம்மதிக்காத
தொழிலாளியைப் பார்த்து
"நீ போய்யா வெளியிலே" என்று
வெறுப்புடன்
சத்தம் போட்டார் நிர்வாகி.
பதிலுக்கு
'இதாண்டா ஆயுத எழுத்து'
என்று
சுமைதூக்கும் கொக்கியால்
தலையில் எழுத
இரத்த வெள்ளத்தில்
நிர்வாகி.
கைதாகி, வழக்கில்
தொழிலாளி.

இப்போது-
கட்டாய நன்கொடை
பள்ளியில் இரத்து.
கல்விக் கபாலத்தை
திறந்து விட்ட
டில்லி பாபுவை
கையெடுத்துக் கும்பிடுகிறது ஊர்.

● துரை.சண்முகம்.

('கட்டாய நன்கொடை கேட்ட பள்ளி நிர்வாகியைத் தாக்கிய தொழிலாளி கைது' என்று பத்திரிகையில் வந்த செய்தியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட கவிதை.



படிப்பகம்

www.padippakam.com

# எம்.ஆர்.ராதா: பெரியாரின் துருவேறாத போர்வாள்!

மெட்ராஸ் ராஜகோபாலன் ராதா கிருஷ்ணன் எனப்படும் எம். ஆர். ராதா பிறந்து நூறு ஆண்டுகள் கடந்து விட்டன. தன்னுடைய ராமாயணம் நாடகத்திற்கு ஆட்சியாளர்கள் தடை விதித்த போது, ''குடிகாரன் கடவுளாக ஆக்கப்பட்டிருக்கிறான் என்றால் மது விலக்கு அமலில் இருக்கும் பிரதே சத்தில் அதை அனுமதிக்க முடியாது'' என வாதிட்டு வால்மீகி ராமாயணத் தையும், ராமனையும் நீதிமன்றத்தில் நிறுத்தியவர் ராதா.

அந்தக் காலத்தின் நினைவுகள் வலி மையானவை. தனது நிகழ்கால அர சியல் சமரசங்களையெல்லாம் ஒரு கணம் மறந்துவிட்டு ''ராமன் என்ன எஞ்சினீயரா?'' என்று கலைஞர் எழுப்பிய கேள்வி அந்த பழைய நினைப்பின் தாக்கம் அன்றி வேறென்ன?

''சேது ராம் எனப் பெயர் வைத் தாவது சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுங்கள்'' என்று இப்போது தரையிறங்கி விட்டார் கருணாநிதி. பார்ப்பான் என்ற வார்த்தையையே பயன்படுத்தாமல் பெரியார் வாழ்க் கையைத் திரைப்படமாக்கத் தெரிந்த 'அட்டைக்கத்திகள்' நிறைந்த இந்தக் காலத்தில் 'ராதா எனும் பெரியாரின் துருவேறாத போர்வாளை', நினைவு கூர்வது, வேறெதற்கு இல்லையென் றாலும் நம் கண் முன்னே நடனமாடும் அட்டைக்கத்திகளை அடையாளம் காண்பதற்கு நிச்சயம் பயன்படும்.

•••

சென்னையிலுள்ள சூளையில் 14 ஏப்ரல் 1907-இல் பிறந்தார் ராதா. தந்தை இராணுவத்தில் இருந்ததால் தாயின் கண்டிப்பிலே வளர்ந்த ராதா அது பிடிக்காததால் வீட்டை விட்டு வெளியேறினார். எழும்பூர் ரயில் நிலையத்தில் டப்பி ரங்கசாமி நாயு டுவைச் சந்தித்ததால் அவரது பாய்ஸ் நாடகக் கம்பெனியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார் ராதா. சிறிய வேடங் களில் நடித்துக் கொண்டு ஓய்வு நேரத்தில் பல வேலைகளைக் கற்றுக் கொண்டார். வீட்டார் வந்து அழைத் ததால் திரும்பிய ராதா பிறகு உடன் பிறந்தோரையும் கூட்டிக்கொண்டு மைசூர் சென்று நாடகக் கம்பெனி ஒன்றில் சேர்ந்தார்.

சுயமரியாதையோடு நடத்தப்படா ததால் அங்கிருந்து வெளியேறி சாமண்ணா ஐயர் கம்பெனியில் சேர்ந்தார். அங்கு படிக்காதவர்களுக்கு மரியாதை இல்லாததால் ஜெகந்நா தய்யர் கம்பெனிக்கு வந்து சேர்ந்தார் ராதா. இங்கு கதரின் வெற்றி, பதிபக்தி போன்ற நாடகங்களில் நடித்தார். சினிமா முதல் சிவகாசி காலண்டர் வரை அனைத்திலும் கடவுளர்களின் பின்புறத்தில் இன்று நாம் காணும் ஒளி வட்டத்தை உருவாக்கி பதிபக்தி நாட கத்தில் அறிமுகப்படுத்தியவர் ராதா தான். அந்த ஒளிவட்டத்தை ஒழிக்கும் வேலையையும் பிற்காலத்தில் அவ ரேதான் செய்ய வேண்டியிருந்தது.

யாருக்கும் பயப்படாத மற்றும் கட்டுப்பாடுகளுக்குள் அடங்காத ராதாவின் தன்மை மற்ற நடிகர்களுக்கு அவர்பால் அச்சத்தையே தோற்று வித்தது. ஆனால் ராதாவின் நடிப்பு, கற்பனை வளம் ஆகியன மக்களிடம் ஒரு செல்வாக்கை ஏற்படுத்தியிருந் ததால் அவரைத் தவிர்க்கவும் முடிய வில்லை. நாடகத் துறையில் பலருக்கு முன்மாதிரியாக இருந்த ராதாவிற்கு ஈரோட்டில் நாடகம் நடந்தபோது பெரி யாரும் அவரது குடியரசு இதழும் அறி முகம் ஆனது.

மரபுகளின் புனிதத்தன்மை குறித்து ஒரு ஏளனப்பார்வை அவரிடம் எப் போதும் நிலவி வந்திருக்கிறது. இழந்த காதல் என்ற புகழ்பெற்ற நாடகத்தில் ஜெகதீஷ் என்ற வில்லன் பாத்திரத்தை ஏற்ற ராதா நாடக சம்பிரதாயத்துக்கு மாறாக பார்வையாளர்களுக்குத் தனது முதுகைக் காட்டியபடி நீண்ட வசனம் பேசினாராம். அப்போது ராதாவின் நீண்ட தலைமுடி கூட நடிக்கும் என பின்னாளில் நினைவு கூர்ந்தார் கரு ணாநிதி.

அறுபதுகளில் வெளிவந்த 'ப' வரிசைப் படங்கள், உதிர்ந்து கொண்டி ருந்த இந்திய நிலப்பிரபுத்துவ சமூ கத்தின் எச்சசொச்சமான அற்பவாத உணர்வுகளைத் தூண்டி, சமூக மாற் றத்தில் ஒரு தேக்கத்தைக் கோரின. வாழ்ந்து கெட்டாலும் மாற்றுக் குறையாத மேன்மக்களையே அவை சுற்றி வந்தன. ஆளும்வர்க்கத்திற்கு தேவைப்பட்ட சமூக அமைதியை போலிக் கையறுநிலையோடு குழைத்து இளைஞர்களுக்கு வழங்கின இத்திரைப்படங்கள்.

பார்ப்பனரல்லாத 'மேல்'சாதி இந் துக்கள் பலர் முதல் தலைமுறையாகக் கல்வி பெறத் துவங்கிய காலமது. அவர்களிடம் புராணங்களின் மீது ஒருவித விமர்சனமற்ற மரியாதை யையும், உதிர்ந்து கொண்டிருந்த கூட்டுக் குடும்பங்களின் மீது ஒரு அனு தாபம் கலந்த கரிசனையையும் இப்படங்கள் தோற்றுவித்தன. கதாநா யகர்களின் சோகத்தில் மாத்திரமே தனது துன்பங்களை இனம் காணப் பயிற்றுவிக்கப்பட்ட இளைஞர்க ளிடம் யதார்த்தத்தை ஈவிரக்கமின்றி முன்வைத்தன ராதாவின் பாத்திரங்கள்.

1942-இல் ராதா நடித்த 'இழந்த காதல்' எனும் நாடகம், நிலவுடைமை ஆணாதிக்கத்திற்கு எதிராகக் காதலை ஆதரிக்கிறது. சிற்றரசு எழுதி 1940 முதல் நடிக்கப்பட்டு வந்த 'போர்வாள்' நாடகம், மன்னராட்சியின் கொடுங் கோன்மை, பொருந்தாத் திருமணம்,

**ராதா வசதியான வாழ்க்கை வாழ்ந்தவர்தான் எனினும் பணக்கார வர்க்கத்தின் மீது வெறுப்பும் ஏளனமும் கொண்டிருந்தார். வேண்டுமென்றே தனது இம்பாலா காரில் வைக்கோலை ஏற்றி அனுப்பி, பெரிய மனிதர்களைப் புழுங்கச் செய்திருக்கிறார்.**



படிப்பகம்

www.padippakam.com



புராண ஆபாசம், கோயிலில் நடைபெறும் ஊழல் என அனைத்தையும் பேசுகிறது. மக்கள் தங்களைத் தாங்களே ஆள வேண்டுமெனக் கோருகிறது. பிரகாசம் அரசாங்கம் இக்கருத்து பிரிட்டிஷாருக்கு எதிரானது என்பதால் நாடகத்தைத் தடை செய்தது. 1947-இல் கருணாநிதி எழுதிய 'தூக்குமேடை' பார்ப்பனர்களின் சூழ்ச்சி, மிராசுதாரர்களின் காமக் களியாட்டங்கள், நேர்மையானவர்களின் காதலைத் தோற்கடிக்கும் பொய் சாட்சிகள் ஆகியவற்றை அம்பலப்படுத்துகிறது.

தூக்குமேடை நாடகத்தைத் தஞ்சையில் நடத்தும்போது வேண்டுமென்றே பண்ணையாருடைய பெயரை 'தென்பாதி மங்கலம் தியாகராஜ முதலியார்' என வைத்தார் ராதா. கீழத்தஞ்சையில் வடபாதி மங்கலம் தியாகராஜ முதலியார் கோலோச்சி வந்த அந்தக் காலத்தில் ராதாவிடம் வெளிப்பட்ட இந்தத் துணிச்சல் அசாத்தியமானது.

ராதாவின் திராவிட மறுமலர்ச்சி நாடக சபாவில் நாடகம் துவங்குவதற்கு முன் கடவுள் வாழ்த்திற்குப் பதில் இனவுணர்ச்சிப் பாடல்கள், பெரியார் தொண்டு பற்றிய நிழற்படங்கள் இடம் பெறும். 'உலகப் பாட்டாளிகளே ஒன்று சேருங்கள்' என்ற வாசகத்துடன் ஒரு ஆணும் பெண்ணும் கையில் சுத்தியல் அரிவாள் பிடித்தபடியுள்ள படத்துடன் திரையும் இருக்கும். பொன்மலை ரயில்வே தொழிலாளர் போராட்டமும், அதைத் தொடர்ந்து வந்த போலீஸ் துப்பாக்கிச்சூடும், அரசின் அடக்குமுறையும் ராதாவை மிரட்ட முடியவில்லை.

ரத்தக்கண்ணீர் ஆரம்பத்தில் நாடகமாகவும், 1954 நவம்பரில் திரைப்படமாகவும் வெளிவந்தது. இறுதிக்காட்சியில் நண்பனுக்கே தனது மனைவியை மணம் முடித்து வைப்பார் தொழுநோயாளியான ராதா. தாசி வீட்டுக்குப் போனாலும் கணவனே கண் கண்ட தெய்வமென்று காத்திருந்த கண்ணகிகளுக்கு சரியான வழியைக் காட்டினார் ராதா. தனது சிலையை ஊருக்கு நடுவே வைத்து எப்படி வாழக்கூடாது என்பதற்கு தன்னுடைய பாத்திரத்தையே உதாரணமாக்குமாறும் கோருவார். இளைஞர்கள் ரசித்தார்கள். பழமை விரும்பிகளுக்கோ இப்படம் வயிற்றில் புளியைக் கரைத்தது.

அன்று ரத்தக்கண்ணீர் திரைப்படத்திற்கு சுதேசமித்திரனில் விமர்சனம் எழுதிய சாண்டில்யன், ''ஒருவரே வில்லனாகவும் கதாநாயகனாகவும் வருகிறார். சீர்திருத்தக் கருத்துக்களைப் பேசுபவன் இவ்வளவு மோசமானவனாக இருப்பானா?'' என ஐயமெழுப்பி இருந்தார். விடை காணப்பட வேண்டிய கேள்விதான் இது.

கதாநாயகனை நன்மைகள் அனைத்தின் திருவுருவமாகவும், பலவீனங்களும் குறைகளும் அற்ற சொக்கத் தங்கமாகவும், வில்லனைத் தீமையின் திரண்ட வடிவமாகவும் சித்தரிக்கின்ற உண்மையும் கலைத்தரமும் அற்ற நம்முடைய இலக்கிய மரபையும், சினிமா ஃபார்முலாவையும் ஒரே நேரத்தில் தாக்கித் தகர்க்கிறது ரத்தக்கண்ணீர். நாயகனே வில்லனாகிறான், பிறகு வில்லனே நல்லதைச் சொல்கிறான், நல்லவர்கள் எனப்படுவோரிடம் படிந்திருக்கும் பழமையையும் எள்ளி நகையாடுகிறான், எதிர்மறைக்குச் சிலை வைத்து நேர்மறையைக் கற்றுக் கொள்ளச் சொல்கிறான்.

ரசிகனோ 'யார் யார் வாய் கேட்பனும் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்று வில்லனின் நகைச்சுவையைக் கைதட்டி ரசிக்கிறான். இப்படத்திற்கான வசனத்தை திருவாரூர் தங்கராசு எழுதியிருக்கிறார் என்பது உண்மையானாலும், ராதாவின் வாயிலிருந்து அல்லாது வேறோரு நடிகரின் வாயிலிருந்து இந்த வசனங்கள் வந்திருந்தால் அவை இதே போன்ற வெற்றியைப் பெற்றிருக்குமா என்று சொல்ல முடியாது.

ராதா அந்த வசனங்களைப் பேசும்போது, கதாபாத்திரத்தின் குரல் அல்லாத வேறு ஒரு அலைவரிசையில் அது ரசிகனின் காதில் விழுகிறது. திராவிட இயக்கமும் பகுத்தறிவுக் கருத்துக்களும் அன்று பெற்றிருந்த அரசியல் செல்வாக்கும், அவருடன் ஒன்று கலந்திருந்த ராதாவின் ஆளுமையும் கலைத்திறனும்தான் சாண்டில்யன் எழுப்பும் கேள்வியை ரசிகனின் மனதில் எழும்ப விடாமல் செய்கின்றது.

ஒரு நடிகன் என்ற முறையில் பல விதமான பாத்திரங்களில் நடித்தார் எனினும், ராதா என்ற ஆளுமையின் தாக்கம் அவர் எற்று நடித்த எல்லாப் பாத்திரங்களின் மீதும் பதிந்திருந்தது. அதுதான் வில்லன் என்ற பாத்திரத்தையும் மீறி அந்தக் கருத்துக்களை ரசிகனிடம் கொண்டு சேர்த்தது.

•••

நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை நடத்திய கம்பராமாயண நாடகம் அன்று மூடநம்பிக்கையை மக்கள் மத்தியில் விதைத்து வருகையில் சென்னையில் 28.8.1954 அன்று உண்மையான ராமாயண நாடகம் நடத்த ராதா முன்வந்தார். நாடகத்திற்கு தடை விதித்தது அரசு. இதற்காகவே தனது சுற்றுப்பயணத்தை ரத்து செய்துவிட்டு பெரியார் சென்னை திரும்பினார். ராமாயண ஆராய்ச்சி பிரச்சாரத்தை மக்கள் மத்தியில் கொண்டு சென்றார். சட்டப்பூர்வமான போராட்டத்தை மேற்கொண்டதுடன், சட்டத்தை மீறி நாடகம் நடத்தி சிறை செல்லவும் தயார் என அறிவித்தார் ராதா. அரசு பணிந்தது.

ராதாவின் ராமாயண நாடகம் பெரியார் தலைமையில் 15.9.1954 அன்று சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் நடந்தது. வால்மீகி ராமாயணம் உள்ளிட்ட பல்வேறு ராமாயணங்களிலிருந்தும் தனது நாடகத்துக்கான ஆதாரங்களை மேற்கோள்களாக எழுதி அரங்கின் வாயிலில் வைத்து, எதிரிகளின் வாயை அடைத்தார் ராதா. பார்ப்பனர்களால் ராதாவின் நாடகத்தை கீமாயணம்



படிப்பகம்

www.padippakam.com

என்று தூற்ற முடிந்ததேயன்றி அவரை மறுக்க முடியவில்லை.

ஆறு வாரம் சென்னையில் நாடகம் நடத்திய பிறகு திருச்சி சென்றார் ராதா. ''என் ராமாயண நாடகம் இந்துக்களின் மனதை புண்படுத்துகிறது என்று கருது கிறவர்கள் கண்டிப்பாய் என் நாடகத் திற்கு வர வேண்டாம். அவர்கள் காசும் எனக்கு வேண்டாம். மீறி வந்து பார்த்தால், அவர்கள் மனம் புண் பட்டால் அதற்கு நான் ஜவாப்தாரி யல்ல என்பதைக் கண்டிப்பாய் அறிய வும்'' என்று விளம்பரத் தட்டியை வெளியே வைத்து விட்டு 18.12.54 அன்று திருச்சி ரத்தினவேல் தேவர் மன் றத்தில் தடையை மீறி நாடகம் நடத்த முனைந்த போது ராதா வீட்டிலேயே கைது செய்யப்பட்டார்.

பெரியாருக்கு கிடைத்த கல்ல டியும், சொல்லடியும் ராதாவிற்கும் கிடைத்தது. தலித் ஆலய நுழைவுப் போராட்டத்தை நடத்தியவர் என்று அறியப்படும் வைத்தியநாத அய்யர் தலைமையில் சில வீடணர்கள் மது ரையில் ராதாவை நாடகம் நடத்த விடாமல் தடுத்து இடையூறு செய்தனர். மக்கள் அவர்களை விரட்டியதோடல் லாமல் நாடகத்திற்கு தடைவிதித்து ராதாவைக் கைது செய்த காவல்துறை யினரையும் சூழ்ந்து கொண்டு விரட்டி யடித்தனர். காவல்துறையினர் தண்ணீர் பீய்ச்சி அடித்த பின்னரே கூட்டத்தைக் கலைக்க முடிந்தது.

கும்பகோணத்தில் நாடகம் நடத்தி யபோது ராமன் வேடத்திலேயே கைதானார் ராதா. 'ராமன் வேடத்தைக் கலையுங்கள்' எனக் கூறிய காவல் துறையினரிடம் 'வேடம் கலையாது, வில் கீழே விழாது, கலசம் கீழே வராது' எனக் கூறி, ஒரு கையில் கள்ளுக் கல யமும், மறுகையில் சிகரெட்டுமாக காவல் நிலையம் நோக்கி நடந்தார் 'ராதா'ராமன். வீதியையும் மேடை யாக்கும் வித்தை அவருக்குத் தெரிந்தி ருந்தது. கோவையில் பழமைவாதிகள் பிரச்சினை செய்தனர். ''உயிருக்குப் பயப்படாதவர்கள் மாத்திரம் நாடகம் பார்க்க வாருங்கள்'' என்று விளம்பரம் செய்தார் ராதா. மக்கள் முண்டியடித்து நாடகம் பார்க்க வந்தனர். போலீசு திகைத்து நின்றது.

வேலூர் முள்ளிப்பாளையம் தியேட்டரில் ராதாவின் நாடகம் நடந்த போது காங்கிரசு காலிகள் எதிர்ப்பு தெரிவித்து அடிதடியில் இறங்கினர். நாடகத்தையே கலகமாக நடத்திக் கொண்டிருந்த ராதா, தன் குழுவினரை நடிப்பில் மட்டுமின்றி, கம்புச்சண்டை யிலும் பயிற்றுவித்திருந்தார் என்பது அந்த மூடர்களுக்குத் தெரிந்திருக்க வில்லை. வேலூர் கடைத்தெரு வரை அவர்களை விரட்டி விரட்டி அடித் தார்கள் ராதாவின் கலைஞர்கள்.

காங்கிரசார் விட்டுச் சென்ற வேட்டி, சட்டை மற்றும் துணிகளை மறுநாள் தியேட்டர் நுழைவுவாயிலில் மாட்டி வைத்து 'வேலூர் பேடிகள் விட்டுச் சென்றவை' என எழுதி வைத்தார் ராதா. பல ஊர்களில் ராதாவின் நாடகத்திற்கு தடை விதிக்கப் பட்டது. தடையை மீறி நாடகம் நடத்தி யதற்காக ஆறு வழக்குகளும், 16 நாள் சிறைவாசமும் ராதாவிற்கு கிடைத்தது.

ராதாவின் ராமாயணத்திற்காக சென்னை மாகாண சட்டசபை ஒரு புதிய நாடகத்தடைச் சட்டத்தையே கொண்டு வந்தது. அதற்கான விவாதம் நடந்த போது சட்டமன்றத்திற்கும் சென்றார் ராதா. மன்ற உறுப்பினர்கள் எதிர்த்தனர். தனக்காகவே சட்டம் வரு வதால் அவ்விவாதத்தைத் தானும் அவசியம் பார்க்க வேண்டும் எனக் கோரினார் ராதா. ஒரு கலைஞனுக்காக தடைச்சட்டம் இயற்றிய 'பெருமை'யை அன்று பெற்றவர் சி.சுப்ரமணியம்.

''எங்களால் பழைய ராமாய ணத்தை பல நூற்றாண்டுகளாகத் தாங்கிக் கொள்ள முடிந்தது. அவர்களால் புதிய ராமாயணத்தை ஐந்து ஆண்டுகள் கூடத் தாங்க முடியாது'' என்று சனாதனவாதிகளைக் கேலி செய்தார் அண்ணா.

தனது ராமாயண நாடகத்திற்கு எதிர்ப்பு வலுத்ததால் ராதா இம்மி யளவும் அசரவில்லை. மாறாக, திரு வாரூர் தங்கராசுவை எழுத வைத்து, பத்து அவதாரங்களையும் தோலு ரிக்கும் 'தசாவதாரம்' நாடகத்தை அடுத் ததாக நடத்தத் தொடங்கினார்.

ராதாவின் இந்தப் போர்க்குணம் இளைஞர்களைக் கவர்ந்ததில் வியப் பில்லை. காளிமார்க் பரமசிவம் நாடார் எம்.ஆர். ராதா சோடா என்ற பெயரில் ஒரு சோடாவையே அறிமுகப்படுத் தினார் என்றால் அந்தக் காலகட்டத்தில் ராதா இளைஞர்களிடம் பெற்றிருந்த செல்வாக்கை நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

•••

**ரா**தா வசதியான வாழ்க்கை வாழ்ந் தவர்தான் எனினும் அதிகார வர்க் கத்தின் மீதும், பணக்காரர்கள், மிட்டா மிராசுகள் மீதும் ஒருவிதமான வெறுப் பையும் ஏளனப் பார்வையையும் அவர் கொண்டிருந்ததைக் காண முடி கிறது. அவரைப் போலவே பாய்ஸ் கம் பெனிகளில் படாதபாடு பட்டு, பின் னாளில் வசதி வாய்ப்புகளைப் பெற்ற எம்ஜியார், சிவாஜி போன்றவர்கள் ஆளும் வர்க்கத்தினருடன் சுமுகமாக ஐக்கியமாகிவிட்ட நிலையில், ராதாவின் ஆளுமை மாத்திரம் தனித்து நின்றது.

அதிகாரவர்க்கத்தின் தயவு தேவைப்பட்ட நாடக வாழ்க்கைக் காலத்திலேயே, இலவச பாஸில் நாடகம் பார்க்க வந்து, முன் வரிசை யிலும் அமர்ந்து கொண்டிருக்கும் வசதி படைத்தோரையும் அதிகார வர்க்கத்தி னரையும் நாடக வசனத்தின் மூல மாகவே நக்கல் செய்வார் ராதா.

ராதாவின் ரத்தக்கண்ணீர் நாட கத்தைப் பார்க்க வந்த ஏ.வி.மெய்யப்ப செட்டியாரும் ராதாவின் சொல்ல டிக்குத் தப்பவில்லை. ''அடியே காந்தா, சினிமாவுல முதலாளிங்க அதச் செய்றேன், இதச் செய்றேன்னு ஆசை காட்டுவாங்க. அதெல்லாம் நம்பி மோசம் போயிராத'' என்று காந்தாவை எச்சரிப்பார் ராதா. செட்டியாரை மட்டம் தட்டுவதற்காகவே சேர்க்கப் பட்ட வசனம் அது.

இம்பாலா காரில் தன்னுடைய மாட் டுப்பண்ணைக்கு வைக்கோலை ஏற்றி பண்ணையில் வேலை செய்யும் ஆட்க ளையும் ஏற்றி அனுப்புவார் ராதா. அந் தஸ்தின் சின்னமாக இந்தக் காரை வைத்து மினுக்கிக் கொண்டிருந்த

**பல விதமான பாத்திரங்களில் அவர் நடித்தார். எனினும் ராதா என்ற ஆளுமையின் தாக்கம் அவர் நடித்த எல்லாப் பாத்திரங்களின் மீதும் பதிந்திருந்தது. வில்லன் என்ற பாத்திரத்தையும் மீறி அவரது கருத்துக்களை ரசிகனிடம் கொண்டு சேர்த்தது அதுதான்.**



படிப்பகம்

www.padippakam.com

பெரிய மனிதர்கள் இதைக் கண்டு புழுங்கினர். சிவாஜி போன்ற நடிகர்கள் இதைக்கண்டு அதிர்ச்சியடைந்து கேட்டபோது ''சாயம் பூசிய தகரத்துக்கு இவ்வளவு மதிப்பு கொடுக்குறீங்களே'' என்று அவர்களைக் கேலி செய்திருக்கிறார் ராதா.

''நாட்டிலே அதிகமா உழைக்கிறவனுக்கு கொஞ்சமா கூலி கொடுக்கிறான். சினிமாவில கொஞ்சமா உழைக்கிறவனுக்கு அள்ளிக் கொடுக்கிறான். உலகத்தில் அசமத்துவம் ஒழிக்க முடியாதபடி சபிக்கப்பட்ட கொள்ளைப் பிரதேசம்னா அது சினிமா ஒண்ணுதான்'' என்று பொது மேடையிலேயே சாடியிருக்கிறார் ராதா. பகல் நேர சினிமாக் காட்சியை எதிர்த்திருக்கிறார். எம்ஜியார், சிவாஜி ரசிகர் மன்றங்கள் கொள்ளை நோயாகப் பரவிக் கொண்டிருந்த காலத்தில் 'கூத்தாடிக்கு மன்றம் வைக்காதே' என்று தாக்கியிருக்கிறார்.

அன்றைய திராவிடர் கழக மாநாடுகளில் ஊர்வலத்தின் முகப்பில் கருஞ்சட்டை அணிந்து குதிரையின் மீது ஏறி அணிவகுப்பார் ராதா. மாநாடுகளின் இறுதியில் சமூக நாடகங்களும் நடத்துவார். அவர் தி.க. உறுப்பினராக இல்லாத போதிலும், பிள்ளையார் சிலை உடைப்புப் போராட்டம், பிராமணாள் ஓட்டல் என்ற பெயரில் உள்ள பிராமணாள் என்ற வார்த்தையை அழிக்கும் போராட்டம், சட்ட எரிப்புப் போராட்டம் போன்றவற்றை ஆதரித்து பிரச்சாரம் செய்ததுடன் சிலவற்றில் கலந்தும் கொண்டார்.

''கலை கலைக்காகவேன்னு சில பேர் கரடி விடுவானுங்க. அதை நீங்க நம்பாதீங்க. அப்படியிருந்தா அது எப்பொவோ செத்துப் போயிருக்கும். கலை வாழ்க்கைக்காகத்தான். வாழ்க்கையும் கலையும் சேரும் போதுதான் அதுக்கு உயிரே வருது'', என்று தனது நாடகத்தில் சேர்க்கப்படும் அன்றாட நிகழ்வுகள் பற்றிய விமர்சனங்களைக் குறை சொன்னவர்களுக்குப் பதில் அளித்தார் ராதா.

''என்னைப் பொருத்த அளவில் நான் ஏற்றுக்கொண்ட சுயமரியாதைப் பகுத்தறிவுக் கொள்கைகளுக்காக என்றுமே இதைவிட அதிகத் தொல்லைகளை ஏற்க வேண்டியிருந்தாலும் சரி, அந்த விலைகள் எனது உயிராக இருந்தாலும் சரி, அதற்கு நான் எப்போதுமே தயார்'' என்று 1964-இல் வெளியான பகுத்தறிவு ஆண்டு மலரில் எழுதினார் ராதா.



அது மிகையல்ல, அவரையும் அவரது நாடகக் குழுவையும் அழிப்பதற்காக நடைபெற்ற தாக்குதல்கள் ஒன்றிரண்டல்ல. தனது நாடகக் குழுவையே ஆயுதக் குழுவாக்கி தாக்குதல்கள் அனைத்தையும் முறியடித்திருக்கிறார் ராதா. அடிதடிக்கும் சிறைக்கும் அவர் அஞ்சியதில்லை.

ஆனால், காமராசர் ஆட்சிக்காலத்தில் அவரது நாடகத்துக்கு அரசு தடை விதித்தபோது, ஆத்திரம் கொண்ட மக்களை அவரே முன்நின்று அமைதிப்படுத்திக் கலைந்து செல்ல சொல்லியிருக்கிறார். தன்னை பகத்சிங் கட்சி என்று சொல்லிக் கொண்டே நடைமுறையில் காங்கிரசு ஆட்சியை ஆதரித்திருக்கிறார். 'பச்சைத் தமிழர் ஆட்சியைப் பாதுகாப்பது' என்ற திராவிடர் கழகத்தின் நிலைப்பாட்டால் அவரது அரசியல் பார்வை வரம்பிடப்பட்டிருந்தது. அதே நேரத்தில் கம்யூனிஸ்டு கட்சி தடை செய்யப்பட்டிருந்த காலத்தில், போலீசால் தேடப்பட்ட ஜீவாவுக்கு, தி.க நண்பர்களின் எச்சரிக்கையையும் மீறிப் பாதுகாப்பும் கொடுத்திருக்கிறார்.

பார்ப்பனிய - நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஜனநாயக விழுமியங்கள், சோசலிச அபிமானம், ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் கலக மனோபாவம், அலங்காரமற்ற பெரியாரின் எளிய எள்ளல் மொழி - இவற்றுடன் ஒரு விதமான நிலப்பிரபுத்துவ தோரணையும் கலந்த ஆளுமைதான் ராதா.

நாடக-சினிமா வாழ்க்கைச் சூழல் மற்றும் அவை தந்த வசதிகளின் காரணமாக அவருடைய தனிப்பட்ட வாழ்வில் மைனர்த்தனங்களும் இருந்தன. திருமணத்திற்கு அப்பால் பெண்களுடன் அவர் கொண்டிருந்த தொடர்புகளும், அந்த உறவுகளில் அவர் எதிர்பார்த்த ஆணாதிக்க 'நேர்மை'யும், மீறினால் அவ்வீட்டு வாயிற்படியைக் கூட மிதிக்க மனமற்ற நிலப்பிரபுத்துவ கவுரவமும், திரையுலகில் இருந்த போதும் விருப்பமில்லாத பெண்களை நிர்ப்பந்திக்காத 'ஜனநாயக'ப் பண்பும், தனது குறைகளைக் கூச்சமின்றி வெளிப்படையாகப் பேசும் தன்மையும் ரத்தக்கண்ணீர் ராதாவிற்குள் கலந்திருக்கும் நிஜ ராதாவின் சாயலைக் காட்டுகின்றன.

'கூத்தாடிக்கு மன்றம் வைக்காதே' என்று முழக்கமிட்ட ராதாவின் பெயரில் மன்றம் திறக்கப்போவதாகப் பெரியார் கூறியபோது அதைக் கூச்சத்துடன் நிராகரித்தார் ராதா. 1963-இல் பெரியார் திடலில் ராதா மன்றம் என்ற அரங்கத்தைத் திறந்து வைத்துப் பேசியபோது ''மற்ற நடிகர்களுக்குப் புத்தி வரட்டும் என்பதற்காகத்தான் இம்மன்றத்தைத் திறந்து வைக்கிறேன்'' என்று பேசினாராம் பெரியார். அது இன்று நடிகர்களுக்கு மட்டுமா பொருந்துகிறது?

● வசந்தன்

**அவர் தி.க. உறுப்பினராக இல்லாத போதிலும், பிள்ளையார் சிலை உடைப்புப் போராட்டம், பிராமணாள் ஓட்டல் என்ற பெயரை அழிக்கும் போராட்டம், சட்ட எரிப்புப் போராட்டம் போன்றவற்றை ஆதரித்து பிரச்சாரம் செய்ததுடன் கலந்தும் கொண்டார்.**


படிப்பகம்

www.padippakam.com

# பணம் அலுக்கவில்லை பகட்டு அலுத்துவிட்டது

## குபேர வர்க்கத்தின் இரகசியச் செல்வம்

வரலாறு காணாத அளவில் உணவு முதலான அத்தியாவசியப் பொருட்களின் விலை கிடுகிடுவென உயர்ந்து கொண்டிருக்கிறது. கேமரூன், எகிப்து, இந்தோனேசியா, செனகல், ஹைதி உள்ளிட்ட பல நாடுகளில் உணவுக் கலகங்கள் வெடிக்கின்றன. உணவுப் பொருட்களை விலை கொடுத்து வாங்க முடியாமல், தங்களது பிள்ளைகளுக்குச் சோறிட வழியில்லாமல் மக்கள் பரிதவிக்கிறார்கள். ஹைதி நாட்டில், மக்கள் களி மண்ணால் ரொட்டிகள் செய்து தின்று பசியாறுகிறார்கள். இந்தியாவில் பணவீக்கம் இரண்டு இலக்கங்களை தொட்டிருக்கிறது. உலக வங்கியின் தலைவர் ராபர்ட் ஜோலிக், மேலும் 33 நாடுகளில் கலகங்களும் கொந்தளிப்புகளும் வெடிக்கும் எனக் கவலை தெரிவிக்கிறார்.

உலக முதலாளித்துவத்தின் உச்சாணிக் கொம்பில் நின்று கொண்டிருக்கும் கோமகன்களும், கோமகள்களும் கூட மாற்றுகளை தேடிக் கொண்டிருக்கிறார்கள். 380 மில்லியன் டாலர்கள் சொத்துடைய சியோன் ஜான் காம்ப்ஸ் எனும் அமெரிக்க கோடீசுவரர், தான் நகைகளாலும், பணத்தாலும் மதிப்பிடப்படுவதை விரும்பவில்லை, 'தான் அவற்றையெல்லாம் விட உயர்ந்தவன்' என்பது அவரது கருத்து. எனவே, தனது 29–வது பிறந்த நாள் விழாவுக்கு குஸ்ஸி, வெர்சாஸ், சியோன் ஜான் ஆகிய உலகத்தின் தலைசிறந்த ஆடை அலங்கார நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட ஆடைகளை மட்டுமே விருந்தினர்கள் அணிந்து வரவேண்டும் எனக் கட்டளையிட்டார் சியோன்.

பண்டங்களின் முத்திரைகளால் தனது விருந்தினர்களைக் கூட அடையாளம் காணும் கண்ணியவான்கள் பண்டங்களைக் கடந்து தமது சாரத்தைத் தேடும் ஞானத் தேடலில் மூழ்கத் தொடங்கி விட்டார்களாம். இதனைச் சுட்டிக் காட்டும் அமெரிக்க ஃபோர்ப்ஸ் பத்திரிக்கை, தற்போது உலகக் கோடீசுவரர்கள், பகட்டிலிருந்து விடுபட்டு, மேலும் மேலும் 'அடக்கமாக', அந்தரங்கமாக, தங்களது செல்வத்தை அனுபவிப்பதை நோக்கி நகர்ந்து வருவதாகக் குறிப்பிடுகிறது. இதனை 'இரகசியச் செல்வம்' எனப் பெயரிட்டு அழைக்கிறது, அப்பத்திரிக்கை. நுகர்பொருள் மோகத்திலிருந்து விடுபட்டு, பற்றற்ற நிலைக்கு முதலாளித்துவம் நகர்ந்து கொண்டிருக்கிறதோ?

ராபர்ட் ஜான்ஸ்டன் எனும் பிரிட்டிஷ் முதலாளி இதற்கு பதிலளிக்கிறார். 'நீங்கள் உயர்ந்த வட்டாரங்களில் பழகுபவராக இருந்தால், நீங்கள் உங்களது நண்பர்களோடு இருக்கிறீர்கள். அங்கே பகட்டாக வெளிக்காட்டிக் கொள்ளத் தேவையில்லை. இது உண்மையில் ரசனைக்குத் திரும்பப் போவதாகும். ரசிக்கத் தகுந்த பொருட்களை நீங்கள் கண்டறியத்தக்கவராக இருந்தால், நீங்கள் அதனைத்தான் அணிந்து கொள்வீர்கள். சுருக்கமாகச் சொன்னால், ரசனையின் மட்டம் உயர, உயர ஆரவாரம் அடங்கிவிடும்.'' ஆக, ரசனையின் உயர்வில் உலக முதலாளித்துவ மேட்டிக்குடியினரின் சொகுசும், நுகர்வும் மேலும் மேலும் நுட்பமானதாகவும், அந்தரங்கமானதாகவும் மாறி வருவதாக அமெரிக்கப் பத்திரிக்கைகள் வர்ணிக்கின்றன.

பெரும் பணக்காரர்களின் நுகர் பொருட்கள் துலக்கமாக கண்களை உறுத்துவதாக இருந்த நிலையிலிருந்து மாறி, 'ரசிக்கத்தக்க பொருட்களை கண்டறியத்தக்க' தகுதி படைத்தவர்களால் மட்டுமே கண்டுணரத் தக்கதாகி விட்டதாம். உதாரணமாக, வழக்கமான ரோலக்ஸ் கைக்கடிகாரங்களை விடவும், 5,07,000 அமெரிக்க டாலர் மதிப்புள்ள, சிக்கலான, நுட்பமான வடிவமைப்பு கொண்ட வாக்கெரான் கான்ஸ்டாண்டினின் கைக்கடிகாரங்களுக்குத்தான் இப்பொழுது மவுசு அதிகம். ரோலக்ஸ் கைக்கடிகாரம் பர்மா பஜாரில் விற்கும் பத்து ரூபாய் எலெக்ட்ரானிக் கடிகாரமல்ல. அதுவே, பல இலட்சங்கள் பெறுமானமுள்ளது. எனினும், அதை அணிவதில் புதுமை ஏதும் இல்லையாம்.

அதுபோல, வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்ப தயாரிக்கப்படும் 7000 டாலர் பெறுமானமுள்ள பிரத்தியேகக் கோட்டுகளின் ஓரத்தில் அலங்காரத்திற்கென வெறுமனே வைக்கப்படும் பட்டன், அது வழக்கமான ஆலைகளிலிருந்து தயாரிக்கப்படவில்லை என்பதைப் புலப்படுத்தும் சின்னமாகக் காட்சியளிக்கிறது.

காதலைச் சொல்லிடும் வழி, தங்கம், வைரம், வைடூரியம் எனப் பரிணாம வளர்ச்சியுற்று கடைசியில் இப்போது புத்தகம் என்று ஆகிவிட்டது. ஆச்சரியமாக இல்லை?

அர்ஜென்டினாவைச் சேர்ந்த நிறுவனமொன்று 'எனது சிறப்புப் புத்தகம்' என்றொரு நிறுவனத்தைத் துவங்கியுள்ளது. அங்கே 1,00,000 டாலர் கட்டினால் போதும். ஒருவரது வாழ்க்கையின் முக்கியமான தருணங்கள், அந்தரங்கக் கடிதங்கள், புகைப்படங்கள், குணாதிசயங்கள் என அனைத்து விவரங்களையும் திரட்டி, அவரது வாழ்க்கை வரலாறை அந்நிறுவனமே ஆள் வைத்து எழுதித் தந்து விடும். சம்பந்தப்பட்ட நபருக்கே நீங்கள் இதனைப் பரிசாகவும் அளிக்க முடியும்.

இப்படித்தான் சமீபத்தில் ஒரு நிதி மூலதன அதிபரின் மனைவி தன்

**எதையும் விலைக்கு வாங்க முடிந்த நிலையில் 'நான் யார், எனக்கு மட்டுமே உரியது எது?' என்று தேடுகிறது முதலாளி வர்க்கம். இறுதியில் தனக்கு மட்டுமேயான நுகர்பொருளில்தான் இந்த வர்க்கம் தனது சாரத்தைக் கண்டுபிடிக்கிறது.**


படிப்பகம்

www.padippakam.com

னுடைய கணவனின் வரலாற்றை ஆள் வைத்து எழுதி அவருடைய வாழ்க்கை வரலாற்றை அவருக்கே பிறந்தநாள் பரிசாக அளித்தாராம். கணவர் நெகிழ்ச்சியில் கண்கலங்கி விட்டாராம். 'இதனை விடவும் அந்தரங்கமான ஒன்றை நீங்கள் கற்பனை செய்ய முடியுமா? உண்மையான சொகுசு (luxury) என்பது இதுதான்' என்கிறார், நியூயார்க்கிலுள்ள மேட்டுக்குடி நுகர்பொருள் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த மில்டன் பெட்ராசா.

நட்சத்திர விடுதிகள் இந்த மேன்மக்களை இப்போது கவருவதில்லை. உறுப்பினர்களுக்கு மட்டுமே பிரத்தியேகமாகச் சேவை செய்யக் கூடிய உணவகங்கள், சுற்றுலா ஒருங்கிணைப்பாளர்கள், பொழுது போக்கு நிகழ்வுகளையே மேட்டுக்குடியினர் இப்பொழுது விரும்புகிறார்கள். வழக்கம் போல விலை உயர்ந்த கடைகளில் சென்று நகைகளை வாங்குவதை விடவும், ஆர்டரின் பேரில் பிரத்தியேகமாக நகைகளை வடிவமைக்கும் பாரிசின் ஜார் நிறுவனத்தில் அப்பாயிண்மெண்ட் பெறுவதற்கு அவர்கள் கடும் முயற்சி செய்கிறார்கள். அந்த அப்பாயின்ட்மெண்ட் எவ்வளவு பெரிய கோடீசுவரரானாலும், ஒரு நாளில் கிடைத்து விடக் கூடியதல்ல. இன்றோ, நாளையோ எப்போது வேண்டுமானாலும் கிடைக்கலாம்.

உல்லாச ஓய்வு இல்லங்களால் பெரும் பணக்காரர்களுக்கு பிரத்தியேகமாக அனுப்பப்படும் அழைப்பிதழ்களைப் பெற்று, அங்கே முன் கூட்டித் தெரிவிக்கப்படாத நிகழ்வுகளில் பங்கேற்க ஆசைப்படுகிறார்கள். அந்த நிகழ்வு ராக் பாடகர்களின் இசை நிகழ்ச்சியாகவோ, நோபல் அறிஞர்களின் உரையாகவோ இருக்கலாம். இந்த எதிர்பாராத தன்மையின் வியப்பும், கிளுகிளுப்பும் அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. இவ்வாறு அடக்கமாகவும், அந்தரங்கமாகவுமே தங்களது நேரத்தை, நுகர்வு நடவடிக்கையை மேட்டுக்குடியினர் கழிக்கிறார்கள்.

உலகின் மிகச்சிறந்த, அதிக விலை மதிப்புள்ள தயாரிப்புகள் எனச் சொல்லப்படும் பொருட்களை விடவும், அதிகம் பெயர் பெறாத, ஆனால், தங்களது ரசனை, விருப்பங்களுக்கேற்ப தயாரிக்கப்படும் பொருட்களைத்தான் மேட்டுக்குடி வாடிக்கையாளர்கள் பெரிதும் விரும்புகிறார்கள். இது ஒரு பெரிய ரசனைமாற்றம் என நுகர்வுத் தொழில் நிபுணர்கள் புல்லரிக்கிறார்கள். இதற்கான காரணத்தையும் அவர்களே எடுத்தியம்புகிறார்கள்.

உலகின் எந்த மூலையிலிருந்தும் எந்தப் பொருளை வேண்டுமானாலும் இணையத்தில் வாங்கி விட முடியும் என்ற நிலையில், குவியும் எல்லாப் பொருட்களையும் எல்லாப் பணக்காரர்களும் வாங்கி விட முடிகிற நிலையில்,



குபேர வர்க்கத்தின் ஆடைகளை வடிவமைக்கும் 'இக்ரம்' குறைந்த பட்ச விலை ரூ.8 லட்சம்

இங்கே தனித்துவமானது எது? 'நான் யார்', 'எனக்கு மட்டுமே உரியது எது?' என்ற தேடலில் தனக்கென பிரத்தியேகமானதைத் தயாரிக்கச் செய்து வாங்குவதில்தான் தனது ரசனையும், சொகுசும் உயர்ந்த தளத்திற்குச் செல்வதாகவும், தம்மை வெளிப்படுத்தி கொள்வதாகவும் மேட்டுக்குடியினர் கருத துவங்கியுள்ளார்களாம்.

வழக்கமான நுகர்பொருட்களில் புதிய தலைமுறையைச் சேர்ந்த மேட்டுக்குடி நுகர்வோர்கள் அலுப்படைந்து விட்டதாக ஹெச்.எஸ்.பி.சி சேவை அதிகாரி ஆண்டோன் பெல்ஜே கூறுகிறார். ஆனால், சொகுசுப் பொருட்களின் நுகர்வு குறைந்துபோய் விடவில்லை. மாறாக கோடீசுவர புதிய தலைமுறை நிறைய எதிர்பார்க்கிறதாம். மேலும், தமது ரசனைக்கும், விருப்பத்துக்கும் ஏற்ற பொருளை என்ன விலை கொடுத்தும் வாங்கத் தயாராகவும் இருக்கிறது. எனவே, தமது முந்தைய தலைமுறை மேட்டுக்குடி நுகர்வோர்களை விடவும் இவர்கள் ஆண்டுக்கு 16,000 டாலர் அதிகமாகச் செலவிடுவதாகவும் குறிப்பிடுகிறார்.

ஆடை அலங்கார பேஷன் ஷோக்கள் உயர்ந்த ரசனைக்குரிய பொருட்களையும், தள்ளுபடி விலைப் பொருட்களையும் ஒரு சேரக் காட்டுவதால் அவை தமது உயர்குடித் தன்மையை இழக்கின்றனவாம். உயர் ரசனைப் பொருட்களை ஊடகங்கள் உலகத்துக்கே காட்டி விடுவதால் அவை அந்தரங்கத் தன்மையையும் இழந்து விடுகின்றனவாம். எனவே, மேட்டுக்குடியினர் தற்பொழுது தமக்கான பிரத்தியேகமான பேஷன் ஷோக்களைத் தமது வீடுகளிலேயே நடத்திக் கொள்ளத் தொடங்கி விட்டனர்.

இலண்டனைச் சேர்ந்த சேவை நிறுவனமொன்று, உறுப்பினர்கள் மட்டுமே தங்கக் கூடிய பிரத்தியேக ஹோட்டல்களைக் கட்டி வருகிறது. இந்த ஹோட்டல்களில் வாடிக்கையாளர்கள் வரவேற்பறைக்கு சென்று தாங்கள் வந்திருப்பதாகக் கூட தெரிவிக்கத் தேவையில்லை. வாசலில் உள்ள தானியங்கிக் கருவியில் ஒரு கார்டை காட்டினாலே போதும், அவர்களைத் தனிப்பட்ட முறையில் வரவேற்க பணியாட்கள் வந்து விடுவார்கள். இணையத் தளங்களிலும் அழைப்பின் பேரில் மட்டுமே உறுப்பினராகக் கூடிய, மேட்டுக்குடியினர் மட்டுமே உறுப்பினராகத்தக்க தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மில்டன் பெட்ராசா இப்போக்கினைச் சுருக்கமாகக் குறிப்பிடுகிறார். 'வசதி படைத்தவர்கள் இப்போது வலை உலகத்திலும் சரி, நிஜ உலகத்திலும் சரி, தமக்கான தனிப்பட்ட, அந்தரங்கமான குழுக்களிலேயே வாழ விரும்புகிறார்கள். மேட்டுக்குடியினர் தமது அந்தரங்கமாக 'இனத்தவரோடு' மட்டுமே இருக்க விரும்புகிறார்கள். எனவே, அவர்களுக்கு சேவை செய்வதற்காகவே உயர்வர்க்க ரசனை, பண்புகளை அறிந்த பணியாளர்கள்



படிப்பகம்

**தனது சாரத்தின் தேடலில்
உலக முதலாளிவர்க்கம் ஒரு போதும்
கண்டறிய முடியாத பேருண்மை இதுதான்:
அது சமூகத்தை ஆள்வதற்கு மட்டுமல்ல,
உற்பத்திக்கும் சமூகத்திற்கும் கூட
தேவையற்றதொரு வர்க்கமாகிவிட்டது.
அழுகும் வர்க்கமாகி விட்டது.**

குடிசைத்தொழில் பண்டங்களைப் போல தயாரிக்கப்படுகின்றனர்.

வித்தியாசமானதை விரும்பும் உயர்குடி வாடிக்கையாளர்களின் மன மறிந்து சேவை செய்யும் விதத்தில் தமது உத்திகளை நிறுவனங்கள் வகுக் கின்றன. இவ்வாழ்க்கை முறையில் நன்கு பழகிய மேட்டுக்குடியினரே புதிய நுகர்பொருட்களை சந்தையில் அறிமுகமும் செய்கின்றனர். ஆடை, அலங்கார நிறுவனங்கள், சேவை நிறு வனங்களையும் துவக்குகின்றனர்.

மேன்மக்களே மேன்மக்களுக்கு சேவை செய்யும் இப்போக்கு வளர்ந்து கொண்டேதான் செல்லும் எனத் தெரி விக்கின்றனர். எனவே, அந்தரங் கத்தைத் தேடும் முதலாளிகளின் தேவைக்கேற்ப, அவர்களது மனதை 'டச்' பண்ணுவதாக சேவையும் மாறி வருகிறது. கண்டங்களைத் தாண்டி ஓய்வு இல்லங்களைத் தேடிப் பறக்கும் மேட்டுக்குடி வாடிக்கையாளர்கள் பிளாஸ்மா டிவிக்களையோ, சொகுசு அறைகளையோ பெரிதாக நினைப்ப தில்லை.

மாறாக, உல்லாச ஓய்வு இல்லங்க ளிலிருந்து திரும்பிச் செல்கையில் அவர்களது கார்களில் உள்ளூர் மலர்களை வைத்து வழியனுப்புவது, பில்லுடன் அவர்களது விருப்பத்திற்கு கந்த உணவைத் தயார் செய்யும் முறையையும் இணைத்துத் தருவது – இது போன்ற சின்னச் சின்ன விசயங் கள்தான் அவர்களது இதயங்களைக் கொள்ளை கொண்டு விடுகிறதாம்.

ஸாவின் எனும் மேட்டுக்குடி ஓட்டல் நிறுவன முதலாளி, ''இது உடைமை உணர்ச்சிக்கு மாறாக இருத் தலின் உணர்ச்சியாகும்'' எனத் தெரி விக்கிறார். இவ்வாறு பஞ்சு மெத் தையில் புரண்டவாறு இருத்தலை தேடி யலைந்து, யதார்த்த உலகத்தில் கிடைக் காததாலோ என்னவோ, 'இரண்டாம் வாழ்க்கை' எனும் இணையதள விளை யாட்டில் மேட்டுக்குடியினர் இறங்கு கிறார்கள்.

செயற்கையான உலகமான இந்த விளையாட்டில், அந்த உலகத்திற்கென தனி நாணயம் உள்ளது. அங்கே நகைகள், ஆடைகள், அணிகலன்கள், அசையாச் சொத்துக்கள் என எல்லாப் பொருட்களையும் வாங்கவோ, விற்கவோ முடியும். அந்த இணையத் தளத்தில் அவர்களது ரசனைக்கேற்ற பொருட்களை நிறுவனங்கள் விளம்ப ரப் படுத்துகின்றன; காட்சிக்கு வைக் கின்றன. இந்த செயற்கை நுகர்வு உல கத்தில் அவர்களது இருத்தலின் தேடல் தொடர்கிறது.

நடுத்தர வர்க்கத்தை 'உட்கார்– வாயை மூடு, வாங்கு' (sit back, shut up and shop) எனக் கட்டளையிடுகிறது நுகர்வுத் தொழில். விளம்பரங்களின் வழியாக நுகர்பொருட்களால் கட்ட மைக்கப்பட்ட ஆளுமைகளை முன் வைத்து செயற்கைத் தேவைகளை உரு வாக்குகிறது. ஆனால், சொத்து சேரச் சேர நுகர்பொருளை மென்மேலும் சொந்தமாக்கிக் கொள்வது தனது ஆளுமையை அடையாளம் காண்பது என்ற நிலை அவர்களுக்கு அலுப்பூட் டுகிறது. எனவே, தனக்கான பிரத்தியே கமான நுகர்பொருளைத் தேடும் ரசனையை நோக்கித் தாவுகிறது கோடீ சுவர வர்க்கம்.

பொருட்களின் நுகர்வில் நிகழ்ந்துள்ள இந்த ரசனை மாற்றம், அந்தரங்கமானதை தேடும் ஆன்மீகத் தேடல், முதலாளிகளின் மூளையில் தானாகவே உதித்து விடவில்லை. இது சியோன் ஜானைப் போன்றவர்களின் சாரத்தின் தேடலில் உருவான சிந் தனைப் பாய்ச்சலல்ல. மாறாக, கடந்த சில ஆண்டுகளில் உலக முதலாளித்து வத்தின் செல்வம் மென்மேலும் மிகப் பெரிய அளவில் திரண்டதன் விளைவும், வெளிப்பாடாகவுமே இந்த ரசனை மாற்றத்தின் ரசவாதம் நிகழ்ந்தி ருக்கிறது.

2006 மெரில் லிஞ்ச் உலக வளங்கள் அறிக்கையின்படி, தற் பொழுது 8.7 மில்லியன் கோடீசுவ ரர்கள் உள்ளனர். பத்தாண்டுகளுக்கு முன்பு 16.6 டிரில்லியன் டாலர்களை கொண்டிருந்த உலக முதலாளித்து வத்தின் சொத்து மதிப்பு, தற்பொழுது 33.3 டிரில்லியன் டாலர்களாக அதிக ரித்திருக்கிறது.

உற்பத்தியை நிர்வாக மேலாண்மை சம்பளச் சிப்பந்திகள் கவ னித்துக் கொள்கிறார்கள். தொழில் நுட்பப் புரட்சி உலகின் எந்த மூலையி லிருந்தும் லேப்டாப்பில் வேலைகளை முடித்து விடுகிறது. நிதி மூலதனத்தின் பகாசுர வளர்ச்சியும், ஊக வாணி கத்தின் கொள்ளை லாபமும், தொழிலா ளிகளின் 'தொல்லையின்றி' சம்பா திக்கும் கோடீசுவரர்களை உருவாக்கி யிருக்கிறது.

ஏங்கெல்ஸ் தமது நூலொன்றில் குறிப்பிடுவதைப் போல, இலாபத்தைச் சுருட்டிக் கொள்வதும், ஊக வாணிப சந்தையில் சூதாடுவதையும் தவிர முத லாளிகளுக்கு சமூக வேலை எதுவும்



நிக்கி பீச், ஸ்பெயின்:
இந்த கடற்கரையில் குபேரன்களுக்கு மட்டுமே அனுமதி

www.padippakam.com

இல்லாமல் அற்று போய் விட்டது. மற்றொருபுறம், சேவை நிறுவனங்கள், ஆடை அலங்கார நிறுவனங்கள், அழகு சாதனங்கள், சொகுசு, உல்லாசக் கேளிக்கைகளை ஒருங்கிணைக்கும் நிறுவனங்கள் ஆண்டுக்கு 8 சதவீதம் வளர்ந்து வருகின்றன. இணையம் மூலமாகவும், விளம்பரங்கள் மூலமாகவும் பொருட்களும், சேவைகளும் குவிகின்றன.

விளைவு, அளவின்றி பண்டங்களை நுகர்ந்து சலித்த கோமான்களுக்கு, அபரிமிதம் அலுப்பைத் தருகிறது. சலித்துப் போன மனம் தனது சாரத்தைத் தேடுகிறது. பண்டங்களின் முத்திரைகளைத் தாண்டிச் செல்வதற்கான ஆவல் ஊற்றெடுக்கிறது. உலக மக்களின் வயிற்றிலடித்து உருவான சொத்து உல்லாசத்தில் கழிந்தும் கூட போதாமை உருவாகிறது. இன்னும் இன்னும் என சந்தையின் விரிவகற்சியைப் போல நுகர்தலும் புத்துணர்வைத் தேடுகிறது.

எதையும் விலை கொடுத்து வாங்க முடிந்த நிலையில், மென்மேலும் சொகுசையும், தனித்தன்மையையும், இரசனையையும் தேடுவதன் மூலம் 'தனது சாரத்தை' கண்டறிய முயல்கிறது. இறுதியில் தனக்கு மட்டுமேயான, மிகவும் பிரத்தியேகமான நுகர்பொருளில்தான் இந்த வர்க்கம் தனது சாரத்தைக் கண்டுபிடிக்க முடிகிறது.

முதலாளி இப்போது மன்னனாகி விட்டான். இந்த ஆண்டைகளின் சலிப்புணர்வை நீக்கி, புதுமை உணர்வைத் தர அடிமைச்சேவை நிறுவனங்கள் தமது
ளையை கசக்குகின்றன. இந்த
ரத் தேடலின் துணை
ளைவாக, நிலப்பிரபுக்களைப்
ாலவே வள்ளல்களாக அவதாரமெ
பதும், ஆளுக்கொரு அறக்
ளை துவங்குவதும் நிகழ்கின்றது.
கு கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு
எனப் பெயரும் சூட்டப்படு
ு.

காளத்தின் ஒரு புறத்தில் சிங்
விவசாயிகளைத் தமது நிலங்க
ளும், வாழ்க்கையிலிருந்தும்
ந்து விட்டு, ஆயிரக்க
நிலங்களை அடிமாட்டு
வளைத்துப் போடும் டாடா,
புறத்தில் புற்றுநோய் மருத்துவமனை கட்டுகிறார். பில்கேட்ஸ் கோடிக்கணக்கில் எய்ட்ஸ் ஒழிப்புக்கு நன்கொடை வழங்குகிறார். கொள்ளையடித்தது எவ்வளவு, கொடுத்தது எவ்வளவு எனக் கணக்கு பார்க்க முடியுமா? கணக்கு பார்த்தால் முதலாளிகள் புண்பட்டு விட மாட்டார்களா?

தொழிலாளிகளின் சட்டப்பூர்வ உரிமைகளைக் கடுகளவும் மதிக்காத முதலாளிகளை நோக்கி சுண்டு விரலைக் கூட நீட்டாத அரசு, அவர்கள் பொற்காசுகளை வீசியெறிவதற்காகக் கைகூப்பிக் கெஞ்சுகிறது. சாரத் தேடலில் சிக்கிய சீமான்கள், மக்களிடையே நிறுவனத்தை பிரபலமாக்கவும், வரி ஏய்ப்புகளுக்காகவும் சில இலட்சங்களை வீசியெறிகின்றனர். உடனடியாக அதனை உச்சிமோந்து கொண்டாடி, புகழ் மாலைகள் சொரியப்படுகின்றன.



ஆப்பிரிக்க வனவிலங்கு பூங்காவில் குபேர விலங்குகளுக்கான திறந்த வெளி உணவகம்

ஆயினும், ஊதிப் பெருக்கக்கப்படும் கார்ப்பரேட் சமூகப் பொறுப்புணர்வின் மூலம் 2007 நிதியாண்டில், இந்தியாவிலுள்ள 500 பெரிய நிறுவனங்களின் கல்லாப் பெட்டியிலிருந்து கசிந்த தொகை வெறும் 2000 கோடி மட்டுமே. இது வருந்தத்தக்கது என ஆளும் வர்க்கமும், தன்னார்வக் குழுக்களும் அலுத்துக் கொள்கின்றன.

தனது சாரத்தின் தேடலில் முதலாளித்துவ வர்க்கம் ஒருபோதும் கண்டறிய முடியாத பேருண்மை இதுதான்; அது அழுகும் வர்க்கமாகி விட்டது. சமூகத்தை ஆள்வதற்கு மட்டுமல்ல, உற்பத்திக்கும், சமூகத்திற்கும் தேவையற்றதொரு வர்க்கமாகி விட்டது.

விதவிதமாக நுகர்வதையே தனது வாழ்க்கை முறையாகக் கொண்டு, சமூகத்தின் செல்வங்களை ஊதாரித்தனமாகச் செலவிடுவதையே தனது அன்றாட நடவடிக்கையாகக் கொண்டு வாழும், இவ்வர்க்கத்தின் ரசனை மாற்றமான அந்தரங்கத் தேடல் உயர்ந்த தளத்தை நோக்கி செல்வதையல்ல, மாறாக பின்னோக்கி மகாராஜாக்களுக்கும், மகாராணிகளுக்குமான அந்தப்புர காலத்தை நோக்கி செல்வதையே காட்டுகிறது.

தனக்கான அந்தரங்கத்தையும், தனித்துவத்தையும் வெளிக்காட்டும் பொருட்களாக தான் கருதும் ஊதாரிப் பொருட்களின் மூலம் தனது இருத்தலின் அர்த்தத்தையும், நியாயத்தையும் தனக்கே வழங்கி திருப்தியுற முயல்கிறது.

இவ்வாறு செல்வம் திரளும் ஒரு முனையில் இருத்தலின் தேடல், புதிய புதிய நுகர்பொருட்களையும், நுகர்வு முறைகளையும் உருவாக்கி ரசிப்பதாகவே இருக்கிறது. மற்றொரு முனையிலும் கூட இருத்தலின் தேடல் புதிய புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கத் தான் செய்கிறது ஹைதி நாட்டின் களிமண் ரொட்டிகளைப் போல!

மக்சீம் கார்க்கியின் 'தாய்' நாவலில், உழைத்து உழைத்து ஓடாகிப் போன, சாவின் விளிம்பில் நிற்கும் சவேலி என்னும் ஆலைத் தொழிலாளி, தனது முதலாளி குறித்து, குலை நடுக்கும் இருமலோடு, தாயிடம் கூறுவான். 'அவர்கள் ஏன் மக்களை வேலையால் சாகடிக்கிறார்கள்? ஒரு மனிதனின் வாழ்நாளை அவர்கள் ஏன் கொள்ளையிட்டு பறிக்கிறார்கள்? என்னை வேலையைக் கொடுத்தே கொன்றுவிட்ட அந்த மனிதன் என்னுடைய வாழ்க்கையின் ரத்தத்தைக் கொண்டு தன் வைப்பாட்டியைக் களிப்பூட்டினான். என்னுடைய ரத்தத்தைக் கொண்டு அவன் அவளுக்கு தங்கத்தாலான மூத்திரச் சட்டியை வாங்கிக் கொடுத்தான்! சவேலியின் ரத்தம் இன்னமும் கொதித்துக் கொண்டுதானிருக்கிறது.

• வானன்



படிப்பகம்

www.padippakam.com



# சத்யபாமா பல்கலைக்கழகம்: பாறையில் முளைத்த விதை, ஒரு தொழிற்சங்கம் உருவான கதை

ஜேப்பியாரா? ஆகா உலக உத்தமர் என்று சொல்ல அவர் வீட்டிலேயே ஆள் கிடையாது. உலகறிந்த சாராய ரவுடி, முன்னாள் போலீசு ஏட்டு, முன்னாள் எம்.ஜி.ஆர். அடியாள், இன்னாள் சுயநிதிப் பொறியியல் கல்லூரி தாளாளர் சங்கத்தின் நுனியாள் (தலைவர்) என்று ஏகப்பட்ட முன்னாள், இந்நாள் பேர்வழி. சத்யபாமா, ஜேப்பியார், செயிண்ட் மேரிஸ், செயிண்ட் ஜோசப், SRR, மாமல்லன் போன்ற பொறியியல் கல்லூரிகள், ஜேப்பியார் ஸ்கூல், ஜேப்பியார் பால், ஜேப்பியார் சிமெண்ட், ஜேப்பியார் கான்கிரீட், ஜேப்பியார் ஸ்ட்ராங்க் ஸ்டீல், ஜேப்பியார் ஸ்வீட், ஜேப்பியார் குடிநீர், ஜேப்பியார் டிராவல்ஸ், மாட்டுப்பண்ணை, கல்யாண மண்டபம், முட்டத்தில் உருவாகும் மீன்பிடித் துறைமுகம் இப்படி பலான, பலான நிறுவனங்கள்.

இப்படி ஈரேழு சாராய லோகங்களையும் கட்டிக்காத்து, அண்ட சராசரக் கல்லூரிகளையும் கட்டி முடித்து ஆட்டிப்படைக்கும் "மாவீரன்" ஜேப்பியாருக்கு "என்னடா இது மதுரைக்கு வந்த சோதனை?" என்பது போல ஒரு சோதனை! மாவீரன், மகா சன்னிதானம் என்று ஊதிப் பெருக்கப்பட்ட இந்தப் பலூனைத் தற்போது புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி என்ற ஒரு ஊசியினுடைய முனை புஸ்ஸாக்கி விட்டது.

கடினமான பணிச்சூழல், எந்த உரிமையும் கிடையாது. ஜேப்பியார் கார் வருவதைப் பார்த்தவுடனே ஓடி ஒளிய வேண்டும், எதிரே வர நேரிடின் ஜேப்பியார் இறங்கி அடிப்பார். இந்த லட்சணத்தில் அப்பா என்றுதான் அவரை அழைக்க வேண்டுமாம். ஆனால் அப்பா வாயைத் திறந்தாலே 'வாடா! போடா! என்ன மயிரு?' என்ற வண்டமிழ்தான் வண்டை வண்டையாக வரும். இந்தக் காலத்தில் பெத்த அப்பனே இப்படிப் பேசினால், அடுத்த நொடி பாடை கட்ட வேண்டியதுதான்.

ஆனால் அனைத்தையும் தாங்கிக் கொண்டு ஜேப்பியாரின் சீமாட்டி கூறும் புளுக்கை வேலையையும், மரியாதைக் குறைவான வார்த்தைகளையும் வாங்கிக்கொண்டு வேலை செய்தாலும் பணி நிரந்தரமோ, ஊதிய உயர்வோ, ஈ.எஸ்.ஐ., பி.எஃப். பிடித்ததற்கான ஆதாரமாகச் சம்பள ரசீதோ கிடையாது. இதுதான் ஜேப்பியார் என்ற போக்கிரி வள்ளலின் சாம்ராஜ்யம்.

"யாரும் எதற்கும் கேள்வியே கேட்க முடியாது என்ற சூழலைத் தகர்த்து, எங்களையும் மனிதனாக மதித்துப் பேசவிடு! என்று நாங்கள் பேசத் துவங்கியதுதான் சங்கத்தின் முதல் வெற்றி" என்கிறார் பு.ஜ.தொ. ஓட்டுநர், மற்றும் டெக்னீசியன்கள் சங்கம், (சத்யபாமா பொறியியல் கல்லூரியின்) செயலாளர் வெற்றிவேல் செழியன்.

சங்கம் உருவானவுடனேயே அதுவரை 'தட்டிக்கேட்க ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்தான்' என்பது போலக் குதித்த 'மாவீரன்'

> போராடிய தொழிலாளர்கள் தமது வியர்வையால் ஜேப்பியாரின் வாயையும் கழுவிச் சுத்தப்படுத்தி இருக்கிறார்கள். 'வாடா, போடா' என்ற ஜேப்பியாரின் வாயை, 'வாங்க சார்' எனுமளவுக்குச் சுத்தப்படுத்தியிருப்பது துப்புறவுத் தொழிலாளர்களின் முதல் வெற்றி.

நாயகன் திரைப்படத்தில் வருவது போல வழியில் போன தொழிலாளியை நிறுத்தி "நான் நல்லவனா? கெட்டவனா?" எனப் புலம்பியிருக்கிறார். சங்கத்தில் இணைந்திருக்கும் ஓட்டுநர் ரமேஷ் விவரமாகச் சொல்கிறார்.

"ஒருநாள் நான் ஹாஸ்டலில் நின்றிருந்தபோது காரில் வேகமாக வந்த ஜேப்பியார் என்னருகே நிறுத்தி, கண்ணாடியை இறக்கி, ரமேசு நீ சங்கத்துல இருக்கியான்னு கேட்டார். நான் சட்டென்று ஆமாம்னேன். பயப்படாமல் சொன்னதைப் பார்த்து, வந்த கோபத்தையும் அடக்கிக் கொண்டு, ஏன் சங்கத்துல இருக்க? என்றார். ஏதாவது நல்லது நடக்கும்னுதான் இருக்கேன் என்றேன். ஏன் நான் நல்லது செய்யலையா? என்று திரும்பவும் கேட்டார்."

நான் "அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர், பிள்ளைகளுக்கு ஸ்கூல் பீஸ், கேண்டீன் வசதி இதெல்லாம் வேணு"னேன்! நீ சங்கத்தை விட்டு வா எல்லா தர்றேன் என்றார். சங்கத்தை விட்டு மாட்டேன் என்று நான் உறுதி சொல்லவும் முகம் சிவந்து சர்ருன்னு போயிட்டாரு! இ னவா இருந்தா ஒரு வார்த்தை யாது. இப்ப அவுரு பேசா டாரு" என்று 'மாவீரனை' போட்ட கதையை விவரி


"முன்னாடி அவ நாங்க ஓடி ஒளிவோ ஆரம்பிச்ச பிறகு அவுரு ரூட்ட மாத் பெரிய மாற்றம். எங்களை மனு என்று பெரு ஓட்டுநர் உத்

பாசிஸ் பிடித்த மு ஆட்ட என்ற கம்த தொ



படிப்பகம்

www.padippakam.com



லட்சக் கணக்கில் செலவு செய்து சினிமா நடிகர்களுக்கு டாக்டர் பட்டம் அளிக்கும் ஜேப்பியார், சங்கம் அமைத்த தொழிலாளிகளுக்கு கேண்டீனை மறுத்துவிட்டார்

இரண்டு தட்டுத் தட்டி விழ வைப்பது வரலாறு. பதினெட்டுப் பட்டிக்குத் தீர்ப்புச் சொல்லும் நாட்டாமைக்கு கவட்டைக்குள் நுழைந்துவிட்ட சித்தெறும்பு போட்ட போடில் வேட்டியை அவிழ்த்துப் போட்டு விட்டு ஓடிய கதைதான் ''மாவீரரின்'' கதையும். ஆனால் இதற்காகத் தொழிலாளி வர்க்கம் செயல்படுத்தும் உழைப்போ ஒரு காவியத்தன்மை வாய்ந்தது.

### ஜனநாயகம் உள்ளிட்ட நற்பண்புகளை முதலாளிக்கு கற்றுக் கொடுக்கும் தொழிலாளிகள்


காவியம் என்றாலே கதாநாயகன், வில்லன், துரோகிகள் இருப்பது போல சங்கம் உருவான கதையிலும் இவர்கள் உண்டு. தொழிலாளர்களுக்கான பிரச்சினைகளில் முதலில் கேண்டீனில் வழங்கப்பட்ட தரமற்ற உணவுக்காக முன்னின்று போராடி, சங்கத்தைத் துவக்கியதால் ஓட்டுநராகப் பணியாற்றிய வெற்றிவேல் செழியனை பணி நீக்கம் செய்து, ஒரு வகையில் முழுநேர சங்கப் பொதுச்செயலாளராகப் பதவி உயர்வு. வழங்கியது, சத்யபாமா நிர்வாகம்.

''ஆசிரியர்கள், மாணவர்கள், ஓட்டுநர்கள், கிளீனர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள் என அனைவருக்கும் ஒரே விதமாகவும், நன்றாகவும் இருந்த கேண்டீனை புது டைரக்டராக வந்த ஜேப்பியாரின் மருமகன் மரிய ஜான்சன் தொழிலாளர்களுக்குத் தனியாகப் பிரித்து, தனிக் கேண்டீனை உருவாக்கி ஆசிரியர்-மாணவர் கேண்டீனின் மிச்ச மீதிகளைத் தண்ணீர் ஊற்றித் தரக்குறைவாக அங்கே தருவதைப் பலமுறை சுட்டிக்காட்டியும், ஒரு சம்பவத்தில் (விபத்தில்) ஓட்டுநர் ஒருவரை நாள் முழுக்க போலீஸ் ஸ்டேசனில் வைத்திருக்க, நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருந்ததையும் நான் சில தொழிலாளர்களுடன் சேர்ந்து போய் டைரக்டரிடமே நியாயம் கேட்கையில்...

''ஏன் கூட்டம்? பாதிக்கப்பட்டவன் தனித்தனியா வா!'' என்று அதிகார தோரணையில் பேசியதுடன் ''தொழிலாளி மட்டும் ஒழுங்கா!'' என்றார். ''நாங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்கிறோம். நீங்கள் குறைகளை நிவர்த்தி செய்து தாருங்கள்'' என்று பேசிய பிறகும், எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை; நிலைமையில் பெரிய முன்னேற்றமும் இல்லை. இனி சங்கமாகச் சேராமல் எந்தப் பிரச்சினையும் தீர வழியில்லை என்பதை உணர்ந்தோம்.'' என்று சங்கம் அரும்பிய சூழலை விவரித்தார் வெற்றிவேல் செழியன்.

''தொடக்கத்தில் தொழிலாளி வர்க்கத்தின் முட்டாள்தனத்தைப் பார்த்து முதலாளித்துவம் எரிச்சலாகிறது; பின்பு அவர்கள் அறிவாளிகளாக மாறும்போது முதலாளித்துவம் அச்சப்படுகிறது'' என்றார் காரல் மார்க்ஸ். அதேபோல விழிப்படைந்த தொழிலாளிகளைப் பார்த்து பயந்துபோன நிர்வாகம் முரட்டு நடவடிக்கைகளில் இறங்கியது. அப்போதைய நிலைமையை வெற்றிவேல் செழியன் விவரித்தார்.

''கல்லூரிகளில் சி.ஐ.டி.யு. சங்கம் இல்லை; ஜேப்பியார் கான்கிரீட் நிறுவனத்தில் இருந்த சி.ஐ.டி.யு. மூலம் சத்யபாமாவிலும் ஒரு 40 பேர் இரகசியமாக அதில் வெளியே தெரியாதபடி இருந்தனர்; என்னுடன் பத்து பேர் பு.ஜ.தொ.மு.வில் இணைந்தோம். இதை நிர்வாகம் மோப்பம் பிடித்து 'இதுக்கெல்லாம் யார் காரணம்? யார் லீட் பண்றது?' என்று கேட்க, டிரான்ஸ்போர்ட் இன்ஜார்ஜ் சதீஸ் என்பவர் ஜேப்பியாரிடம் வெற்றிவேல் செழியன்தான் என்று சொல்லவும், உடனடியாக என்னை வேலைநீக்கம் செய்தது நிர்வாகம்.



ஜேப்பியாரால் பணி நீக்கம் செய்யப்பட்ட தோழர் வெற்றிவேல் செழியன்

தொழிலாளர் ஆணையரிடம் பேச்சுவார்த்தைக்கு வந்தபோது கூட ஆணையரிடமே வேலைநீக்கத்திற்கு காரணம் சொல்லி தங்களுக்குப் பழக்கமில்லை என்று நிர்வாகத்தரப்பு தெனாவெட்டாகப் பேசியது'' என்றவர், ''இதைவிடக் கொடுமை சஸ்பெண்ட் ஆனவுடன் முதலில் பிற தொழிலாளிகளின் வற்புறுத்தலால் சி.ஐ.டி.யு.வில் ஒரு பொறுப்பானவரிடம் ஆலோசனை கேட்கப் போனோம்.

அவர் எடுத்த எடுப்பிலேயே ''முதலில் காலேஜில் சங்கம் ஆரம்பிக்க முடியாது; உங்களுக்கு யார் கைடு பண்ணது. அதுவும் ஜேப்பியாரை எதிர்த்து ஒண்ணுமே செய்ய முடியாது; அவுரு நெனச்சா உங்க எல்லாரையும் வேலையை விட்டு எடுத்துட்டு பஸ்ஸை காண்ட்ராக்ட்ல வுட்டுருவாரு! அவரு பெரிய ஆளுய்யா! நீங்க திடுதிப்புன்னு ஏன் செஞ்சீங்க.. என்று எங்களுக்குப் பீதியூட்டி ஜேப்பியாரைப் பிரமாண்டமாக்கிப் பேசினார்.

நொந்து போன நாங்கள் பு.ஜ.தொ.மு. பொதுச் செயலாளர் சுப. தங்கராசுவைச் சந்தித்தோம். அவர் எடுத்த எடுப்பிலேயே எங்களுக்கு நம்பிக்கையூட்டி ''அவனைப் பார்க்கலாம் கம்யூனிஸ்டுகளுக்கு முன்னால ஜேப்பியார் ஒரு தூசி. நம்ப பக்கம் நியாயம் இருக்கு, தொழிலாளி வர்க்கம் இருக்கு,'' என்றும் ''ஆணையத்தில் வழக்கு போட்டு அவனைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து, வாதாடி, ஒரு தொழிலாளி 480 நாட்கள் வேலை செய்தாலே கன்பார்ம் செய்யணும்னு சட்டமிருக்கு, ஆனா நடைமுறையில் சட்டம் முதலாளிகளுக்கு பாத சேவை



படிப்பகம்

www.padippakam.com

செய்யுதுன்னு'' பல விவரங்களை எங்களுக்குப் புரிய வச்சார். அவரது வழிகாட்டுதலின்படி மீண்டும் சங்க வேலைகளைச் செய்ய ஆரம்பித்தோம்.

'பு.ஜ.தொ.மு.வின் துணிச்சலான அணுகுமுறையைப் பார்த்த தொழிலாளிகளில் சி.ஐ.டி.யு.வில் இருந்த 40 பேரும் இடம்மாறி இப்போது பு.ஜ.தொ.மு.வில் 80 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். என்னைத் தவிர முன்னணியாளர்கள் நான்கு பேரை சஸ்பெண்ட் செய்த பிறகும் சங்கம் வழக்கை நடத்தி வருகிறது. முன்னைவிட வெளிப்படையாகத் தொழிலாளர்கள் சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்,'' என்று வேலை பறி போன சோகமோ, அயற்சியோ இல்லாமல் வர்க்க உணர்வுடன் தொழிலாளர்களின் உதவி மற்றும் ஒத்துழைப்புடன் சங்க வேலையைச் செய்வதன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

''முன்னெல்லாம் என்ன ஏதுன்னே விவரம் சொல்லாம உம்மேல தப்பு இருக்குன்னு டூட்டி கொடுக்காம மாசக்கணக்குல கூட மரத்தடியில நிக்க வைப்பான். இப்ப சங்கம் ஆரம்பிச்சு போராடுன பிறகுதான் சஸ்பெண்ட் ஆர்டர்னு முறையா தாரான். இப்படி ஜேப்பியாரைத் திருத்தியிருக்கிறதே எங்களுக்கு ஒரு வெற்றிதான்'' என்று ஆர்வமுடன் கூறுகிறார் ஓட்டுநர் பரமன்.

**தொழிலாளி வர்க்கத்தின் தலையாய உரிமை அதன் சுயமரியாதையே!**

காணப் பொறுக்குமோ? 'கல்வி வள்ளல்' ஜேப்பியாருக்கு. ''ஏண்டா 45 சங்கத்துக்கு நானே தலைவன்; என்னை எதிர்த்தே சங்கமாடா'' என்று வீரவசனம் பேசி யாரெல்லாம் சங்கத்தில் இருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் இனி கேண்டீனில் சாப்பாடு கிடையாது, சங்கத்தில் உள்ளவன் பிள்ளைகளுக்கு ஸ்கூல் பீஸ் உதவியும் கிடையாது, சங்கத்தில் உள்ளவர்களுக்கு தண்ணீர் கூட கிடையாது என்று நிர்வாகம் நடவடிக்கை எடுத்தது. ''போடா கிடையாதுக்குப் பொறந்த கிடையாது, எங்களுக்கு சங்கம் தாண்டா சத்துணவு'' என்கின்றனர் தொழிலாளிகள்.

''சோறு போட்டா போடுறான், போடாட்டி போறான். இப்ப டைரக்டரைப் பார்த்து பயமில்லை. இப்ப நாங்க யாருக்கும் அடிமை இல்லை. எக்ஸ்ட்ரா டூட்டி பாக்கறது இல்லை. இப்ப ஊட்டிக்கு கல்விச் சுற்றுலாவுக்கு வண்டி எடுத்தப்ப கூட காசு தந்தாதான் போவோம்னோம், கொடுத்தான். முன்னாடியெல்லாம் தரமாட்டான். இப்பல்லாம் மிரட்டாமல் சலுகையைப் பேசி விலைக்கு வாங்கப் பாக்குறான். வேலையே போனாலும் சங்கத்தை விட்டுப் போறதா இல்லை...'' என்று பிடிவாதமாகத் தனது சங்க உணர்வை வெளிப்படுத்துகிறார் ஓட்டுநர் ரவி.

சங்கத்தில் சேர்ந்ததால் திடீரென ஒருநாள், ''உங்களுக்கெல்லாம் கேண்டீனில் உணவு கிடையாது'' என மதிய நேரத்தில் நிர்வாகம் அறிவித்தவுடன், பரமன் என்ற ஓட்டுநர் உடனே தனது மோதிரத்தை அடகு வைத்து 48 தொழிலாளிகளும் பசியாற உதவியிருக்கிறார். வர்க்க உணர்வுக்குப் படியளப்பதில் பரமன் ஒரு முன் உதாரணம். ஜேப்பியாருக்கு மோதிரக் கையால் விழுந்த குட்டு இது. ''சங்கத்தை விட்டுப் போனவர்கள் இப்பவும் தரக்குறைவா பேச்சு வாங்கிக்கிட்டு இருக்குறாங்க. ஆனால் எங்களை இப்ப மரியாதையா, துப்புரவு தொழிலாளிகளையும் மரியாதையா நடத்துறான்னா காரணம் சங்கம் தான். இப்பதான் லீவு எடுக்குறோம். உரிமையா இருக்குறோம்...'' என்று பெருமிதப்படுகிறார் பரமன்.

சங்கத்தில் இணைந்ததால் உடனடியாக எவ்விதப் பொருளாதாரக் கோரிக்கையும் நிறைவேறாத போதும், குறைவான ஊதியத்தில் இருக்கும் கிளீனர் சார்லஸ் என்பவரோ ''100 வண்டி போல இருக்கு. அத்தனைக்கும் கிளீனர் கிடையாது. சம்பளத்த விடுங்க வண்டி கழுவ தண்ணி கிடையாது. கேட்டா மழைத் தண்ணியில கழுவுங்கிறான். சாக்கடைத் தண்ணியுல நின்னு காலே புண் ஆயிடுச்சு'' என்று கரும்படையாக மாறியிருக்கும் கால்களைக் காட்டியவர்,

''புண் ஆற 11 நாள் லீவு எடுத்தேன். நான் சங்கத்துல இருக்குறதால 11 நாளுக்கு சம்பளத்த புடிச்சுட்டாங்க; ஒரு தண்டனை மாதிரி. பரவாயில்லை. முன்ன எல்லாம் இன்ஜார்ஜ் நவநீத கிருஷ்ணன் பைக்கைக் கூட கழுவணும். இப்ப அடிமை வேலை இல்லை. மரியாதை இருக்கு.. நீ சங்கத்தை விட்டுவா எல்லாச் சலுகையும் தாரேன்! வண்டி ஓட்டலாம் என்று நிர்வாகம் ஆசை காட்டுது... இந்த மரியாதை இருக்குமா? சங்கத்தை விட்டுப் போக மாட்டேன்!'' என்று வைராக்கியமாகப் பேசுகிறார்.

சங்கத்தில் உள்ள ஓட்டுநர் சங்கரனோ வர்க்க உணர்வற்ற தொழிலாளிகளுக்கும் உணர்த்தும்படி முன்னேறி விவாதிக்கிறார். ''என்ன ஒருத்தன் கேட்டான், நீ யூனியன்ல இருந்து என்ன சாதிச்சே''ன்னு? நான் கேட்டேன் ''நீ இல்லாம என்னாத்த சாதிச்சே?'' அவன் சொன்னான், ''எங்களுக்கு சோறு உண்டு, நிர்வாகம் காசு தருது''ன்னான். அதுக்கு நான் ''உனக்கு மரியாதை உண்டா? போடா நாங்க யூனியன் அமைச்சு போராடியதாலேதான் உன்னைத் தன்பக்கம் இழுக்க நிர்வாகம் காசு தருது; அது கூட உனக்கு நாங்க வாங்கிக் கொடுத்த காசுடா''ன்னு சொன்னேன். மூஞ்சத் திருப்பிக்கிட்டு பேச முடியாமல் போயிட்டான்'' என்றார்.

மாணவர்களும்
ஓட்டுநர்களின் பு.ஜ.தொ.மு. சங்கத்துக்கு
நிதி உள்ளிட்ட ஆதரவு தந்துள்ளனர்.
எஸ்.ஆர்.எம். போன்ற பிற கல்லூரி நிறுவனங்களைச்
சேர்ந்த தொழிலாளர்களும்,
பு.ஜ.தொ.மு. சங்கத்தில் இணைவதற்காகத்
தருணம் பார்த்து காத்திருக்கின்றனர்

மெக்கானிக் விநாயகம், ஜேப்பியார் ஸ்டீல் ஜெயக்குமார் இப்படிப் பலரும் தங்களது இழப்புகளைவிட சங்கத்தால் தாங்கள் அடைந்திருக்கும் மரியாதையான வாழ்க்கையை முன்னிறுத்திப் பேசுகின்றனர். தொழிற்சங்கம் என்பது வெறும் கூலி உயர்வு, போனஸ் போன்ற பொருளாதாரப் பிரச்சினைகளுக்கானது மட்டுமின்றி, அதனுடன் முக்கியமாக ஒரு தொழிலாளி தன்னை ஒரு மனிதனாக உணர்வதும், வர்க்கமாக இணைவதும், அரசியல் சக்தியாகத் தன்னை உயர்த்திக் கொள்வதுமான விடுதலைப் பாதையை நோக்கியது என்பதைத் தங்களது அனுபவமாக நம்முன் வாழ்ந்து காட்டுகிறார்கள் இந்தத் தொழிலாளர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

இந்த ஆபத்தை உணர்ந்து கொண்ட ஜேப்பியாரோ, நான் 'மாவீரன்டா' என்று பஞ்ச் டய லாக் பேசினாலும், தனிமையில் தொழிலாளர்களைச் சந்தித்தால், ''என்னை டென்சனாக்கிட்டீங் களே... என் காலேஜீக்கு எதி ராவே கூட்டம் போட்டு என்னைத் திட்டிட்டீங்களே... BP ஏறிடுச்சே'' என்று பொருமுவதுடன்... கோரிக்கையை முன்வைக்கும் தொழிலாளியிடம் பேசிக் கொண்டே ''அப்புறம், சொல் லுங்க சார்!'' என்று நக்கலடிப்ப தோடு, மேசையில் உள்ள மணியை ஒவ்வொரு வார்த்தைக் கும் 'டிங், டிங்' என்று அடித்து தெலுங்குப் பட வில்லன் பாணி யில் பழிப்புக் காட்டிக் கொண்டி ருக்கிறார்.




"சங்கம் அமைத்ததால் சுயமரியாதையைப் பெற்றோம்" தொழிலாளிகளின் முதல் வெற்றி!

போராடிய தொழிலாளர்கள் தமது வியர்வையால் ஜேப்பியாரின் வாயையும் கழுவிச் சுத்தப்படுத்தி இருக்கிறார்கள். வாடா! போடா! என்ற ஜேப்பியாரின் வாயை வாங்க சார்! எனுமளவுக்கு சுத்தப்படுத்தியிருப்பது, துப்புரவுத் தொழிலாளர்களின் முதல் வெற்றி. வேறு வழியில்லாமல் இப் போது ஜேப்பியார் ''பேசாமல் சங்கத் துல இல்லைன்னு எழுதிக் கொடுத் துட்டு வா! எல்லாச் சலுகையும் தாரேன்! வாங்க சார்!'' என்று புடவைக் கடைகாரர் லெவலுக்கு இரைஞ்சினா லும், தொழிலாளர்களோ, ''சம்பள இர சீது கொடு, வருடம் ஒரு போனஸ் கொடு, அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் கொடு, ஓட்டுநர்களுக்கு மழை வெயி லில் ஒதுங்க இடம் கொடு, வண்டி கழுவ, குடிக்கத் தண்ணீர் கொடு, கேண் டீன் வசதி கொடு.. என்ற அடிப்படை யான கோரிக்கைகளை முன் வைத்து சங்கத்தை முன்னேற்றிப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மாவீரனின் மதில் கோட்டைக்கு எதிரிலேயே ஒரு தேநீர்க்கடைக்காரரின் உதவியால் அவரது கடை மாடியில் சங்க அலுவல கத்தை அமைத்து தங்களது வர்க்கக் கோட்டையைக் கட்டி உள்ளனர்.

## அமைப்பு இல்லாமல் தொழிலாளிக ளுக்கு எதுவுமில்லை

சங்க வேலைகள், போராட்டக் களங்கள் இந்த அனுபவக் களத்தில் தொழிலாளர்கள் ஓட்டுக் கட்சிகளைப் பற்றியும், தொழிலாளர் ஆணையம் போன்ற அதிகார வர்க்க அமைப்புக ளின் முதலாளியச் சார்பைப் பற்றியும், அரசியல் அமைப்பு பற்றியும் தெளி வான புரிதலைப் பெற்றிருக்கிறார்கள்.

''எல்லாம் திருட்டுப் பசங்க, போலீஸ் கம்ப்யூட்டர் பயிற்சிக்கு இங்க இடம், சாப்பாடு, சகல வசதியும் தாராங்க. பிறகு போலீஸ் ஜேப்பியா ரோட தவறைக் கேட்குமா? நமக்கு ஒரு பத்து ரூபாய் தரமாட்டான். நலிந்த கலைஞர்களுக்கு உதவி, டிரஸ்ட்ன்னு விஜயகாந்தைக் கூட்டி வந்து லட்சக்க ணக்குல செலவு பண்ணி விழா நடத்து றான். விஜயகாந்தும் ஜேப்பியார் கால்ல வுழுவுறான். ஆசி வாங்குறான். எல்லாம் ஒரு கணக்குதான்! இந்த தா. பாண்டியன், நல்லக்கண்ணு கூட வந்து தனியா ஜேப்பியாரைப் பாத் துட்டுப் போனாங்க! பிறகு 2 நாள் கழித்து சி.பி.ஐ. ஆபீசுக்கு 25 கம்ப்யூட் டர் பாக்சு போச்சு. நானே வண்டியில போயி இறக்குனேன். எல்லாம் பிராடு!'' என்று சகலத்தையும் அம்ப லப்படுத்துகிறார் ஓட்டுநர் ஜாகீர் உசேன்.

சங்கத்தின் கூர்மையை உணர்ந்த ஜேப்பியாரும் அதனால்தான் ''சங் கத்தைக் கலை'' என்கிறார். அதன் பலனை உணர்ந்த தொழிலாளிகளோ, ''சங்கத்தை நுழை'' என்று முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். இலட்சக்கணக் கில் செலவு செய்து த்ரிஷாவையும், நமீ தாவையும் கல்லூரிக்குக் கூட்டி வந்து குத்தாட்டம் போட முடிகிறது; வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஜேப்பி யாரால் குடிநீர் கூடத் தர முடியாதாம். பாரதிராஜாவையும் கமலஹாசனை யும் ஓட்டிவந்து பல லட்சம் செலவு செய்து டாக்டர் பட்டம் தரமுடிகிறது;

பல ஆண்டுகள் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் வழங்க முடியாதாம். வசூல்ராஜா சினிமாவினுடைய படப்பிடிப் புக்கு இந்தக் கல்லூரி 'வசூல் ராஜா' இடம், வசதி செய்து தரு வாராம்; உழைக்கும் தொழி லாளர்களுக்கு மழைக்கு ஒதுங்கக் கூட இடம் தர முடியாதாம்.. இந்த உலக அநியாயத்தை உலக நாய கன் தட்டிக் கேட்பாரா?

உண்மையான உலக நாயகர் களான தொழிலாளர்கள் கேட்ட தற்கு ஜேப்பியார், ''என் பணத்தை ஒரு பிச்சைக்காரனுக்கு கூட தருவேன்; உங்களுக்குத் தர மாட்டேன்'' என்றாராம். அது சரி! கமலஹாசன், பாரதிராஜா 'லெவ லுக்கு' தொழிலாளர்கள் இல்லைதான். மானம், மரியாதையோடு வாழத் தெரி கிறதே! அதனால்தான் ஜேப்பியாரை எதிர்த்து இப்படி ஒரு மனிதக் குரலா? என்று மகிழ்ந்த அந்தக் கல்லூரியின் பேராசிரியர் ஒருவர் ''துப்புரவுத் தொழிலாளத் தோழர்களே உங்களுக்கு உள்ள சூடு, சொரணை எங்களுக்கு இல்லை... நாங்கள் இன்னமும் அடி மைகள்... நீங்கதான் எங்களையும் காப் பாத்தணும்'' என்று மறைமுகமாகப் பார்த்து ஆதரித்துப் பேசியுள்ளார்.

மாணவர்களும் ஓட்டுநர்களின் பு.ஜ.தொ.மு. சங்கத்துக்கு நிதி உள் ளிட்ட ஆதரவு தந்துள்ளனர். எஸ்.ஆர்.எம். போன்ற பிற கல்லூரி நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர் களும், பு.ஜ.தொ.மு. சங்கத்தில் இணைவதற்காகத் தருணம் பார்த்து காத்திருக்கின்றனர்.

கால்களை உதைத்து, கைகளை அசைத்து, கண்களைப் பிசைந்து பாது காப்பாக உரிய நேரத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்களை உரிய இடத்தில், உரிய நேரத்தில் சேர்க் கும் பு.ஜ.தொ.மு. ஓட்டுநர்கள், வண் டியை மட்டுமல்ல, வர்க்க நெளிவு சுளி வுகளோடு இலக்கையும் நோக்கி அனைவரையும் அழைத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள். இனி ஒதுங்கி வழிவிட்டுச் சிணுங்குவதைத் தவிர 'மாவீரனுக்கு' வேறு வழியில்லை!

(நேர்காணல், தொகுப்பு: தொழிலாளர்களின் உதவியுடன் துரை.சண்முகம்)



படிப்பகம்

1967-இல் நக்சல்பாரி பேரெழுச்சியின்போது ஆளும் வர்க்கத்தின் கேடயமாகச் செயல்பட்ட மார்க்சிஸ்ட் கட்சி, கடந்த 30 ஆண்டுகளில் ஆளும் வர்க்கத்தின் வாளாகப் பரிணாம வளர்ச்சி கண்டிருக்கிறது. நந்திகிராம் அதற்கு ஒரு நாடறிந்த எடுத்துக்காட்டு. மார்க்சிஸ்டுகளின் துரோகத்தை எங்கெல்லாம் மக்கள் எதிர்க்கிறார்களோ, எங்கெல்லாம் புரட்சியாளர்களின் அரசியல் நடவடிக்கைகளால் இவர்கள் அம்பலமாகிறார்களோ அங்கெல்லாம் அரசியல் படுகொலைகளை நிகழ்த்த மார்க்சிஸ்டுகள் தயங்குவதில்லை. விழுப்புரம் மாவட்டம் காரப்பட்டு கிராமத்தில் விவசாயிகள் விடுதலை முன்னணியின் செயல்பாடுகளால் மக்கள் மத்தியில் மதிப்பிழந்து தனிமைப்பட்டுப் போன மார்க்சிஸ்டு கட்சிக் காலிகள் அங்கே ஒரு அரசியல் படுகொலையை அரங்கேற்றியிருக்கிறார்கள்.

# காரப்பட்டு: மார்க்சிஸ்ட்டுகளின் கொலைவெறியாட்டம்:

# தொண்டர்களாக குண்டர்கள்! தலைவர்களாக கிரிமினல்கள்!

கடந்த ஜூன் 20-ஆம் தேதி மாலை சுமார் 6 மணியளவில் காரப்பட்டு இராசேந்திரன் (45) கொலை செய்யப்பட்டார். அரிவாளும் இரும்புத் தடிகளும் ஏந்திய சுமார் 16 பேர் கொண்ட கொலைக்கும்பல், நிராயுதபாணியான இராசேந்திரனைச் சுற்றி வளைத்துக் கொண்டு வெட்டிக் கொலை செய்திருக்கிறது. சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என விவசாயிகள் விடுதலை முன்னணியின் ஆதரவாளர்கள் அனைவரையும் அந்தக் கொலைவெறிக் கும்பல் தாக்கியிருக்கிறது. வீடுகளைச் சூறையாடி, நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்திருக்கிறது.

இந்தப் படுகொலை தற்செயலாக நிகழ்ந்து விடவில்லை. மொத்தத் தாக்குதலையும் மார்க்சிஸ்டு கட்சியின் விழுப்புரம் மாவட்டத் தலைமை திட்டமிட்டு ஒருங்கிணைத்து நடத்தியிருக்கிறது என்பதை நடைபெற்றுள்ள சம்பவங்கள் நிரூபிக்கின்றன.

காரப்பட்டு கிராமத்தின் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பில் பெரும்பான்மையினர் வி.வி.மு.வைச் சேர்ந்தவர்கள். மார்க்சிஸ்டு கட்சிக்கு ஆதரவான சுமார் 20,30 குடும்பங்கள் சற்றுத் தள்ளியிருக்கும் மேட்டுத்தெரு என்ற பகுதியில் வசிக்கின்றனர். இதே மேட்டுத் தெருவிலும் வி.வி.மு.விற்குப் பல ஆதரவாளர்கள் உள்ளனர். இந்நிலையில் வி.வி.மு. தோழர்களைத் தாக்குவதோ கொலை செய்வதோ கடினமென்பதால் உரிய தருணத்திற்காகக் காத்திருந்திருக்கின்றனர் மார்க்சிஸ்டு குண்டர்கள்.

வி.வி.மு.வுக்கு ஆதரவான கூலி விவசாயிகள் கரும்பு வெட்டும் வேலைக்காக ஒரு வாரம் பத்து நாட்கள் வெளியூர் செல்வது வழக்கம். ஜூன் 19-ஆம் தேதியன்று அவர்களில் சுமார் 30 பேர் கரும்பு வெட்டும் வேலைக்காக வெளியூர் கிளம்பி விட்டனர். எப்போது கிளம்புவார்கள் என்று காத்திருந்த மார்க்சிஸ்டு கொலைகாரர்கள், வி.வி.மு.வின் அமைப்பாளர் ஏழுமலையை 20-ஆம் தேதியன்று கொலை செய்வது என்று முடிவு செய்திருக்கின்றனர். வீடுகளில் ஆட்கள் அதிகமில்லாத மாலை நேரத்தையும் அதற்காகத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். எந்த இடத்தில் கொல்வது என்றும் திட்டமிட்டு அந்த இடத்தை நோக்கி ஏழுமலையை இழுப்பதற்காகவே ஒரு நாடகத்தையும் அரங்கேற்றியிருக்கின்றனர்.

மாலை சுமார் 5 மணியளவில் மார்க்சிஸ்டு கட்சியைச் சேர்ந்த வெங்கடேசன், ராமு ஆகியோர் தங்களது கொடிக்கம்பத்தின் கீழே உட்கார்ந்து கொண்டு தெருவில் போய்க்கொண்டிருந்த பாலு என்ற வி.வி.மு. ஆதரவாளரின் மகனிடம் வம்பிழுத்து அவரைத் தாக்கியிருக்கின்றனர். அருகாமை வீட்டிலிருந்த ஒரு பெண் இதனைப் பார்த்துக் கூச்சலிட்டிருக்கிறார். கூட்டம் கூடிவிட்டது.

வெங்கடேசன் ரவுடித்தனமாக நடந்து கொள்ளவே கைகலப்பாகியிருக்கிறது. மறுகணமே மயங்கி விழுந்ததைப் போல நடித்திருக்கிறான் வெங்கடேசன். அச்சமயம் வேறோரு வேலையாக மேட்டுத் தெருவிற்குச் சென்றிருந்த ஏழுமலை, சம்பவம் பற்றிக் கேள்விப்பட்டு உடனே அந்த இடத்தை நோக்கி விரைந்திருக்கிறார்.

மேட்டுத்தெருவில் ஏழுமலையை வெட்ட முயன்றால் அங்கிருக்கும் வி.வி.மு. ஆதரவாளர்கள் தடுத்து விடுவார்கள் என்பதால், அவர் வரும் பாதையில் உள்ள ஒரு ஆளில்லாத இடத்தைக் கொலைக்களமாகத் தெரிவு செய்து, அங்கே சுப்பராயன் என்ற மார்க்சிஸ்டு கட்சிக்காரனின் வீட்டில் ஆயுதங்களுடன் தயாராகக் காத்திருந்த கொலைக் கும்பல், ஏழுமலை வருவதைப் பார்த்ததும் கையொலி எழுப்பி 'சிக்னல்' கொடுத்திருக்கின்றது. அதுவரை மயங்கியவனைப் போல நடித்த வெங்கடேசன் உடனே எழுந்து ஏழுமலையை நோக்கி ஓடிவர, கொட்டகையில் பதுங்கியிருந்த கும்பலும் வீச்சரிவாள், இரும்புத் தடிகளுடன் ஏழுமலை மீது பாய்ந்தது.

10 பேர் ஆயுதங்களுடன் சுற்றி வளைக்கவே, தற்காப்புக்காக வயலில் குதித்து கையிலிருந்த சிவப்புத் துண்டை வீசி மக்களை அழைத்தபடியே தன்னுடைய தெருவுக்கு வந்து சேர்ந்திருக்கிறார் ஏழுமலை. மக்கள் ஆத்திரத்துடன் திரண்டு விட்டனர். ஏழுமலை வீட்டுக்கு 3 வீடு தள்ளிக் குடியிருக்கும் இராசேந்திரன், "வெட்டுக் குத்தெல்லாம் வேண்டாம், நான் போய் அவர்களிடம் பேசிக்கொள்கிறேன்" என்று நிராயுதபாணியாக அந்தக்

**ஆளும் வர்க்கத்தையும் அதிகார வர்க்கத்தையும் எதிர்ப்பதற்கு மொட்டை போடும் போராட்டம், அரை நிர்வாணப் போராட்டம்! புரட்சியாளர்களை எதிர்ப்பதற்கு மட்டும் ஆயுதப் போராட்டம்! இதுதான் மார்க்சிஸ்டு கட்சி!**



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

கொலைக்கும்பலை நோக்கி, தடுத்தும் கேளாமல், ஓடியிருக்கிறார். ஏழுமலையின் மகனும், மல்லிகா என்ற பெண்ணும், அவரது மகனும், சிறுவர்களும், மூதாட்டிகளும், பிறரும் அவரது பின்னாலேயே ஓடியிருக்கின்றனர்.

சமாதானம் செய்வதற்காக இராசேந்திரன் கைகளை உயர்த்த, அந்தக் கைகளைக் கண்ட துண்டமாக வெட்டியிருக்கின்றனர். பிறகு அவர் தலையில் இறங்கியது அரிவாள். அடுத்து மல்லிகாவின் மகனை வெட்டுவதற்கு அந்தக் கும்பல் அரிவாளை ஓங்கியவுடன், ஆனது ஆகட்டும் என்று அரிவாளைத் தடுத்துப் பிடுங்கியிருக்கிறார் மல்லிகா. உடனே இரும்புக் குழாயினால் ஏழுமலையின் மகனைத் தாக்கியிருக்கின்றனர். 6 வயது சிறுவன், 13 வயது சிறுமி, 65 வயது மூதாட்டி.. என யாரும் அவர்களுடைய தாக்குதலுக்குத் தப்பவில்லை. இதற்குள் ஏழுமலையுடன் மக்கள் கூட்டம் வருவதைக் கண்டு ஓட்டம் பிடித்திருக்கிறது அந்தக் கொலைக்கும்பல்.

உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த இராசேந்திரனை உடனே ஒரு கட்டிலில் கிடத்தி அங்கிருந்த தோழர்கள் துணையுடன் மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்ல முயன்றிருக்கிறார் ஏழுமலை. தூக்கிச் சென்ற அந்தத் தோழர்கள் மீதும் ஒளிந்து கொண்டு கல்லெறிந்திருக்கிறார்கள் அந்தப் பேடிகள். எதிர்த்தாக்குதல் தொடுத்தபடியே இராசேந்திரனை விழுப்புரம் மருத்துவமனைக்குத் தூக்கிச் சென்றிருக்கிறார்கள் தோழர்கள்.

அவர்கள் ஊரிலிருந்து அகன்ற மறுகணமே அருகாமையில் உள்ள அரசூரில் தயாராகக் காத்திருந்த தங்களது ஆட்களுக்கு செல்போனில் தகவல் தெரிவித்தது அந்தக் கொலைக்கும்பல். அங்கிருந்து 2 ஷேர் ஆட்டோக்களில் வந்திறங்கிய மார்க்சிஸ்டு காலிகள், மேட்டுத் தெருவில் இருந்த வி.வி.மு. ஆதரவாளர்களின் வீடுகளில் புகுந்து அங்கிருந்த முதியவர்களையும் பெண்களையும் தாக்கியிருக்கின்றனர். வீடுகளை அடித்து நொறுக்கியதுடன், 27 பவுன் நகைகள், சிறுமிகளின் கொலுசுகள், சுமார் ரூ. 50,000 பணம், டி.வி., சூட்கேஸ் போன்ற பொருட்களனைத்தையும் கொள்ளையடித்துச் சென்றிருக்கின்றனர்.

இந்தக் கொள்ளை நடைபெற்றுக் கொண்டிருந்த அதே நேரத்தில் உள்ளூர் செயலர் ராசுக்கண்ணு உள்ளிட்ட கொலைகாரர்கள் தப்பித் தலைமறைவாகி விட்டனர்.

வெங்கடேசன் உள்ளிட்ட சிலர் தம்மைத்தாமே காயப்படுத்திக் கொண்டு விழுப்புரம் அரசு மருத்துவமனைக்குச் சென்றிருக்கின்றனர். அங்கே தயாராகக் காத்திருந்த மார்க்சிஸ்டு கட்சியின் மாவட்டச் செயலர் ஆனந்தன், அவர்களை ஆஸ்பத்திரியில் படுக்க வைக்க ஏற்பாடு செய்துவிட்டு, 'வி.வி.மு. ஆட்கள் 10 பேர் தங்களது தோழர்களைக் கொலை செய்ய முயன்றதாக' முன்கூட்டியே தயாராக எழுதி வைத்திருந்த பொய்ப்புகாரை முதல் புகாராகத் திருவெண்ணெய் நல்லூர் காவல் நிலையத்திலும் கொடுத்திருக்கிறார்.

விழுப்புரம் மருத்துவமனை கைவிரித்து விட்டதால், அபாயகரமான நிலையில் சென்னை பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட இராசேந்திரன், வழியில் திண்டிவனத்திலேயே இறந்துவிட்டார்.



இச்செய்தியறிந்த மக்கள், மார்க்சிஸ்டு காலிகளின் வீடுகளை நோக்கிக் கூட்டமாகச் சென்றிருக்கின்றனர். ஆனால் அங்கே யாரும் இல்லை. ஓடிப்போன அந்தக் கிரிமினல்கள் தமது வீடுகளைத் தாமே சேதப்படுத்தி பொய் வழக்குக்கான தடயத்தையும் உருவாக்கி வைத்துவிட்டே ஓடியிருந்தனர். சிறிது நேரத்தில் 'அமைதியை' நிலைநாட்ட பெரும் போலீசுப் படை அங்கே குவிக்கப்பட்டுவிட்டது.

•••

**கொ**லை செய்யப்பட்ட இராசேந்திரன் ஒரு பண்ணையாரோ, பணக்காரரோ, சமூக விரோதியோ அல்ல. அவர் ஒரு கரும்பு வெட்டும் தொழிலாளி. தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர். 5 பெண் பிள்ளைகளையும், ஒரு மூளை வளர்ச்சி குன்றிய ஆண் பிள்ளையையும் பெற்றுவிட்டு அவர்களை ஆளாக்குவதற்காக உழைத்துத் தேய்ந்து கொண்டிருந்த ஒரு சாதாரண ஏழை விவசாயி. எல்லாக் கட்சியினருடனும் சுமுகமாகப் பழகும் இயல்புள்ளவர்.

அவர் துவக்கம் முதலே விவசாயிகள் விடுதலை முன்னணியில் இணைந்து செயல்பட்டார். பின்னர் சொந்தக் காரணங்களுக்காக சில ஆண்டுகளுக்கு முன்னர் வி.வி.மு.விலிருந்து விலகினார். சிறிது காலம் கழித்து தே.மு.தி.க.வில் இணைந்தார். இருப்பினும் உள்ளூர்ப் பிரச்சினைகளில் வி.வி.மு. வின் நடவடிக்கைகளை ஆதரித்து வந்தார். தனிப்பட்ட முறையிலும் நியாயமானவர் என்ற நற்பெயரை மக்கள் மத்தியில் பெற்றிருந்தார்.

வி.வி.மு. வை ஆதரித்தார் என்ற ஒரு குற்றத்துக்காகப் பண்ணையார்களோ சாதி ஆதிக்க வெறியர்களோ கூட ஒருவரை சர்வசாதாரணமாக இப்படிப் படுகொலை செய்துவிடுவதில்லை. ஆனால் கொலை செய்வதற்கு இந்த ஒரு காரணமே போதுமானதென்று மார்க்சிஸ்டுகள் கருதியிருக்கிறார்கள்.

கொலைக் குற்றவாளியான வெங்கடேசனுக்கு வேலையும் வாங்கித் தந்து, பெண் பார்த்துத் திருமணமும் செய்து வைத்தவர்தான் இராசேந்திரன். அந்த உரிமையில். அவனைக் கண்டித்துத் திருப்பி அனுப்ப முடியும் என்று அவர் திடமாக நம்பியிருக்கிறார். ஆனால் அந்த நம்பிக்கை பொய் என்பது முதல் வெட்டு விழுந்த பின்னர்தான் அவருக்குப் புரிந்திருக்கிறது. ''அஞ்சு பொம்பளப் புள்ளங்கடா, வேணாண்டா, என்ன வெட்டாதீங்கடா'' என்று கதறியிருக்கிறார். தலையில் அரிவாள் இறங்கியவுடன் அந்தக் கதறலும் நின்றுவிட்டது.

உழைக்கும் வர்க்கத்தினரை இரக்கமின்றி வெட்டிக் கொல்வதற்கு



படிப்பகம்

www.padippakam.com

**''அஞ்சு பொம்பளப் புள்ளங்கடா, என்னைக் கொல்லாதீங்கடா'' என்று மன்றாடிய ஏழை விவசாயியை ஈவு இரக்கமின்றி வெட்டியது மார்க்சிஸ்டுகளின் அரிவாள். குஜராத் இந்து வெறியர்களின் அரிவாளுக்கும் இதற்கும் என்ன வேறுபாடு?**

அரிவாள்! அவர்களுடைய உடைமைகளைக் கொள்ளையிடும் பொருட்டு பூட்டை உடைப்பதற்குச் சுத்தியல்! கம்யூனிஸ்டுகளின் சின்னமான அரிவாளுக்கும் சுத்தியலுக்கும் இந்தப் போலிகள் உருவாக்கியிருக்கும் புதிய அர்த்தம் இது.

•••

இது ஒரு திட்டமிட்ட அரசியல் படுகொலை. ஜூன் 14-ஆம் தேதி மார்க்சிஸ்டுகள் காரப்பட்டில் நடத்திய கூட்டத்தில் வி.வி.மு.வுக்கு எதிராகப் பொய்களையும் அவதூறுகளையும் நஞ்சாகக் கக்கியதுடன் 'வி.வி.மு. வை ஒழித்துக் கட்டுவோம்!' என்று பிரகடனமும் செய்திருக்கிறார்கள். மாவட்டக் கமிட்டி உறுப்பினர்கள் முன்னிலையில் ஏழுமலையைக் கொல்வோமென்பதை மறைமுக அறிவிப்பாகவே வெளியிட்டிருக்கிறான் பகுதிச் செயலர் ராசுக்கண்ணு. இந்தக் கொலைவெறித் தாக்குதலையும், கொள்ளையையும் மாவட்டக் கமிட்டி நுணுக்கமாகத் திட்டமிட்டுக் கொடுத்திருக்கிறது. இந்தக் கொலைத் திட்டத்தின் முன் தயாரிப்புகளை காரப்பட்டுக்கு நேரில் வந்து பார்வையிட்டிருக்கிறார் மாவட்டச் செயலர் ஆனந்தன்.

போலீசுக்கும் மார்க்சிஸ்டுகளுக்கும் இடையே நிலவும் தொழில்முறைக் கூட்டினை திருவெண்ணெய் நல்லூர் இன்ஸ்பெக்டரின் நடவடிக்கைகள் தெளிவாக நிரூபித்தன.

கொலையை நேரில் பார்த்த மல்லிகா, புகார் கொடுப்பதற்காக அன்றிரவு 11.30 மணிக்கு காவல் நிலையத்திற்குச் சென்ற போது, கொலைகாரனைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே மல்லிகாவிடம் விசாரணை நடத்தியிருக்கிறார் இன்ஸ்பெக்டர். ''ரெண்டு பேர்தான் வெட்டினதா வெங்கடேசன் சொல்றான், நீ என்னம்மா இவ்வளவு பேர் சொல்ற'' என்று கூறி, மல்லிகாவின் புகாரை வெங்கடேசன் முன்னிலையிலேயே நிராகரித்திருக்கிறார் இன்ஸ்பெக்டர் இராசேந்திரன். கொள்ளை குறித்த புகாரையும் பதிவு செய்ய முடியாதென போலீசு மறுத்திருக்கிறது.

இன்ஸ்பெக்டரின் அடுத்தடுத்த நடவடிக்கைகள் 'பணப் பட்டுவாடா' முடிந்து விட்டதை நிரூபித்தன. கொலை வழக்குச் செலவுக்கு, கொள்ளையடித்த பணம்! இது மார்க்சிஸ்டுகளின் கிரிமினல் மூளை கண்டிருக்கும் வளர்ச்சிக்குப் புதியதொரு சான்று!

மறுநாள் காலையில் ''கொலைகாரர்கள் அனைவரின் மீதும் வழக்குப் பதிவு செய்யாவிட்டால் இராசேந்திரனின் பிணத்தை வாங்கமாட்டோம்'' என்று விழுப்புரம் மருத்துவமனை முன் போராடினார்கள் வி.வி.மு. தோழர்கள். அதன் பின்னர்தான் கொலைக் குற்றவாளிகள் பட்டியலில் 7 பேர் சேர்க்கப்பட்டனர். ஆனால் இதனை ஈடுகட்டும் விதத்தில் வி.வி.மு. தோழர் ஏழுமலை உள்ளிட்ட 19 பேர் மீது கொலைமுயற்சி, பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் உள்ளிட்ட பிரிவுகளில் பொய்வழக்கு பதிவு செய்துவிட்டது போலீசு.

தற்போது ஏழுமலை உள்பட 3 தோழர்கள் சிறையில் உள்ளனர். கொலைகாரர்களும் 3 பேர்தான் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். மற்ற 4 கொலைகாரர்களை போலீசு 'தேடி'க் கொண்டிருக்கிறதாம்! போலீசைப் பொருத்தவரை இந்தக் கொலை நக்சல்பாரி அமைப்பினரை ஒடுக்குவதற்குக் கிடைத்த வரப்பிரசாதம். இலஞ்சமும் கொடுத்து, ஆள்காட்டி வேலை- அடியாள் வேலைகளை இலவசமாகவும் செய்து தருகின்ற மார்க்சிஸ்டுகளின் சேவையில் புல்லரித்துப் போய் நிற்கிறது போலீசு நிர்வாகம்.

வி.வி.மு.வின் சார்பில் விழுப்புரத்தில் ஜூன் 25-ஆம் தேதி நடைபெற்ற ஆர்ப்பாட்டம், பொதுக் கூட்டம், சுவரொட்டிப் பிரச்சாரம் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் வாயிலாக 'மார்க்சிஸ்டு-போலீசு கூட்டணி' மாவட்டம் முழுவதும் அம்பலமாகியிருக்கிறது.

எனினும், மார்க்சிஸ்டு கட்சியின் விழுப்புரம் மாவட்டக் கமிட்டி இதுவரை இக்கொலை குறித்து வாய் திறக்கவில்லை. காரப்பட்டு கிராமத்தைப் போலீசு இராச்சியமாக்கி, மக்களை மிரட்டிப் பணிய வைத்து விட்டால், பின்னர் அங்கே தங்களது ஆட்சியை மெல்ல மெல்ல நிறுவி விடலாம் என்பதுதான் மார்க்சிஸ்டுகளின் மனக்கணக்கு.

'காதலிக்க மறுக்கும் பெண்ணைக் கடத்திச் சென்று கற்பழித்துவிட்டால் பிறகு தாலி கட்டி விடலாம்' என்று தமிழ் சினிமா வில்லனைப் போல அவர்கள் சிந்திக்கிறார்கள். லும்பன்கள், பிழைப்புவாதிகளை உறுப்பினர்களாகவும், கிரிமினல்களைத் தலைவர்களாகவும் கொண்டுள்ள ஒரு கட்சி வேறு எப்படிச் சிந்திக்கும்? நந்திக்கிராமில் வெளிப்பட்டது வெறும் வன்முறையல்ல, அதுதான் 'மார்க்சிஸ்டு மூளையின்' சிந்தனை முறை என்பதற்கு காரப்பட்டு இன்னுமொரு சான்று.

•••

நக்சல்பாரி எழுச்சியைக் காட்டிக் கொடுத்த மார்க்சிஸ்டு தலைமையை எதிர்த்து அக்கட்சியிலிருந்து வெளியேறி மா.லெ. இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்ட (மறைந்த) தோழர் ரங்கநாதனின் கிராமம்- காரப்பட்டு. சுற்றுவட்டார நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்துக்கு எதிராகப் பல்வேறு மக்கள் திரள் போராட்டங்களை நடத்தி அவற்றின் ஊடாக உழைக்கும் மக்களின் வர்க்க ஒற்றுமையை அவர் உருவாக்கி வளர்த்திருக்கும் கிராமம் அது.

தலித் மக்களுக்கு எதிராக மிகக் கொடூரமான கலவரங்கள் சுற்றுவட்டாரங்களில் நடைபெற்ற காலங்களிலும் கூட சாதிவெறி தலைதூக்காத கிராமம் காரப்பட்டு. உள்ளூர் கோயிலில் நுழைய அனுமதி மறுக்கப்பட்டிருந்த தலித் மக்களைத் திரட்டி வெற்றிகரமானதொரு கோயில் நுழைவுப் போராட்டத்தை வி.வி.மு. நடத்திய கிராமம் அது. அப்போராட்டத்தின் விளைவாக நிலைநாட்டப்பட்ட தலித் மக்களின் கோயில் நுழைவு உரிமையை வெற்றிகரமாக அமல்படுத்தி வரும் கிராமம்.



படிப்பகம்

www.padippakam.com

திருமண நிகழ்ச்சிகளுக்கு தலித் மக்களும் பிற சாதியினரும் ஒருவரை யொருவர் அழைப்பதையும் ஒரே பந்தியில் அமர்ந்து கலந்துண்பதையும் தனது பண்பாடாகவே மாற்றிக் கொண்டிருக்கும் கிராமம். ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த மக்கள் தமக்குள் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு தலித் சமூகத்தைச் சேர்ந்த வி.வி.மு. தோழர்களை அழைப்பதும், அவர்கள் பஞ்சாயத்து செய்து தீர்த்து வைப்பதும், வி.வி.மு. நடத்தும் ஊர்க்கூட்டங்களில் எல்லாச் சாதிகளையும் சேர்ந்த மக்கள் ஒன்றாக அமர்ந்து பேசுவதும் வழமையாக நடைபெற்று வரும் கிராமம் அது.

தமக்கிடையிலான முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ள மக்கள் அங்கே போலீசுக்கோ கோர்ட்டுக்கோ போவதில்லை. பணப் பரிவர்த்தனையும் நிலப்பரிவர்த்தனையும் கூட பெரிதும் வாய்மொழியின் அடிப்படையிலேயே நடைபெறும் அளவுக்கு மக்களிடையே நம்பிக்கையும் நேர்மையும் நிலவி வரும் கிராமம் அது. கள்ளச் சாராய விற்பனை அங்கே நெடுநாள் முன்னரே ஒழிக்கப்பட்டுவிட்டது. குடித்துவிட்டுத் தெருவில் ஆடுவதும், பொது இடங்களில் புகை பிடிப்பதும் அங்கே தடை செய்யப்பட்டிருக்கின்றன.

இவற்றையெல்லாம் ஆயுத பலம் கொண்டோ அதிகார பலம் கொண்டோ மக்களின் மீது விவசாயிகள் விடுதலை முன்னணி திணித்து விடவில்லை. கிராமத்தில் உள்ள பிற கட்சியினரின் ஆதரவோடும் ஆகப்பெரும்பான்மையான

மக்களின் ஆதரவோடும்தான் இவை அங்கே அமல்படுத்தப்படுகின்றன. எனினும் விரல் விட்டு எண்ணக்கூடிய பிழைப்புவாதிகளும் அவர்களால் தூண்டிவிடப்பட்ட லும்பன்களும் இவற்றை எதிர்க்கத்தான் செய்தனர். தம்மை அடையாளப்படுத்திக் கொள்வதற்கு அவர்களுக்கு ஒரு கட்சி தேவைப்பட்டது. செங்கொடிக்கு எதிராகச் செங்கொடியை நிறுத்துவதுதான் புத்திசாலித்தனம் என்பதை அந்தக் கிரிமினல்கள் புரிந்திருந்தார்கள். மார்க்சிஸ்டு கட்சியோ அவர்களை வாரி அணைத்துக் கொள்ளத் தயாராக இருந்தது.

ஆனால் இந்தக் கிரிமினல் கும்பல் ஒரு கட்சியாகத் திரளுவதை ஏற்பதற்கு மக்கள் தயாராக இல்லை. மார்க்சிஸ்டு கட்சி கொடிக்கம்பம் ஊன்றுவதையே மக்கள் அனைவரும் (எல்லா சாதியினரும்) திரண்டு நின்று எதிர்த்தார்கள். ''நாலு பேராக இருந்தாலும் அது அவர்களது. ஜனநாயக உரிமை'' என்பதை மக்களுக்கு விளக்கிக் கூறி கொடிமரம் ஊன்றும் உரிமையை அன்று மார்க்சிஸ்டுகளுக்கு வாங்கிக் கொடுத்தவரே வி.வி.மு. தோழர் ஏழுமலைதான். ஆயினும் கொடிதான் ஊன்ற முடிந்ததே தவிர, அவர்களுடைய கட்சி அங்கே காலூன்ற முடியவில்லை.

ஊர்ப் பொதுச்சொத்தைத் திருடித் தின்பது, கொடுக்கல் வாங்கலில் ஏமாற்றுவது, நகரத்தில் வேலை வாங்கித் தருவதாக ஏமாற்றுவது, கட்டப்பஞ்சாயத்து செய்வது, தட்டிக் கேட்டால் குடித்து விட்டுத் தகராறு செய்வது, பிரச்சினை முற்றினால் சென்னைக்கு ஓடிவிடுவது, மீண்டும் வந்து வம்பு வளர்ப்பது.. இவைதான் காரப்பட்டில் மார்க்சிஸ்டு உறுப்பினர்கள் ஆற்றிய கட்சிப்பணிகள். இத்தகைய கட்சிப் பணிகளின் மூலம் களவாணிகளை மட்டுமே அவர்களால் திரட்ட முடிந்தது.

இவை ஒவ்வொன்றிலும் வி.வி.மு. தலைமையிலான மக்களின் எதிர்ப்பை அவர்கள் சந்திக்க வேண்டியிருந்தது. தற்போதைய கொலைக் குற்றவாளி வெங்கடேசன் கள்ளச்சாராயம் விற்க முயன்று ஊர்மக்களால் விரட்டியடிக்கப்பட்டவன். பிறகு கருமாதிக் கொட்டகையின் இரும்புக் குழாயைத் திருடியபோது வி.வி.மு. தோழர்களால் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டவன். இவனும் இவனது 'தோழர்களும்' கரண்டு கம்பி திருடிப் பிடிபட்ட வழக்கோ நிலுவையில் இருக்கிறது. இவைதான் மார்க்சிஸ்டுகள் அங்கே ஆற்றிய மக்கள் சேவைகள்.

தங்களது 'மக்கள் சேவையை' வி.வி.மு.வின் தலையீடின்றி தொடர வேண்டுமெனில், ஊராட்சித் தலைவர் பதவியை எப்படியாவது கைப்பற்றிவிட வேண்டும் என்று கணக்குப் போட்டுத் தேர்தலிலும் போட்டியிட்டுப் பார்த்தனர். அதிலும் தோல்வியையே கண்டனர்.

தாழ்த்தப்பட்டோருக்கான தொகுப்புவீடு கட்டும் திட்டம் வந்தது. தலைக்கு ரூ. 3000 கொடுத்தால் உடனே முடித்துவிடலாம் எனக் கூறி மக்களிடம் வசூல் செய்ய முனைந்தனர். ''இலஞ்சம் கொடுக்காமல் தொகுப்பு வீட்டைப் பெறுவோம்'' என்று வி.வி.மு. மக்களை ஒன்று திரட்டியது. 'நக்சலைட்டுகள் மக்கள் நலத்திட்டத்தை தடுக்கிறார்கள்' என்று கூச்சல் போட்டுப் பார்த்தார்கள் மார்க்சிஸ்டுகள்; எடுபடவில்லை. இப்படி ஒவ்வொரு பிரச்சினையிலும் அவர்கள் மக்களிடமிருந்து தனிமைப்பட்டார்கள். அதன் விளைவுதான் இந்தக் கொலைவெறி!

சிந்தித்துப் பாருங்கள்! நிலப்பட்டாவுக்கும், ரேசன் கார்டுக்கும், தொகுப்பு வீட்டுக்கும் மக்கள் இலஞ்சம் கொடுக்க மறுக்கும்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆத்திரப்படலாம். மார்க்சிஸ்டுகளுக்கு ஏன் ஆத்திரம் வரவேண்டும்? எந்தக் கேசும் ஒரு ஊரிலிருந்து வரவில்லை என்றால் அந்த ஊரில் 'அரசியல் சட்டத்தின் ஆட்சி' நடைபெறாதது குறித்து போலீசுக்காரன் கோபம் கொள்வதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. மார்க்சிஸ்டு கட்சிக்காரனுக்கு ஏன் கோபம் வரவேண்டும்?

ஏனென்றால் மக்களுக்கும் அதிகார வர்க்கத்துக்கும், மக்களுக்கும் போலீசுக்கும் இடையில் தரகுவேலை பார்ப்பதுதான் அவர்கள் ஆற்றிவரும் கட்சிப்பணி. மக்களிடம் இலஞ்சம் வசூலித்து அதிகாரவர்க்கத்துக்குப் பங்கு பிரித்துக் கொடுத்து விட்டு, அதில் கொஞ்சம் புறங்கையை நக்கிக் கொள்ளும் வேலையை திமுக, அதிமுக வின் வட்டம்-மாவட்டங்கள் மட்டும் செய்யவில்லை. அதே வேலையைத்தான் போலி கம்யூனிஸ்டுகளும் செய்கிறார்கள். நக்கும் அளவிலும்,



www.padippakam.com

போட்டிருக்கும் துண்டின் நிறத்திலும் மட்டும்தான் வேறுபாடு!

ஓட்டுனர் உரிமம் வாங்க ஆர்.டி.ஓ. ஆபீசுக்குப் போகும் மக்களுக்கு அங்கிருக்கும் புரோக்கர்கள் என்ன சேவையைச் செய்கிறார்களோ அதே 'சேவை'யைத்தான் மார்க்சிஸ்டுகள் மக்களுக்குச் செய்கிறார்கள். அந்த புரோக்கர்கள் தங்களது சேவையைச் சொல்லி மக்களிடம் ஓட்டுக் கேட்பதில்லை; போலிகள் ஓட்டுக் கேட்கிறார்கள் என்பதுதான் அவர்களுக்கும் இவர்களுக்கும் உள்ள வேறுபாடு.

மக்கள் போராட்டங்களையும் தாங்கள் பொறுக்கித் தின்பதற்கான கருவியாக மாற்றிக் கொண்டவர்கள் போலி கம்யூனிஸ்டுகள். கூலி உயர்வுக்காகத் தொழிலாளிகள் போராடும்போது தொழிலாளிகளின் கோபத்தைக் காட்டி முதலாளிகளிடம் கமிசன் பார்க்கிறார்கள். உள்ளூர் ஆதிக்க சக்திகளுக்கு எதிரான பிரச்சினைகள் வரும்போது, பத்தே பத்து சுவரொட்டியும் துண்டுப்பிரசுரமும் அச்சடித்து அதிகாரிகளுக்கும் போலீசுக்கும் 'பத்திரிக்கை' வைக்கிறார்கள். இதனைத் தொடர்ந்து காதும் காதும் வைத்தாற்போல நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தையிலும் காசு பார்க்கிறார்கள்.

வேறு என்ன விதத்தில் கட்சிப் பணி ஆற்ற முடியும் என்பதை உண்மையிலேயே அவர்கள் அறியமாட்டார்கள். அரசியல் போராட்டம், வர்க்கப் போராட்டம் என்பது பற்றியெல்லாம் கார்த்திக் கட்சிக்காரனுக்கு எவ்வளவு தெரியுமோ, அவ்வளவுதான் இந்த காரத் கட்சிக்காரர்களுக்கும் தெரியும். அதனால்தான் காரப்பட்டின் கிரிமினல்கள் தங்களை வழிநடத்த வல்லது மார்க்சிஸ்டு கட்சியே என்பதைக் கண்டு கொண்டிருக்கிறார்கள்.

இலஞ்சத்தில் ஊறிய அரசு ஊழியர்கள், சாதிவெறியர்கள், சமூக விரோதிகள், முதலாளிகளின் கையாட்களான தொழிற்சங்கத் தலைவர்கள்.. இவர்களெல்லாம் அங்கே 'தோழர்கள்'. 'நான் முதலில் பார்ப்பான் அப்புறம்தான் கம்யூனிஸ்டு' என்று பிரகடனம் செய்யும் அமைச்சர், பேரனுக்கு பூணூல் கல்யாணப் பத்திரிக்கை வைக்கும் சபாநாயகர், கொலைகார சங்கராச்சாரியை அரசு விருந்தினராக உபசரிக்கும் அச்சுதானந்தன், 'அத்வானி என் நெருங்கிய நண்பர்' என்று அறிவிக்கும் புத்ததேவ்.. இவர்களெல்லாம் தலைவர்கள்.

அடி முதல் நுனி வரை அழுகிப்போன இந்தக் கட்சி அம்பானிக்கும் டாடாவுக்கும் அடியாள் வேலை பார்ப்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை.

'தேர்தல் பாதையா, வன்முறைப் பாதையா?' என்பதுதான் நமக்கும் நக்சலைட்டுகளுக்கும் உள்ள வேறுபாடு என்று அவர்கள் கூறுகிறார்கள். இல்லை, 'ஆளும் வர்க்க அடிவருடித் தனமா, புரட்சியா?' என்பதில்தான் வேறுபாடு. 'வன்முறையை யாருக்கெதிராகப் பயன்படுத்துவது?' என்பதில்தான் வேறுபாடு.

சமீபத்தில் டெல்லியிலுள்ள மார்க்சிஸ்டு கட்சியினுடைய தலைமையகத்தில் புகுந்து மத்தியக் கமிட்டி உறுப்பினர்களையே தாக்கினார்கள் ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள். ஆனால் நந்திகிராமிலும் சிங்கூரிலும் மக்களுக்கு எதிராக 'ஆயுதப்போராட்டம்' நடத்திய மார்க்சிஸ்டுகள், பாரதிய ஜனதாவுக்கு எதிராகத் தம் சுண்டு விரலைக்கூட அசைக்கவில்லை. மதுரையில் லீலாவதி கொலை, சாத்தூரில் கள்ளச்சாராய முதலைகளுக்கு எதிராகப் போராடிய தோழர் கொலை, திருப்பூரில் சாதிவெறியர்களை எதிர்த்த தோழரின் படுகொலை.. என நேர்மையான தோழர்களையெல்லாம் எதிரிகளின் அரிவாளுக்குக் காவு கொடுத்திருக்கிறார்கள் மார்க்சிஸ்டுகள்.

இராசேந்திரனுக்கும் ஏழுமலைக்கும் எதிராக உயர்ந்த அவர்களுடைய அரிவாள், தங்களது தோழர்களைக் கொன்ற கொலைகாரர்களுக்கு எதிராக உயர்ந்ததில்லை. உத்தப்புரம் சாதிவெறிச் சுவரின் பத்து செங்கற்களைத் தட்டி விடுவதற்கு போலீசுப்படை வரும்வரை காத்திருந்தார்கள் மார்க்சிஸ்டுகள். ஆனால் காரப்பட்டில் தலித் விவசாயிகளின் வீடுகளைச் சூறையாடுவதற்கு மட்டும் அவர்களுடைய கைகள் தயங்கவேயில்லை.

ஆளும் வர்க்கத்தையும் அதிகார வர்க்கத்தையும் எதிர்ப்பதற்கு மொட்டை போடும் போராட்டம், அரை நிர்வாணப் போராட்டம், ஒப்பாரிப் போராட்டம்! புரட்சியாளர்களை எதிர்ப்பதற்கு மட்டும் ஆயுதப் போராட்டம்! இதுதான் மார்க்சிஸ்டு கட்சி!

ஆம். இவர்கள் சிவப்புப் போர்வை போர்த்திய பாசிஸ்டுகள். சமாதானம் பேச வந்த இராசேந்திரனை, ''அஞ்சு பொம்பளப் புள்ளங்கடா, என்னக் கொல்லாதீங்கடா'' என்று நிராயுதபாணியாக நின்று மன்றாடிய அந்த ஏழை விவசாயியை, ஈவு இரக்கமின்றி வெட்டியது மார்க்சிஸ்டுகளின் அரிவாள். கும்பிட்ட கைகளை வெட்டித் தள்ளிய குஜராத் இந்து வெறியர்களின் அரிவாளுக்கும் இந்த அரிவாளுக்கும் என்ன வேறுபாடு? அந்தக் கிரிமினல்களுக்கும் இந்தக் கிரிமினல்களுக்கும் என்ன வேறுபாடு? அது காவி, இது சிவப்பு என்பது மட்டும்தான்.

கொலைகளின் மூலம் புரட்சியாளர்களை நசுக்கி விடலாம் எனப் பாசிஸ்டுகளைப் போலவே கனவு காண்கிறார்கள் மார்க்சிஸ்டுகள். அந்தக் கனவு விரைவில் கலையும். கலைப்போம்!

• பாலன்

### அவதூறு

காரப்பட்டிலோ விழுப்புரத்திலோ இதுவரை வாய்திறக்கத் துப்பில்லாத மார்க்சிஸ்டுகள், சென்னை சேத்துப்பட்டில் தங்களது கட்சியைச் சார்ந்த ஜனநாயக வாலிபர் சங்கத்தின் சார்பில் தெருமுனைக் கூட்டம் நடத்தி, வி.வி.மு.வுக்கு எதிராக அவதூறு செய்திருக்கிறார்கள்: ''காரப்பட்டு வி.வி.மு.வுக்கு கள்ளச்சாராய வியாபாரிகளுடன் உறவு இருக்கிறது. நக்சலைட்டுகளாகிய அவர்கள் சிஐஏ உளவாளிகள். காரப்பட்டில் ஆதிக்கம் செய்யும் வி.வி.மு. வின் ஏழுமலை நாயக்கருடைய அடாவடித்தனத்தை மார்க்சிஸ்டுகள் தட்டிக் கேட்டபோது அவர்கள் தாக்கினார்கள். அதில் சின்னதப்பு நடந்துவிட்டது.''

இந்தப் பொய்ப்பிரச்சார இயக்கத்தை மார்க்சிஸ்டு கட்சியின் மாநிலத்தலைமை திட்டமிட்டுக் கொடுத்திருப்பது தெரிகிறது. பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டாமா? தலித் சமூகத்தைச் சேர்ந்த ஏழுமலையை, 'நாயக்கர்' ஆக்கி விட்டார்கள் மார்க்சிஸ்டுகள். மற்ற பொய்களுக்கு நாங்கள் விளக்கம் தரத் தேவையில்லை. விழுப்புரத்திலிருந்து 15 கி.மீ தொலைவில்தான் இருக்கிறது காரப்பட்டு. மார்க்சிஸ்டு கட்சியில் நேர்மையானவர்கள் யாரும் மிச்சமிருந்தால், நேரே காரப்பட்டுக்குச் சென்று யாருடைய யோக்கியதை என்ன என்பதை அவ்வூர் மக்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளட்டும்!



படிப்பகம்

www.padippakam.com

## சிறுகதை:

# நாய்க்கர்

கொழந்தசாமி, பெரிய வூட்டுக்கு அமெரிக்காவுலேந்து பெர்சா பார்சல் வந்துச்சின்னு கேள்விப்பட்டேன்.. உனக்கு எதுனாச்சும் கொடுத்திருப் பாங்களே? சும்மா சொல்லுயா நாங்க கேக்க மாட்டோம்!

''தோ! கையில இந்த நாயதான் கொடுத்திருக்காங்க. எல்லாந் தெரிஞ்சு கேக்குறியே.. ஊம், வாய்தான் வாழப் பழம் கை கருணைக்கிழங்கு. போவி யா'' டீக்கடை வாசலில் மூங்கில் தூணில் சுண்ணாம்பை ஒரு விரலால் தடவிக்கொண்டே சுப்பையனை நிமிண்டி விட்டான் கோபு.

''என்னய்யா இப்புடி சொல்ற தோட்டம் தொறவு சாவி, காரு, கொட்டா சாவி, போரு கொட்டா சாவி.. எல்லாம் உன் கையுலதான்ங்கு றாங்க..'' நீட்டி முழக்கினான்.

''ஏன் நாய்க்கரு வூட்டு பீரோ சாவியே எங்கிட்டதான்னு சொல்லேன். ஒன் வாய்முகூர்த்தம் பலிக்கட்டும்'' பேசிக்கொண்டிருக்கும் போதே, இறுகப் பிடித்திருந்த சங்கிலியை இழுத்த படியே நாய் கடைக்குள் போகப் பாய, குழந்தைசாமி தடுமாறிப் போனார்.

''யோவ் என்னயா இது ஆளையே இழுத்துத் தள்ளிடும் போலருக்கு, ஏய்! ஸ்! அமெரிக்காவா சும்மாவான்னேன்.''

''பின்னே அது நாய் மாதிரியா இருக்கு, கன்னுக்குட்டி சைசுக்கு இருக்கு. யோவ் இழுத்துப் புடிய்யா. இருக்குற எலும்ப இது லாவிடப் போகு து'' சுப்பையன் தள்ளி ஓடினான்.

''தோ.. தோ.. பிசி.. பிசி.. இங்க வா.. இத இழுக்க நாமே ஒரு கிலோ கறி திங்கணும்டா கோபு''

''என்னயா பிசி, பிஸிங்குற.. என்னா பேரு அது?''. ''அது என்னமொ நாய்க்கரு அப்படிதான் கூப் புடுவாரு. அது என்ன பிஸியோ.. பீசியோ... எவனுக்கு வாயில நொழையுது. வரட்டா! டீக்கடைல நாய வச்சிட்டு நின்னேன்னு எவனாவது போட்டு வுட்டா அந்தாளு வள்ளுன்னு பாய்வாரு'' சுற்றுமுற்றும் ஜாடை பார்த்துக் கொண்டார் குழந்தைசாமி.

''சரி எரைப்பு, ஆஸ்த்துமான்னியே இப்ப எப்படி இருக்கு?''

''காலங் காட்டியும் நாய மேய்க்க எழுந்திருச்சா பனி ஒத்துக்காம எரப்பு புடுங்கி எடுக்குது. லேட்டா போனா அந்தாளு புடுங்கி எடுக்குறாரு. நாய பாக்குறதா? நாய்க்கர பாக்குறதான்னு லோல் படுறேன், மாசம் இந்த அறுநூறு ருவாய்க்கு தோட்டம், காரு கொட்டா, போரு கொட்டா... பத்தாததுக்கு நாய்க் கரம்மாவுக்கு கட கண்ணிக்கு போவணும். புள்ள ஒழுங்கா இருந்தா வயசான காலத்துல எனக்கிது தேவையா? சொல்லு!''

''நாகப்பட்டிணத்துல ஒரு பாய் மருந்து தர்றாராமே! போய் பாக்குற துதானே.''

''எல்லாம் பாத்தாச்சு கோபு... இன்னும எமன போய் பாக்க வேண்டி யதுதான். ஏதோ தெனம் கடத்தெருவுல இந்த மாட்டுக்கறியும், சூப்பும் உள்ளார வுட்டா தேவலாம் போல இருக்கு. நேரம் போவுது வரேன்.''

கிழக்கு மேற்காக, நாய் குழந்தை சாமியைப் பிடித்து இழுக்க ''அவுத்து வுட்டா உனக்கும் எனக்கும் தேவ லாந்தான். அப்பொறம் நாய்க்கரு உன் னையும் என்னையும் வுட்டுட்டு தேட மாட்டாரு ஆமாம்!'' பேசிக்கொண்டே வீட்டை நோக்கி வருவதைப் பார்த்த நாய்க்கர் புருவத்தை நெரித்து கூர்ந்து நாயைக் கவனித்தார்.

''என்னடா பிஸிய ஏதோ திட்டி கிட்டே வரியா?''

''அய்யய்யோ அதெல்லாம் இல் லீங்க, அங்க இங்க ஓடாத அய்யா தேடுவிங்கண்ணு...'' வார்த்தையை முழுவதுமாக முடிக்காமல் பணிவுடன் வளைந்து சங்கிலியைக் கழட்டிவிட, தயங்கி நின்று வெளியே திரும்பிப் பார்த்த நாயைச் செல்லமாக சேர்த்து இழுத்து அணைத்தார் நாய்க்கர்.

''வாடி செல்லம்.. என்ன வேணும்? என்ன வேணும்?'' குனிந்து முதுகில் முத்தம் கொடுத்து கொஞ்சினார்.

''என்னடா நாய்க்கு ரொம்ப எரைக்குது, செருமுற மாதிரி வருது, அட்ட பக்கம் போறேன்னு எதுவும் பொறைய கிறைய வாங்கி போட்டுறாத; வீட்டுப் பக்கம் போறப்ப சோத்த கீத்த வச் சிடாத. உன் வீட்டு ரேசன் அரிசி யெல்லாம் ஒத்துக்காதுடா'' நாய்க்கர் நாய் முகத்தையே ஆராய்ந்தார்.

''அய்யய்ய அதெல்லாம் இல் லீங்க.. ஓடியாந்தது எரைக்குங்க..'' வந்த இரைப்பை அடக்கிக் கொண்டு படபடப்புடன் குழந்தைசாமி ''எனக்குத் தெரியாதுங்களா.. வீட்டரிசி பொன்னி சூப்பர்ல அதுக்குப் போடுறீங்க!''

''ஆமாம் மறந்தாப்ல ஏதும் தந் துடாத.. இந்த மாசம் அத டாக்டர் செக்கப் வேற அழச்சிட்டு போவ ணும்'', சற்று குரலைத் தாழ்த்தி ''அப் புறம்! நாய்கிட்ட நெருக்கமா போயி வாய்ப்பக்கம் கொஞ்சுறேன்னு பேசிடாதே! உனக்கு ஆஸ்துமா இருக் குல்ல''

'சரிங்க' என்று மவுனமாக குழந் தைசாமி தலையாட்ட ''அதுக்கில்லடா, சிலருக்கு நாய்மூச்சு பட்டா ஒத் துக்காது! உனக்காகத்தான் சொல்ல வந்தேன்; காலைல நேரத்தோட வா! லேட்டானா பிஸி வெளிக்கி போக தவிச்சு போவுது''

''கோழி கூப்புட வந்துர்றேங்க'' வீட்டுக்கு கிளம்பி கேட்டுக்கு வெளியே போன குழந்தைசாமியை ஏக்கமாக பார்த்தபடி நாய்க்கர் கைப்பி டிக்குள் திமிறிக் கொண்டிருந்தது நாய்.

●●●

''வந்து நிக்குற ஆட்டை கட்டி வைக்காமகூட எங்க போனா இவ.. மருதாயி, மருதாயி'' கத்திக் கொண்டே குடிசைக்குள் குனிந்தார் குழந்தைசாமி.

''தே! ஏன் இப்புடி உசுரு போற மாதிரி கத்துற.. டான்னு சாப்புட வருவி யேன்னு கருவாடு வைக்க உள்ளாற வந்தேன், ஆஸ்த்துமாவுக்கு ஆவா துன்னா அடங்குறியா. செஞ்சாலே ஆச சுன்னு வாங்கி குடுத்து வுட்ருக்க!''

''ஆமாம் எதுதான் ஆவுது தின்னு புட்டாவது சாவுறேன் போ! என்ன இங்க அய்வேசு கிழியுது!''

''அதான கட்னவ்ள கூட வுட்ருவ; இந்த கருவாட வுடமுடியாது உன்



படிப்பகம்

www.padippakam.com

னால'', முனகிக் கொண்டே தட்டில் சோற்றை எடுத்து வைத்தாள்.

''சே ச்சூ.. கொழம்பை கொதிக்க வுட்லெ, ஊருபட்ட பூனைங்க, உர மொறைய கூப்புட்டுட்டு வருதுங்க...'' வளைய வளைய வந்த பூனைகளை விரட்டியடித்தாள்.

''அட நொப்பன் தன்னான.. இத பாரு!'' குழந்தைசாமி திடுக்கிட, ''அட நாய்க்கரு வூட்டு நாயி! எப்புடி செயினை அறுத்துட்டு வந்துச்சு'' மருதாயி கன்னத்தில் கைவைத்து அதிசயித்தாள்.

''நாய்க்கரு கட்டாம வுட்ருப்பாரு! பிசி.. தோ! வா! வா!''

வாலாட்டிக்கொண்டே, சாப்பாட்டில் கைவைத்த குழந்தைசாமியின் முதுகில் வந்து அணைந்து கொண்டது நாய்.

''தே... என்ன அறிவு பாரு! எடஞ்ச பண்ணாம ஓரமா உக்காந்துகிச்சுங்குரேன்'', மருதாயிக்கு திகைப்பு கூடியது.

''நாயக்கரு வூட்ல இருந்தாதான் அது ஏறுக்கு மாறு! இங்க எப்படி சொன்னதை கேக்குது பாரு! நாய்க்கரு கூடவே இருந்துச்சு இதுவும் கொணங்கெட்ட நாயாகிடும்.''

''தே ரவ சோறு வையேன் பாவம்!''

''ஏய் நீ வேற நாய்க்கரு வேற நாயை மோந்து, மோப்பம் பிடிப்பாரு. தெரிஞ்சுது வுட்டுட்டு தேட மாட்டாரு!'' இடது கையால் தடவிக்கொண்டிருக்க ''கொழந்தசாமி நாயி வந்துச்சா நாய்க்கரு தேடுறாரு. உன்ன வரச் சொன்னாரு யோவ்!'' கூவிக்கொண்டே சைக்கிளில் இருந்தபடியே ஒரு காலை ஊன்றினான் சுப்பையன்.

''தோ கௌம்பிட்டேன்.. சாப்பிட்டுக் கொண்டிருந்த கையை உதறியபடி நாயைப் பிடித்துக்கொண்டு நடந்தார் குழந்தைசாமி.

''அய்யே எமனாட்டம் வந்துச்சு. செத்த அந்த சோத்த திங்க வுட்டுச்சா'', மருதாயி ஆத்திரத்தில் நாயை முறைத்தாள்.

''தே! வாயில்லாதது, நாய்க்கரு தேடுதறதுக்கு நாய் என்னா பண்ணும், அமெரிக்காவுல புள்ளைய வுட்டுட்டு கூட இருப்பாரு, அஞ்சு நிமிஷம் நாயை வுட்டுட்டு இருக்கமாட்டாரு, தோ வந்துடறேன்!''

''ஆமாம் உனக்கு ரொம்ப வாயிருக்கு! அதாவது இருக்க புடிக்காம அத்துகிட்டு வந்துடுது... நீயும் இருக்கியே!'' மருதாயி முனகிக் கொண்டே தட்டை மூடினாள்.

●●●

''ஏய்... ஸ்! நாய்க்கரு வூட்டு வண்டிதான அது, காருக்குள்ள கழுத்த நீட்டிட்டு என்னமா போவுது பார்ரா நாயி!''

''திமிற பார்ரா பழிப்பு காட்டுற மாதிரி வாயை காட்டிட்டு போவுது.''

''சே! அப்புடி பாக்குறா! நாய்க்கருக்கு குஷி வந்தா போரு கொட்டா பக்கம் போவாரு! இல்லேன்னா நாயை தூக்கிகிட்டு கார்ல சுத்துவாரு!'' சுப்பையன் பொடிவைத்துப் பேச, தங்கையன் வாய்விட்டு சிரித்தான்.

''ஏ சுப்பையா! நாய்க்கரு நல்ல மூடுல இருக்காரு, அறுப்பறுத்த மூணு நாள்கூலி பாக்கி வச்சிருக்கார்றா. இப்ப போனா வாங்கிட்டு வந்துடலாம். இரு பதமாபோயிட்டு வந்துடறேன்.''

தங்கையன் நாய்க்கர் வீட்டுப் பக்கம் போக, அங்கே ஏற்கனவே கேட்டுக்கு வெளியே சின்னப்பொண்ணு குழந்தையை வைத்துக் கொண்டு நின்றிருந்தாள்.

''எங்க வந்த?''

''புளி உடைச்ச காசு வாங்க வந்தேன்! லேசுல வர மாட்டேங்குது, ஆணும் அப்புடி, பொண்ணும் அப்புடிதானா இருக்கும்?!''

''சின்னப்பொண்ணு வருத்தப் படாதே பேசாம இரு நாய்க்கரு வர்றாரு'' தங்கையன் அமைதிப்படுத்தினான்.





படிப்பகம

www.padippakam.com

''வாடா'', நாய்க்கர் குரலுக்கு போட்டியாக நாயும் குரைத்தது. சின்னப்பொண்ணு பின்னால் நகர, இடுப்பிலிருந்த பிள்ளை நாயைப் பார்த்து கையை நீட்டியது.

''தே பாப்பா போவாத புடுங்கி வச்சுடும்'', வெடுக்கென நாய்க்கர் சின்னப்பொண்ணுவை கூர்ந்து பார்க்க, ''பாப்பா நாயைப் பாரு, தோ நாயைப் பாரு!'' என்று சின்னப்பொண்ணு நாயைக் காட்டினாள். திண்ணை சோபாவில் சிரித்துக் கொண்டு உட்கார்ந்த நாய்க்கர் பிஸ்ஸி, பிஸ்ஸி என்று நாயை வாரி மடியில் போட்டார்.

''என்னங்க பிசி என்னமோ மாதிரி இருக்கு?'' நைசாக தங்கையன் பேச்சுக் கொடுத்தான். ''இவ்வளவு நேரம் ஏ.சி. ரூம்ல இருந்துச்சா அதான் என்ன மாதிரி அதுக்கும் வெளியில வந்தா ஒரு மாதிரி ஆவுது''. ''இங்க பாரு இங்க பாரு,'' கொஞ்சிக் கொண்டே கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை பிஸியின் கழுத்தில் மாட்டி அழகு பார்த்தார் நாய்க்கர்.

''நல்லா இருக்குல்ல?''

''சூப்பரா இருக்குதுங்க'' என்று சின்னப்பொண்ணு சிரிக்க, தலையாட்டிக் கொண்டே தங்கையன் சின்னப்பொண்ணு முகத்தைப் பார்த்தபடி தானும் சிரித்துக் கொண்டான். கழுத்தை ஆட்டி ஆட்டி உதறிப் பார்த்தது நாய். ''ஏய்! போட்டுக்க நாயே! அஞ்சு பவுனு'', செல்லமாய் தாடையை தட்டினார் நாய்க்கர். ஊவ், ஊவ் என்று அவர் பிடியிலிருந்து திமிறியது நாய்.

''அத ஏண்டா கேக்குற தங்கையா நீ! நேத்து நைட்டு நானும் வீட்டுலயும் ஆப்பிள் நறுக்கி சாப்புடுறோம். குடுக்க குடுக்க இன்னும் கேக்குது! கறி தின்னாலும் நம்ப வூரு நைஞ்ச கறியத் திங்க மாட்டேங்குது. பெசலா டவுன்ல போய் வாங்கிட்டு வந்தா பொண்ணாட்டுக் கறியா கேக்குது, ஆளப்பாரு ஏய் ஏய்!''

''சும்மாவா உங்க வளர்ப்பாச்சே'', சின்னப்பொண்ணு செயற்கையாய் சிரித்தாள். திடீரென உள்ளே நாய்க்கர் எழுந்துபோக, தானாக நினைவு வந்து பணம் எடுக்கத்தான் போகிறார் என்று தங்கையன் எதிர்பார்க்க, கையில் செல்போனோடு வந்த நாய்க்கர், ''ஏய் பிஸி அமெரிக்காவுலேந்து அண்ணன் பேசுறான் கேளு, கேளு'' செல்போனைக் கொண்டு நாயின் காதில் நெருக்கி வைக்க ''லொள், லொள்'' என்று கத்திக்கொண்டு பயந்து ஒதுங்கியது நாய். ''ஏய்! அமெரிக்காவுலேந்து பேசுறான் கேள்றி பிஸி'', நாய்க்கர் நாயை விடவில்லை.

''ஏங்க அதுக்கு கேட்குமா?'' சின்னப்பொண்ணு வாயைப் பிளக்க ''தே! நீ ஒண்ணு நாயின்னா கேக்காதா பின்ன, அது டி.வி.யே பாக்குது!'' தங்கையன் சின்னப்பொண்ணு வாயை அடக்கி எப்படியாவது விசயத்துக்கு வரத் தவித்தான். ''ஏய் தங்கையா அதுவும் இந்த கோலங்கள் போட்டா அந்த நேரத்துக்கு என்னா அமைதியா பாக்கும்ங்குற! அத வுடு, ஒருநாள் சுப்பையன் என் காரு பக்கம் போயிட்டான், என்னமா அவன் மேல



**''ஈரல் எடுத்து தின்னா உடம்புக்கு நல்லதுன்னு நான் அந்தாள்கிட்ட அம்பது ரூவா கேக்குறேன், 'அப்புறம் பாக்கலாம்'னுட்டு, எனக்கு நேராவே நாய்க்கு கறி வாங்க டவுனுக்கு ஆள் அனுப்புறாருங்குறேன்''**

பாயுதுங்குற..'' நாய்க்கர் சொல்லிக் கொண்டே போக சின்னப்பொண்ணு ''ஒங்க வூட்டல ஒண்ணால்ல அது இருக்கு! நம்ம வூட்டுப் பொருளை ஒருத்தர் தொட்டா வுடுமா? ராசா மாதிரி உங்க அந்தஸ்துக்கு அத வச்சிருக்குறீங்க, நன்றிய வுடுமா?'' மேலும் வாயைக் கிளறிய சின்னப்பொண்ணை முறைத்துப் பார்த்த தங்கையனுக்கு ஆளைவிட்டால் போதும் என்று ஆகிப் போனது.

''ஏ தங்கையா! எங்கெல்லாம் தேடுறது.. உன் வூட்டல உன்னைத் தேடுது'' சுப்பையன் குரல் கொடுக்க, ''தோ என்னன்னு கேட்டுட்டு வந்துடறங்க'' என்று தங்கையன் சமயம் கிடைத்ததென்று நடையைக் கட்டினான். 'என்ன காசு பேந்துச்சா' என்று சுப்பையன் ஜாடையில் கையைக் காட்டி கேட்க ''ஊக்ஹூம்'' என்று உதட்டைப் பிதுக்கியபடி தெருவுக்கு வந்தான். குழந்தைசாமி புரிந்து கொண்டு ''யோவ்! இருந்து வாங்கிட்டுப் போயா'' என்று கையைப் பிடித்து இழுத்தார்.

''ஏ சாமி! அந்தாளு ஏதனாவது நம்பள பத்தி கேக்குறாரா? எவனால முடியும் நாயைப் பத்தி நாலுமணி நேரம் பேசுவான். காசே போனாலும் அய்யாசாமி அப்பாடா நீ ஆள வுடு! நீதான் அந்தாளுக்கு லாயக்கு!

''நீ வேற நானே உடம்புக்கு ஈரல் எடுத்து தின்னா நல்லதுண்ணு காலைல அம்பது ரூவா கேக்குறேன்.. அப்புறம் பாக்கலானுட்டு எனக்கு நேராவே டிரைவர்கிட்ட நாய்க்கு கறி வாங்க டவுனுக்கு அனுப்புறாங்குறேன்.. கொடுமை இல்ல இது.. ஏ அப்பா! மணி ஆகுது! போரு கொட்டாகிட்ட போகணும், மடையை மாத்திட்டு வந்து இந்த நாயை அழைச்சிட்டு வேற நடக்கணும்.. வா பின்ன.. நாய்க்குள்ள பவுசு நமக்கில்ல..'' முனகிக் கொண்டே அசைந்து அசைந்து நடந்தார் குழந்தைசாமி.

●●●

''அன்னைக்குத்தான் பாத்தேன் எல்லக் கல்லாட்டம் இருந்தாரு நாய்க்கர், இப்புடி சாஞ்சிடுவார்னு யாரும் நெனக்கல.''

''அது என்னவோ ரத்தக்கொதிப் பாம்ல, ஓவராம்.''

''நேத்து பூரா ராவுல நாய் கத்திருக்கு! யமன் அது கணணுக்கு தெரிஞ்சிருக்கு''

''நாயை மல்லுக்கட்டி குளிப்பாட்ட போனவரு செத்த நேரத்துக்கெல்லாம் படபடத்து டாக்டர கூப்புடுறதுக்குள்ள உசுரு போயிடுச்சாம்.'' கட்டிலில் கிடத்தியிருந்த நாய்க்கர் பிணத்தைப் பார்த்து ஆளாளுக்கு பேசிக் கொண்டிருந்தனர். நாய்க்கர் வீட்டம்மாள் அப்படியே கணவன் தலைக்குப் பக்கத்தில் பிரமை பிடித்தவள் போல உட்கார்ந்திருந்தாள்.

''தோ பாருப்பா என்னதான் கிராமமா இருந்தாலும் எல்லாரையும் வீட்டுக்குள்ள விட முடியுமா? பேசாம கட்டிலைத் தூக்கி அந்த ஜன்னலோரம் வச்சு கதவை திறந்த வச்சா, சந்து வழியா ஜனம் பாத்துட்டு போகட்டும்'' நாய்க்கர் வீட்டு உறவினர்களில் வளப்



படிப்பகம்

www.padippakam.com

பமான ஒருவன் ஆலோசனைகளைக் கூற, பிணத்தைக் கூடத்திலிருந்து ஜன்னலோரம் நகர்த்தினர்.

''ஏ புள்ள! பொம்பள ஆளுங்க எல்லாம் மளமளன்னு சந்து வழியா வந்து பாத்துட்டு போங்க சீக்கிரம் அய்யாவ எடுத்தாயிடும்'' குழந்தைசாமி தெருப்பெண்களுக்கு வழிகாட்டினார்.

''நாய வுட்டுட்டு எப்புடித்தான் போனீங்களோ! சாவுறப்ப கூட கைய நீட்டி நீட்டி அங்க காமிச்சுருக்காரு.''

''அந்த பீரோ பக்கமா?'' செல்வி கேட்க ''சே! சத்தம் போடாத நாயை காட்டிருக்காருங்குறேன்.. இவ ஒருத்தி வெவரம் கெட்டவ!''

''சாவுற நேரத்துல நாயி இல்லையாம்ல; கொழந்தசாமி நடத்தறதுக்கு கூட்டிட்டு போயிட்டாராம்லா. அய்யோ பாவம்.. அந்த நாய் மூஞ்ச பாத்துட்டு கண்ணை மூடிருக்கலாம்.. நாயை நாயாவா வளர்த்தாரு அதற்கு என்னா தீனி? என்னா சோப்பு? என்னா சவரசனை?''

''அட என்னமொ போக்கா! அவுதி கிவுதி படாம ஆருக்கும் படுத்தாம... நாய்க்கருக்கு நல்ல சாவுதான் போ!'' கோமதி முந்தானையால் வாயை மூடிக் கொண்டே முனகினாள். நாய் ஆமோதிப்பது போல தலையாட்டி விட்டு, திண்ணைப்பக்கம் வந்தது.

''கோவிந்தா.. கோவிந்தா..'' பாடையைத் தூக்க கூட்டம் பின் தொடர்ந்தது. ''எங்க அந்த நாயி அய்யாவுக்கு முன்னாடி சுடுகாட்டுல போயி நிக்குதா?'' மருதாயி பேசிக் கொண்டே தேட, திண்ணை மூலையில் இருந்த கிண்ணத்தில் இருந்த பழைய சோற்றைப் பொறுமையாகத் தின்று கொண்டிருந்தது நாய்.

''சே! இங்க பாரேன் ஆசையா வளர்தவங்க செத்தா நாய் சோறு திங்காம கால் மாட்ல கெடக்கும், இந்த நாயைப் பாரு,'' மருதாயி பொருமித்தள்ளினாள்.

அருகே வந்த குழந்தைசாமி, ''அடப்போவியா! நாய்க்கர்கிட்ட நான் பட்ட பாடவிட இந்த....'' முழுமையாகச் சொல்லி முடிப்பதற்குள் பக்கத்தில் நாய்க்கர் வீட்டுப் பெண்கள் வர, நாயைப் பிடித்து தரதரவென இழுத்துக் கொண்டே ''கோயிந்தா.. கோயிந்தா..'' என்று பாடையை நோக்கி ஓடினார்.

● துரை.சண்முகம்

# கெட்டாலும் மேன்மக்கள்...

வேலூர் சிறையில்
கண்ணீரால் முறையிட்ட
ஆனந்த பவனத்து
குலக்கொழுந்துக்கு,
நளினி
என்ன பதில்
சொல்லியிருக்கக் கூடும்?
தெரிந்து கொள்ள
யாருக்கும் ஆர்வம் இல்லை.
பதில் கிடக்கட்டும்.
இந்தப் புதுமை
புல்லரிக்க வைக்கவில்லையா?

குற்றவாளி
தனது குற்றத்தை உணர்ந்து
குமைய வைக்கும் கண்ணீர்...
மனங்களிடையேயான
அகழிகளை நிரப்பும்
பாதிக்கப்பட்டவர்களின்
பரிசுத்தமான கண்ணீர்...
என்ன இருந்தாலும்
மேன்மக்கள் மேன்மக்களே!

ஆனால்,
கேவலம்
அவ்வாறு
கண்ணீர் சிந்திக் கதறியழும்
வாய்ப்பையேனும்
என்றைக்காவது
எமக்கு வழங்கியிருக்கிறீர்களா
எசமானர்களே....?

தகப்பன் பாசம் கூட
சீமாட்டிகளுக்குத்தான்
சொந்தமோ?
மணிப்பூரின் தாய்மார்கள்
மன்மோகன் சிங்கை சந்திக்கவும்,
நரோடா பாட்டியாவின்
இசுலாமியக் குழந்தைகள்
மோடியைக் கண்டு முறையிடவும்...
முறையிட அல்ல,
மனுக் கொடுப்பதேனும்
சாத்தியமா?

இவற்றுக்கும்
உளவுத்துறை
உறுதுணையாய் வருமா?

சீமாட்டிகளின்
பொழுதுபோக்குகளில்
சுவாரசியத்திற்குப்
பஞ்சமில்லை.
அதனால்தான்
அந்த சில நாட்களில்
அரைமணி நேரத்திற்கு
ஒரு விவசாயி
தற்கொலை செய்து கொள்ளும்
இழவு நாட்டில்,
சற்றும் துணுக்குறாமல்
நடைபெறும்
வக்கிரக் கொண்டாட்டத்தில்
அம்மையார் பிரசன்னமானார்.

வேலூர் சிறை 'த்ரில்'
அலுத்துப் போயிருக்கலாம்.
ஷாருக்கானின் அருகாமையில்
புதிய 'த்ரில்'
தேவைப்பட்டிருக்கலாம்.
அல்லது
அங்கும் கூட
அன்பிற்குரிய
அப்பா தென்பட்டிருக்கலாம்.
21-ஆம் நூற்றாண்டுக்கு
இந்தியாவை அழைத்துச் செல்லும்
ராஜீவின் கனவு
20-20இல் தானே
நிறைவேறுகிறது...

ஆனால்,
பிரியத்திற்கிடமற்ற
பிரியங்கா அம்மையாரே...
ஒன்றை மட்டும்
நினைவில் கொள்ளுங்கள்...
தண்ணீரை விட மட்டல்ல,
கண்ணீரை விடவும்
இரத்தம் அடர்த்தியானது.

● பால்ராஜ்



படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்கா:

# வெள்ளை நிறவெறி கருப்பு உண்மைகள்

நாற்பத்து நான்காவது குடியரசுத் தலைவர் தேர்தலுக்காகக் களை கட்டியிருக்கும் அமெரிக்காவில் இந்த முறை சுவாரசியம் தருபவர் பாரக் ஒபாமா. குடியரசுக் கட்சி சார்பில் ஜான் மெக்கைன் போட்டியிடுவது உறுதியாகிவிட்ட நிலையில் ஜனநாயகக் கட்சி சார்பில் ஒபாமாதான் வேட்பாளர் என்ற முடிவு தற்போது வந்துவிட்டது. கருப்பினத்தைச் சேர்ந்த முதல் அதிபர் என்ற வகையில் ஒபாமா வென்றால் வரலாற்றில் இடம்பிடிப்பார் என்று கூறுகிறார்கள்.

சற்றே முன்னிலையில் இருப்பதாக மதிப்பிடப்படும் ஒபாமாவை வெள்ளை நிறவெறி அமைப்புகள் கடுமையாக எதிர்த்துப் பிரச்சாரம் செய்து வருகின்றன. ஹவாய்த் தீவைப் பின்புலமாகக் கொண்ட அவர் அமெரிக்கரே இல்லை என்றும், அவரது உறவினர்களில் சிலர் முசுலீம்களாக இருப்பதால் அவரும் முசுலீம் என்றும் பிரச்சாரங்கள் நடக்கின்றன.

மற்றொருபுறம் ஒபாமா நிறுத்தப்பட்டிருப்பதை வைத்து அமெரிக்கா நிறவெறியைக் கடந்து வந்துவிட்டதெனவும், கருப்பின மக்களின் விடுதலையில் மற்றுமொரு மைல்கல் இது எனவும் சிலர் பேசுகிறார்கள். இங்கேயும் முதல் தலித் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன், முதல் தலித் உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி பாலகிருஷ்ணன் முதலானவர்கள் நியமிக்கப்பட்டபோது குறிப்பாக தலித் அறிவுத்துறையினர் அப்படித்தான் கொண்டாடினார்கள். ஆனால் நடைமுறை உண்மை என்னவோ தலித் மக்கள் மீதான வன்கொடுமைகள் ஆண்டுதோறும் அதிகரிப்பதையே காட்டுகின்றது.

ஒரு சில கருப்பினத்தவரோ, தலித் மக்களோ வர்க்கரீதியாக மேனிலை அடைந்துவிட்டதாலே அம்மக்களும் விடுதலை அடைந்து விட்டதாக எண்ணுவது அறிவீனம். சொல்லப் போனால் அடிமைகளை ஆசுவாசப் படுத்துவதற்கே இந்த நியமனங்கள் பயன்படுகின்றன. நடப்பில் நிறவெறியும், சாதிவெறியும் வர்க்கப் பிரிவினை என்ற பொருளாதாரக் கட்டுமானங்களால் பாதுகாக்கப் படுகின்றன.

அமெரிக்காவிலும் அப்படித்தான். ஒபாமா, கிளிண்டன், மெக்கைன் எவரும் தங்களது பிரச்சார உரைகளில் அமெரிக்க ஏகாதிபத்தியம் என்ற கட்டமைப்பை நெருடும் வண்ணம் பேசுவதில்லை. ஈராக் போரோ, பாலஸ்தீனப் பிரச்சினையோ, உள்நாட்டில் வரி விலக்கோ - எதையும் அந்த ஆடுகளத்தின் விதிகளுக்கு உள்பட்டுதான் பேசமுடியும். ஒருவேளை ஒபாமா வென்றுவிடுவதாக வைத்துக் கொண்டாலும், அமெரிக்காவின் வெள்ளை நிறவெறி வீழ்ந்து விட்டதாகப் பொருளில்லை.

அமெரிக்கச் சமூகத்தின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்திருக்கும் நிறவெறியானது தோலின் நிறம் பற்றிய பிரச்சினையல்ல. அது சமூகக் கட்டுமானம் குறித்த பிரச்சினை. உலகமயத்தின் விளைவால் அமெரிக்க முதலாளிகள் பெரும் பணத்தைக் குவித்து வரும் வேளையில் அங்கு ஏழைகள் மேலும் ஏழைகளாகி வருகிறார்கள். ஏழைகளில் பெரும்பான்மையினர் 'இயல்பாகவே' கருப்பின மக்கள்தான் என்பதால் அங்கே நிறவெறியும் இயல்பாகத்தான் இருக்கிறது.


வர்க்கக் கொடுங்கோன்மையின் உருத்திரிந்த வெளிப்பாடாகவும், அதனை நியாயப்படுத்தும் முகாந்திரமாகவும், அதனைப் பாதுகாக்கும் கவசமாகவும் அங்கே நிலவுகிறது நிறவெறி.

கடந்த இருபதாண்டுகளில் அமெரிக்கச் சமூகத்தின் பல்வேறு துறைகளில் நடந்த நிறவெறிக் கொடுமைகளை இங்கே தொகுத்துத் தருகிறோம். இக்கட்டுரை எழுத உதவிய நூல் ரோலெட்ஜ் பதிப்பகத்தின் ஒயிட் ரேசிசம், ஆசிரியர்கள் ஜோ ஆர். பேகின், ஹெர்னன் வெரா மற்றும் பினார் பாதர்.

சமகால அமெரிக்காவில் நிறவெறிப் பாகுபாடு எந்த அளவுக்கு வெள்ளையர்களிடம் ஊறியிருக்கிறது என்பதை விரிவான ஆய்வின் மூலம் நிறுவுகிறது இந்நூல். உலக மனித உரிமை பற்றிக் கூப்பாடு போடும் அமெரிக்காவின் உண்மை முகத்தையும் அமெரிக்க ஜனநாயகத்தின் உண்மை முகத்தையும் இதன் மூலம் புரிந்து கொள்ள முடியும்.

•••

உலக மேலாதிக்கத்தையே ஜனநாயகத்தின் பெருமையாக பீற்றித்திரியும் இடமான வாஷிங்டனிலிருக்கும் அமெரிக்கப் பாராளுமன்றமான கேப்பிட்டல் கட்டிடத்தையும், காலனிகளை உருவாக்கும் அமெரிக்கத் தாகத்தை சுதந்திர வேட்கையாக மாற்றி அதனை



"100% சுத்தமான வெள்ளையன் என்பதில் பெருமிதம் கொள்" கொக்கரிக்கும் வெள்ளை நிறவெறியர்கள்




அரசு அங்கீகாரம் பெற்ற வெள்ளை நிறவெறியர்களின் கொடி



படிப்பகம்

www.padippakam.com

நினைவுகூறும் வண்ணம் மான்ஹாட்டனில் பிரம்மாண்டமாக நிறுவப்பட்டிருக்கும் சுதந்திரதேவி சிலையையும் கட்டி எழுப்புவதற்கு வேலை செய்தவர்கள் கருப்பின அடிமை மக்கள். இதற்கான கூலிகூட அம்மக்களுக்குத் தரப்படாமல், அவர்களை வேலை வாங்கிய வெள்ளை முதலாளிகளுக்குத்தான் தரப்பட்டது.

அமெரிக்கப் பெருமிதத்தின் சின்னங்கள் அனைத்தும் கருப்பின மக்களின் இரத்தம் கலந்து கட்டப்பட்டவைதான். வெள்ளை நிறவெறியினுடைய மூலம் ஐரோப்பாவென்றாலும், அதை வைத்தே ஒரு நாடு கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது என்றால் அது அமெரிக்காதான்.

கி.பி 1600-களின் மத்தியில் ஆப்பிரிக்காவிலிருந்து மந்தைகளைப்போல பிடித்து வரப்பட்டார்கள் ஆப்பிரிக்க மக்கள். இதே காலத்தில்தான் மண்ணின் மைந்தர்களான செவ்விந்தியர்கள் கூட்டம் கூட்டமாகக் கொலை செய்யப்பட்டு நாடு முழுவதும் அவர்களது நிலம் அபகரிக்கப்பட்டது. அமெரிக்காவின் வரலாறே நிறவெறியால் எழுதப்பட்டதுதான். கருப்பர்கள், செவ்விந்தியர்கள் மட்டுமல்ல பின்னர் வந்த லத்தீன் அமெரிக்கர்களும், ஆசியர்களும் கூட அடிமைகளாகத்தான் நடத்தப்பட்டனர். 1778-இன் சுதந்திரப் பிரகடனமும், 1860-இல் நடந்த உள்நாட்டுப் போரும் நிறவெறியின் மீதுதான் நின்று கொண்டிருந்தன.

இருபதாம் நூற்றாண்டில் கருப்பின மக்களின் தொடர்ச்சியான போராட்டத்திற்கு பிறகு குறிப்பாக மார்ட்டின் லூதர் கிங் காலத்தில் 1950-60களில் நடந்த சிவில் உரிமை இயக்கத்தின் விளைவாக அதிபர் லிண்டன் ஜான்சன் காலத்தில் நிறவெறிக் கொடுமைகள் சட்டத்தால் தடைசெய்யப்பட்டன. இதற்கு முன்னர் இவையனைத்தும் சட்டபூர்வமாகவே பாதுகாக்கப்பட்டன.

சட்டம் மாறினாலும் நடைமுறை மாறிவிடுமா என்ன! புதிய சட்டங்களின் கீழ் வெள்ளை நீதிபதிகள் வெள்ளை நிறவெறிக்கு ஆதரவான பொழிப்புரையுடன் 'நீதி' வழங்குகின்றனர். நமது நாட்டில் வன்கொடுமைச் சட்டம் எப்படி தலித் மக்களின் மீதான ஒடுக்குமுறையைத் தண்டிப்பதில்லையோ அப்படித்தான் அங்கும்.

வெள்ளைப் பெருமிதத்தின் சின்னமாகக் கருதப்படும் 'தேசியக் கூட்டமைப்பு போர்க்கொடி' இன்றும் தெற்கு கரோலினாவில் பறந்து கொண்டிருக்கிறது. மார்ட்டின் லூதர் கிங்கின் பறந்த தினத்திற்கு மற்ற மாநிலங்கள் விடுமுறை அளித்தாலும் இம்மாநிலம் மட்டும் அதை அங்கீகரிக்கவில்லை. இவற்றை எதிர்த்து கருப்பின மக்கள் இன்றும் அங்கு போராடிக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவில் நடைபெறும் குற்றங்களில் கணிசமானவை நிறவெறிக் குற்றங்களே. குற்றங்களினால் பாதிக்கப்பட்டவர்களில் கருப்பின மக்களே அதிகம். இதுபோக வறுமை, வேலையின்மை, தகுதியற்ற வேலைகள் முதலியவற்றில் வெள்ளையர்களைவிட கருப்பின மக்களே அதிகம் இருக்கிறார்கள்.

**ஊ**ரும் சேரியும் தனித்தனியே பிரிந்திருக்கும் அநாகரிகம் இந்தியாவிற்கு மட்டுமே சொந்தமானதல்ல. அமெரிக்காவின் பெருநகரங்களில் வேண்டுமானால் குடியிருப்புகள் கலந்திருப்பது ஓரளவுக்கு இருக்கலாம். அங்கும்கூட, வர்க்கரீதியான பிளவுக்குள் மறைந்துகொண்டு உயிர் வாழ்கிறது நிறவெறி. நமது மாநகரப் பகுதிகளின் குடிசைவாழ் ஏழைகளில் ஒடுக்கப்பட்ட சாதியினர்தான் அதிகம் என்பது போல அமெரிக்க நகர்ப்புறச் சேரிகளில் கருப்பின மக்களே அதிகம்.

மற்றபடி உண்மையான அமெரிக்காவோ சிறு நகரங்களில்தான் கட்டுண்டு கிடக்கிறது. இங்கு வெள்ளையர்களும் கருப்பர்களும் சேர்ந்து வாழ்வது என்பதை இன்றும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.

பல நூறு வெள்ளையர்கள் வாழும் 'டுபுக்கீயு' நகரின் வளர்ச்சித்திட்டத்தை அமல்படுத்த தொழிலாளிகள் தேவைப்பட்டதால், சில நூறு கருப்பர்களை குடியமர்த்தலாம் என்று அந்நகர நிர்வாகம் 90களின் ஆரம்பத்தில் தீர்மானித்தது. நகரம் விரிவடைவதற்கேற்ப அதன் பராமரிப்பு மற்றும் கீழ் மட்ட வேலைகளுக்கு கருப்பினத் தொழிலாளிகள் தேவைப்படுவதால் பல அமெரிக்க நகரங்களில் இப்படித்தான் திட்டமிடுகிறார்கள்.

ஆயினும் அந்நகரத்தின் வெள்ளையர்களோ இதனை ஏற்காமல் கலவரம் செய்தார்கள். 'கருப்பர்கள் வந்தால் குற்றங்கள் அதிகரிக்கும், நகரின் சமூகநலத் திட்ட ஒதுக்கீட்டை கருப்பர்களே அபகரிப்பார்கள், அதிகப் பிள்ளைகளை அவர்கள் பெற்றுக் கொள்வதால் நாம் சிறுபான்மையாகி விடுவோம்', என்ற பிரச்சாரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. வெள்ளையர்களின் பொதுப் புத்தியில் உறைந்திருக்கும் இக்கருத்துக்கள் உடனே செயல்வடிவம் பெற்றன. வெள்ளை நிறவெறி அமைப்பான 'கூ-கிளக்ஸ்-கிளான்' கருப்பர்களைத் தாக்குவதற்கு முன்பு செய்யும் சிலுவை எரிப்புச் சடங்கை நடத்தியது. கொடியங்குளத்தில் நடந்தது போலவே கருப்பின மக்களின் இல்லங்கள் சூறையாடப்பட்டன.

'கழிப்பறை கழுவுவதற்கும், விவசாய வேலைகளுக்கும் கருப்பர்கள் இல்லாமல் முடியுமா' என்று இந்நகரின் வெள்ளையர்களுக்குப் 'புரிய வைத்து', அவர்களைச் சமாதானப்படுத்தி கருப்பர்களைக் குடியமர்த்துவதற்கு கிட்டத்தட்ட பத்தாண்டு காலம் தேவைப்பட்டது. அமெரிக்காவின் எல்லாச் சிறுநகரங்களும் இப்படி இரத்தக் கறையோடுதான் உருவாகின்றன. இப்போதும் இரண்டாகத்தான் பிரிந்து கிடக்கின்றன நகரங்கள்.

**அ**மெரிக்காவின் மிச்சிகன் மாநிலம், தொழிற்சாலைகள் நிறைந்த நவீனமான மாநிலம். அங்கே ஒரு பிரபலமான நகரம் ஆலிவட். 1992-ஆம் ஆண்டு கணக்கின்படி 1600 வெள்ளையர்களும், ஒரு சில கருப்பின மக்களும் இங்கு வாழ்கின்றனர். இங்கிருக்கும் ஆலிவட் கல்லூரியில் பிடிக்கும் மொத்தமுள்ள 700 மாணவர்களில் 55 பேர் மட்டுமே கருப்பினத்தைச் சேர்ந்த

> **உணவகங்களில் சமையல் மற்றும் கோப்பை கழுவும் வேலை கருப்பினத் தொழிலாளிகளுக்கு! சர்வர் வேலையில் கருப்பர்கள் மிகக் குறைவு. 'கருப்பினத்தவர் பரிமாறினால் வெள்ளை வாடிக்கையாளர்கள் வரமாட்டார்கள்' என்பதுதான் காரணம்.**



படிப்பகம்

www.padippakam.com

வர்கள். ஆசிரியர்களில் எவரும் கருப்பரில்லை என்பதோடு 130 ஊழியர்களில் ஒருவர் மட்டுமே கருப்பர்.

அந்த ஆண்டு மாணவர்களிடம் மோதல் வெடிக்கிறது. கருப்பின மாணவன் ஒரு வெள்ளை மாணவியிடம் நெருங்கிப் பேசினான் என்று வெள்ளையின மாணவர்கள் சண்டை போடுகிறார்கள். அவர்களுக்காக 'கிளான்' நிறவெறி அமைப்பு பிரச்சாரம் செய்கின்றது. இந்தக் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் பெரும்பாலும் முற்றிலும் வெள்ளையினப் பகுதிகளிலிருந்து வந்தவர்கள். அதாவது 'இயல்பாகவே' நிறவெறியர்கள். இவர்களுக்கு கருப்பின மாணவர்களைச் சமமாகப் பாவிக்க வேண்டுமென்றோ, கருப்பின மக்களின் சிவில் உரிமைப் போராட்டங்களைப் பற்றியோ எதுவும் தெரியாது.

கலவரத்தின் முடிவில் 55 கருப்பின மாணவர்களில் நான்கு பேரைத் தவிர மற்றவர்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள். தேசிய அளவில் இது பிரச்சினையான பிறகு, கருப்பின மக்களும் நாடு முழுவதும் போராடிய பிறகு, கல்லூரி நிர்வாகம் தனது மரியாதையைத் திரும்பப் பெறுவதற்கு மெல்ல மெல்ல முயன்றது. அதன் பின்னர்தான் கணிசமான அளவிற்கு மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களில் கருப்பின மக்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இது நடந்தேறுவதற்கும் பத்தாண்டுகளுக்கு மேல் ஆனது.

அமெரிக்கக் கல்வி நிறுவனங்களின் சூழ்நிலை பொதுவில் இப்படித்தான் இருக்கிறது. கருப்பின மக்களின் மீதான வெறுப்பை வெள்ளையின மாணவர்கள் தங்கள் பெற்றோர்களிடமிருந்தும், சமூகச் சூழ்நிலைகளிலிருந்தும் இயல்பாகக் கற்றுக் கொள்கிறார்கள். வெள்ளை நிறவெறி இயக்கங்களுக்கான ஆளெடுப்பு பெரும்பாலும் மாணவர்களிடமிருந்துதான் துவங்குகிறது. அமெரிக்கப் பள்ளி மாணவர் வன்முறையிலும், சக மாணவர்களை துப்பாக்கியால் சுட்டுக் கொல்வதிலும் வெள்ளையின மாணவர்கள்தான் ஈடுபடுகிறார்கள். இத்தகைய கொலைகார மாணவர்களில் பலர் வெள்ளை நிறவெறி இயக்கங்களுடன் தொடர்பு கொண்டவர்கள் என்பதும் பல வழக்குகளிலிருந்து அம்பலமாகி இருக்கிறது.

ஏழ்மையினாலும், இந்த நிறவெறிக் கொடுமைகளினாலும் கருப்பின மாணவர்கள் பலர் தமது படிப்பை முடிக்காமலேயே வெளியேறுகிறார்கள். புள்ளி விவரங்களின்படி இந்த விலகல் போக்கு வெள்ளையினத்தில் இல்லை என்பதோடு, நிறவெறி அமைப்புகளின் தலைவர்கள் அனைவரும் உயர்கல்வியை முடித்தவர்கள் என்பதையும் இங்கு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

உணவகங்கள், விடுதிகளில் கடைபிடிக்கப்படும் நிறவெறித் தீண்டாமையை எதிர்த்து 1950-களிலேயே கருப்பின மக்கள் போராடினார்கள். அதன்படி இந்தத் தீண்டாமையைத் தடைசெய்து 1964-ஆம் ஆண்டு சட்டம் நிறைவேற்றப்பட்டது. எனினும் இன்றும் அமெரிக்க உணவகங்களில் நேரடியாகவும், மறைமுகமாகவும் நிறவெறி இருக்கின்றது. பதிவு செய்யப்படும் பல்லாயிரம் புகார்கள் இதனை வெட்ட வெளிச்சமாக்குகின்றன.

நமது கிராமங்களில் இரட்டைக் குவளை இருக்கிறது. ஆனால் இந்த வடிவத்திலான பச்சையான தீண்டாமை நகரங்களில் இல்லை என்று பொதுவில் கூறலாம். ஆனால் அமெரிக்காவிலோ எல்லா நகரங்களின் உணவகங்களிலும் நிறவெறித் தீண்டாமை பல்வேறு வழிகளில் கடைபிடிக்கப்படுகிறது.

பல்வேறு புள்ளி விவரங்களின்படி, உணவகங்களின் சமையல் மற்றும் கோப்பை கழுவும் வேலைகளில் மட்டுமே கருப்பினத் தொழிலாளர்கள் அதிகம் இருக்கின்றனர். உணவு, மது விநியோகிக்கும் வேலைகளில் கருப்பர்கள் மிகக்குறைவு. கருப்பர்கள் நேரடியாக விநியோகித்தால் வெள்ளையின வாடிக்கையாளர்கள் வரமாட்டார்கள் என்பதுதான் காரணம்.

சாப்பிட வருபவர்களில் கருப்பின வாடிக்கையாளர்கள் இருந்தால் என்ன செய்வார்கள்? அதைத் தவிர்ப்பதற்காகவே கருப்பினத்தவர்களுக்கு மட்டும் 'மேசைக் கட்டணம், சேவைக் கட்டணம், முன்பதிவுக் கட்டணம்' என்று தீட்டி விடுகிறார்கள். கருப்பின மக்கள் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளை விற்க மாட்டார்கள். அல்லது விலையை அதிகம் வைத்து விற்பார்கள்.

வீட்டிலிருந்தபடியே உணவை ஆர்டர் செய்வது அங்கே சகஜம். ஆனால் கருப்பினக் குடியிருப்புகளுக்கு மாத்திரம் இந்தச் சேவை கிடையாது. 'பூவுலகின் சொர்க்கமான அமெரிக்காவிலா இப்படி' என்று நீங்கள் வியப்படைந்தாலும் அங்கே இவையெல்லாம் இயல்பான விசயங்களாகவே இருந்து வருகின்றன.

அமெரிக்காவெங்கும் 1800 கிளைகளைக் கொண்டிருக்கும் ஷோனி என்ற பிரபலமான உணவக நிறுவனத்துக்கு எதிராக, 1993 முதல் 2000-ஆம் ஆண்டு வரை கறுப்பின மக்கள் தொடுத்த வழக்குகளில், அதன் நிறவெறிக் குற்றம் நிரூபிக்கப்பட்டு, நட்டஈடாக மாத்திரமே 105 மில்லியன் டாலரைச் செலுத்தியிருக்கிறது அந்த நிறுவனம். அதேபோல 1500 கிளைகளைக் கொண்டிருக்கும் டென்னி என்ற நிறுவனம் இதேகாலத்தில் 55 மில்லியன் டாலரை நட்டஈடாகச் செலுத்தியிருக்கிறது.






படிப்பகம்

www.padippakam.com

இன்றைக்கு இந்த நிறுவனங்கள் தமது பிராண்ட் மதிப்பைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சற்றே அடக்கி வாசிக்கின்றன. என்றாலும் நிறவெறியோ புதிய வடிவங்களை எடுத்திருக்கிறது. இப்போது கருப்பர்களுக்கென்றே தனிக் கிளைகள் நடத்தப்படுகின்றன. மேலும் கருப்பின மக்கள் நெருங்க முடியாத உயர்கட்டணங்களைக் கொண்டிருக்கும் நட்சத்திர விடுதிகள் வர்க்கரீதியாக வெள்ளை நிறவெறியை நிலைநாட்டுகின்றன. இது பிரபலமான உணவகங்களின் கதை.

உள்ளூர் அளவில் செயல்படும் உணவகங்களிலோ இன்றும் நிறவெறி கேட்பாரின்றிக் கோலோச்சுகிறது. ஆனால் இவற்றையெல்லாம் தேசிய ஊடகங்கள் செய்தியாக்க் கருதி வெளியிடுவதேயில்லை. கருப்பின ஊழியர்கள் பணியாற்றும் பல கடைகளில் பொருள் வாங்கிவிட்டுப் மீதிச் சில்லறை வாங்கும் வெள்ளையர்கள் கருப்புக் கைகளைத் தொடுவதில்லை என்று ஒரு ஆய்வு சுட்டிக்காட்டுகிறது. வெள்ளைத் திமிரின் வீரியம் பார்ப்பனத் திமிருக்கு எந்த வகையிலும் குறைந்ததல்ல என்பதைத்தான் இச் செய்திகள் காட்டுகின்றன.

'**தா**ங்கள் நிறவெறியர்கள் அல்ல' என்று கூறிக்கொள்ளும் வெள்ளையர்கள் கூட கருப்பின மக்களுக்கு எதிரான 'வெள்ளைக் கருத்தை' மனதில் தாங்கியபடிதான் வாழ்கின்றனர். ''கருப்பர்களில்தான் கிரிமினல்கள் அதிகம், கருப்பினக் குடியிருப்புகளில் நடந்து சென்றால் வழிப்பறி செய்வார்கள், வெள்ளையினப் பெண் ஒரு கருப்பனிடம் மாட்டிக் கொண்டால் நிச்சயமாக வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப் படுவாள்'' - இவ்வாறெல்லாம் நீள்கிறது அந்தச் சித்திரம்.

ஒரு வகையில் முசுலீம்களைப் பற்றி இந்துக்களிடம் ஆர்.எஸ்.எஸ். உருவாக்கும் சித்திரத்திற்கு ஒப்பானது இது. வெள்ளையின மக்களிடம் மட்டுமல்ல, அவர்கள் கையிலிருக்கும் ஊடகங்கள், அரசியல், போலீசு, நீதித்துறை ஆகிய அனைத்து நிறுவனங்களின் செயல்பாட்டிலும் இந்தப் பொதுக்கருத்து பெரும் செல்வாக்கைச் செலுத்துகிறது.

1989-ஆம் ஆண்டு அமெரிக்காவில் பரபரப்பாகப் பேசப்பட்ட ஒரு கிரிமினல் குற்றம் குறித்த கதையே இதற்குச் சான்று.

''நானும் ஏழு மாத கர்ப்பிணியான என் மனைவி கரோலும் காரில் சென்று கொண்டிருந்த போது ஒரு கருப்பின இளைஞன் எங்களை வழிமறித்து, என் மனைவியைக் கொன்றுவிட்டு, என்னையும் சுட்டுக் காயப்படுத்தி, வழிப்பறி செய்து விட்டான்'' என்று போலீசில் புகார் கொடுத்தான் சார்லஸ் என்ற வெள்ளை இளைஞன்.

> **அமெரிக்காவில் கொலை செய்யப்படும் வெள்ளையர்களில் 90% பேரைக் கொல்பவர்களும் வெள்ளையர்கள்தான். இருப்பினும் வெள்ளையன் ஒருவன் கொல்லப்பட்டால் உடனே சராசரி வெள்ளையனின் சந்தேகப்பார்வை முதலில் கருப்பின மக்களை நோக்கியே திரும்புகிறது.**

உடனே நாடே குமுறத் தொடங்கியது. எங்கும் எதிலும் கருப்பின மக்களின் மீதான துவேசம் பொங்கி வழிந்தது. போலீஸ் தனிப்படைகள் அமைக்கப்பட்டு சார்லஸ் சொன்ன அடையாளங்களுடன் கூடிய கருப்பின இளைஞன் தேடப்பட்டான். பின்னர் பென்னட் என்ற கருப்பின இளைஞன் கைது செய்யப்பட்டான். அமெரிக்காவே கண்ணீர் விடும்படி சென்டிமெண்ட் கதைகளைக் கட்டவிழ்த்து விட்டன ஊடகங்கள். கருப்பின மக்கள் அனைவருமே குற்றவாளிகளாகச் சித்தரிக்கப்பட்டனர்.

இறுதியில் பூனைக்குட்டி வெளியே வந்தது. சார்லஸின் தம்பி மாத்திவ் உண்மையை ஒப்புக்கொண்டான். மனைவியை சார்லஸே கொன்று விட்டு தன்னையும் சுட்டுக் காயப்படுத்திக் கொண்டிருக்கிறான். அவள் பெயரில் எடுக்கப்பட்டிருக்கும் காப்பீட்டிலிருந்து பெரும் பணம் கிடைக்கும் என்பதுதான் கொலைக்கான காரணம். 'அண்ணனுக்கு துப்பாக்கி வழங்கியது நான்தான்' என்று தம்பி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தான்.

1987 முதல் 1996 ஆம் ஆண்டு வரை மட்டும் இதுபோன்று 67 சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஒவ்வொன்றிலும் கருப்பின மக்கள் குற்றம் சாட்டப்பட்டு பின்னர் வெள்ளைக் குற்றவாளிகள் கைது செய்யப்படுவார்கள். இருந்தும் இன்று வரை அமெரிக்க 'மனசாட்சி' ஒன்றும் பெரிதாக மாறிவிடவில்லை.

''அமெரிக்காவில் கொலைசெய்யப்படும் வெள்ளையர்களில் 90% பேரைக் கொல்பவர்களும் வெள்ளையர்கள்தான்'' என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. உண்மை இப்படி அறைந்து கூறினாலும் வெள்ளையன் ஒருவன் கொல்லப்பட்டவுடனே, ஒரு சராசரி வெள்ளையனின் சந்தேகப் பார்வை முதலில் கருப்பின மக்களை நோக்கியே திரும்புகிறது.

**இ**ந்த வெள்ளையினக் கருத்தின் பலத்தில்தான் அமெரிக்காவில் வெள்ளை நிறவெறி அமைப்புகள் இன்றும் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் மூத்தது கூ-கிளாக்ஸ்-கிளான். 1920 ஆம் ஆண்டு மட்டும் இவ்வமைப்பில் 50 இலட்சம் பேர் உறுப்பினர்களாக இருந்தனர்.

வெள்ளை அங்கிகளைப் அணிந்து கொண்டு ஊரின் ஒதுக்குப்புறத்தில் சிலுவையை எரித்து சடங்கு நடத்தி 'வெள்ளை அதிகாரம்' என்று கூக்குரலிட்டுக் கொண்டே கருப்பர்களைத் தாக்கிக் கொலை செய்வார்கள். இவர்கள் கொலை செய்யும் முறைகளோ வலிமையான மனதைக் கொண்டவர்களையே பதைபதைக்கச் செய்யும். இன்றைக்கு கிளான் வலுவிழந்து பல்வேறு குழுக்களாகச் செயல்பட்டு வந்தாலும் தனது வேரை மாத்திரம் விட்டுவிடவில்லை.

இது போக ஒயிட் ஆரியன் ரெசிஸ்டன்ஸ், வோர்ல்டு சர்ச் ஆஃப் தி கிரியேட்டர், யூத் ஆஃப் ஹிட்லர், பிலிட்ஸ் கிரிக், கிரேசி ஃபிக்கிங் ஸ்கின்ஸ், ரோமான்டிக் வயலன்ஸ், தி ஆர்டர் என்று பல்வேறு பெயர்களில் வெள்ளை நிறவெறி அமைப்புகள் செயல்படுகின்றன.

தற்போது அமெரிக்காவில் இதுபோல 300 குழுக்களும், இவற்றில் 50,000 உறுப்பினர்களும், 1,80,000 ஆதரவாளர்களும் இருப்பதாக ஒரு மதிப்பீடு கூறுகிறது. இவற்றின் இணையத் தளங்களைப் பல இலட்சம்பேர் பார்ப்பதாகவும் தெரிகிறது. இந்த வெள்ளை நிறவெறிக் குழுக்க


படிப்பகம்

www.padippakam.com

ளுக்கு இங்கிலாந்து மற்றும் ஜெர்மனியிலிருக்கும் புதிய நாஜி இயக்கங்களோடும் தொடர்புண்டு. இவர்களுக்கு உள்ளூர் அளவில் அரசியல்வாதிகள் மற்றும் முதலாளிகள் ஆதரவளிக்கின்றனர்.

இவர்களுக்கென்றே பத்திரிக்கைகளும், இணையத் தளங்களும், கேபிள் டி.வி.க்களும் உண்டு. இவர்கள் பத்திரிக்கை ஒன்று வெளியிட்டுள்ள கார்ட்டூனில் எரிந்து கொண்டிருக்கும் கருப்பின இளைஞனின் படத்தைப் போட்டு 'இக்காட்சி பேஸ்பால் விளையாட்டைவிட இனிமையானது' என்று எழுதியுள்ளனர். இவர்கள் வருடந்தோறும் ஆயிரக்கணக்கான வன்முறைகளில் ஈடுபடுகின்றனர். அதில் கருப்பின மக்களைத் தாக்குவது, கொடூரமாகக் கொலை செய்வது, கருப்பினத் தேவாலயங்களைக் குண்டு வீசித் தாக்குவது, மற்றும் பல்வேறு வேற்றினத்தவரைத் தாக்குவதையும் தொடர்ந்து செய்கின்றனர்.

இவற்றில் பல தாக்குதல்கள் புகார்களாகவே பதிவு செய்யப்படுவதில்லை. பதிவு செய்யப்பட்டதிலும் பெரிய தண்டனைகள் வழங்கப்படுவதில்லை. 1850க்குப் பிறகு கருப்பரைக் கொன்ற குற்றத்திற்காக இதுவரை ஒரு வெள்ளை நிறவெறியனுக்கு மட்டுமே மரணதண்டனை வழங்கப்பட்டிருக்கிறது என்பதிலிருந்தே இதனைப் புரிந்து கொள்ளலாம்.

இத்தகையதொரு அங்கீகாரம் நிறவெறிக்கு இருப்பதனால்தான் வெள்ளை நிறவெறி அமைப்புகளின் தலைவர்கள் பலர் அங்கே தேர்தல்களிலும் போட்டியிடுகின்றனர். குடியரசுத் தலைவர் தேர்தலிலும் யாரை ஆதரிக்க வேண்டுமென பகிரங்கமாகவே பிரச்சாரம் செய்கின்றனர். சென்ற தேர்தலில் புஷ்ஷை ஆதரிக்குமாறு கூ-கிளாக்ஸ்-கிளான் தனியாக ஒரு வீடியோவையே வெளியிட்டது. அதற்கு முந்தைய தேர்தலில் அல் கோரைத் தோற்கடிப்பதற்கு புஷ் புளோரிடா மாநிலத்தில் கருப்பின மக்களை வாக்களிக்க முடியாமல் செய்ததை இங்கே கருத்தில் கொள்ள வேண்டும்.

ரீகன் மற்றும் தந்தை புஷ் காலத்தில் நியமிக்கப்பட்ட பல வெள்ளையின நீதிபதிகள் நிறவெறிக்கு ஆதரவாகவே பல தீர்ப்புகளை வழங்கியுள்ளனர். எனவே வெள்ளை நிறவெறி அமைப்புகள் தீவிர மனநோய் முற்றிய ஒரு சிறு கூட்டமல்ல. அமெரிக்கச் சமூகத்தின் உருத்திரட்டப்பட்ட வெளிப்பாடுதான் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கருப்பின மக்கள் எதிர்கொள்ளும் நிறவெறிக் கொடுமைகளில் போலீசின் அட்டூழியங்கள் முக்கியமானவை. 82 முதல் 92 வரை போலீசை எதிர்த்து கருப்பின மக்கள் தொடுத்த 3000 வழக்குகளை எஃப்.பி.ஐ. எனப்படும் அமெரிக்க புலனாய்வுத்துறை விசாரித்திருக்கிறதெனில் பதிவு செய்யப்படாத புகார்களை ஊகித்துக் கொள்ளலாம். போலீசை எதிர்த்து யாரும் எளிதில் புகார் தெரிவிக்க முடியாது என்ற நிலை நம் நாட்டைப் போலவே அமெரிக்காவிற்கும் பொருந்தும்.



கூ கிளக்ஸ் கிளான்: வெள்ளை அங்கி அணிந்து கொண்டு சிலுவை எரித்து சடங்கு நடத்தி கருப்பின மக்களை தாக்கிக் கொல்லும் வெள்ளை நிறவெறி இயக்கம்

போலீசின் நிறவெறிக்கு லாஸ் ஏஞ்செல்ஸ் நகரம் பிரபலமானது. இங்கு வசிக்கும் 35 இலட்சம் மக்களில் 2,80,000 பேர் மட்டுமே கருப்பினத்தவர். ஆனால் போலீசை எதிர்த்த புகார்களில் 50% கருப்பின மக்களுடையது. இங்கிருக்கும் 8,300 போலீசுக்காரர்களில் வெறும் ஏழு பேர்தான் கருப்பினத்தவர். ஏழு பேர் லத்தீன் அமெரிக்கர்கள். மற்றவர்கள் அனைவரும் வெள்ளையர்கள். 1992ஆம் ஆண்டு நடந்த ரோட்னி கிங் வழக்கு தொடர்பான கலவரத்தை இந்தப் பின்னணியில் பார்த்தால் போலீசின் நிறவெறியைப் புரிந்து கொள்ள முடியும்.

லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் 30.4.92 அன்று ரோட்னி கிங் எனும் கருப்பின இளைஞர் தனது நண்பர்களுடன் காரில் சென்று கொண்டிருந்தார். அவரது வாகனத்தை ஒரு போலீஸ் வாகனம் பின்தொடர்ந்து சென்று மறித்து நிறுத்தியது. உடனே மேலும் சில போலீஸ் வாகனங்கள் சுற்றி வளைத்துக் கொண்டன. 'காரை ஏன் உடனே நிறுத்தவில்லை' என்று சீறிய இரு போலீசு அதிகாரிகள் ரோட்னி கிங்கைக் கொடூரமாகத் தாக்கினர். எந்தத் தவறும் செய்யாத ரோட்னி கிங்கை மற்ற போலீசாரும் சேர்ந்து தாக்கத் தொடங்குகின்றனர்.

அருகில் இருக்கும் கடை ஒன்றின் மேலாளரான ஜார்ஜ் ஹாலிடே என்ற வெள்ளையர் இக்காட்சியினைத் தனது வீடியோவில் பதிவு செய்கிறார். 81 விநாடிகள் ஓடுகிறது அந்த வீடியோ பதிவு. அதற்குள் ரோட்னி கிங் மீது விழுந்த அடிகள் 56. பல இடங்களில் எலும்பு முறிந்த நிலையில் ரோட்னி கிங் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறார். ஊடகங்களில் வெளியான இந்த வீடியோக் காட்சி உலகையே அதிர்ச்சியில் உறைய வைத்தது.

ஆனால் வெள்ளை அதிகார வர்க்கம் இதனைப் பத்தோடு பதினொன்றாகக் கருதியது. சிமி வேலியில் நடந்த இவ்வழக்கிற்கான ஜூரிகளில் ஒருவர் கூட கருப்பர் இல்லை. வீடியோ ஆதாரம் இருந்தபோதும் 'குற்றவாளிகளில்லை' என்று கூறி போலீசு அதிகாரிகளை விடுவித்தது அந்நீதிமன்றம்.

தீர்ப்பைக் கண்ட கருப்பின மக்கள் குமுறி வெடித்தனர். வெள்ளை நிறவெறிக்கு எதிராக நவீன அமெரிக்கா அத்தகைய ஒரு கலவரத்தை ஒரு போதும் கண்டதில்லை. லாஸ் ஏஞ்செல்ஸ் நகரம் பற்றி எரிந்தது. ஏனைய நகரங்களிலும் வன்முறை வெடித்தது. கருப்பின மக்களுடன் லத்தீனியர்களும் சேர்ந்து கொண்டனர். கலவரத்தில் 50 பேர் கொல்லப்பட்டனர், 2400 பேர் காயமடைந்தனர்.


படிப்பகம்

www.padippakam.com

கருப்பின மக்களின் போர்க்குணத்தைக் கண்டு அஞ்சிய அரசு. இரண்டாவது விசாரணைக்கு உத்தரவிட்டது. இம்முறை நடுவர்களில் இரண்டு கருப்பர்களும் ஒரு லத்தீனியரும் இடம் பெற்றனர். இறுதித் தீர்ப்பில் வீடியோ காட்சியில் அடிக்கும் இரண்டு போலீசு அதிகாரிகளுக்கும் இரண்டரை ஆண்டு சிறைத் தண்டனை கிடைத்தது. வீடியோ பதிவில் சிக்கிக் கொள்ளாமல் அடித்த போலீசு அதிகாரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்தத் தண்டனை ஒரு கண்துடைப்பு என கருப்பின மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். எனினும் வெள்ளை நிறவெறியினால் கட்டமைக்கப்பட்ட போலீசு எந்திரத்தை அதற்கு மேல் தண்டிப்பதை அங்கே எண்ணிப் பார்க்கவே முடியாது.

லாஸ் ஏஞ்செல்ஸ் நகரின் போலீசு தலைமையகத்தில் இருக்கும் கணினித் திரைகளில் 'ஒரு நீக்ரோவை எதிர் கொண்டால் முதலில் சுடு! பின்பு கேள்வி கேள்!' என்ற முத்திரை வாக்கியமே ஒளிர்ந்து கொண்டிருக்குமாம். இப்படிப் போலீசுத்துறை முழுவதும் புரையோடியிருக்கும் நிறவெறியைச் சகிக்க முடியாமல், அமெரிக்காவின் போலீசுத் துறைகளில் மிக அரிதாகவே இருக்கும் கருப்பின அதிகாரிகள் பலரும் ராஜினாமா செய்திருக்கின்றனர்.

1999-ஆம் ஆண்டு நியூயார்க் நகரின் அடுக்குமாடிக் குடியிருப்பில் நின்று கொண்டிருந்த அப்பாவிக் கருப்பின இளைஞர் அமடோ தியாலோ, போலீசால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவர் அடையாள அட்டையை எடுத்துக் காண்பித்தது தூரத்திலிருந்த போலீசுக்கு துப்பாக்கி போல தெரிந்ததாம்! இதை எதிர்த்தும் கருப்பின மக்கள் போராடினர். ஆனால் நீதி கிடைக்கவில்லை.

கருத்துக் கணிப்பு ஒன்றின்படி, போலீசுக்கு அஞ்சி தெருவில் தனியாக நடமாடவே பயப்படுவதாகப் பெரும்பான்மையான கருப்பின மக்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் அப்படி பயப்படுவதாக வெள்ளையின மக்கள் யாரும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே போலீசின் நிறவெறி மட்டுமல்ல, அது தோற்றுவிக்கும் அலட்சியம் கூட பல கருப்பின மக்களைக் காவு வாங்குகிறது.

டெக்சாகோ, அமெரிக்காவிலிருக்கும் பெரிய பன்னாட்டு நிறுவனங்களில் ஒன்று. 1996 ஆம் ஆண்டு இதன் வெள்ளையின மேலதிகாரிகள் கருப்பினப் பணியாளர்களைக் கேவலமாகப் பேசியது டேப்பில் பதிவு செய்யப்பட்டு ஊடகங்களில் வெளியானது. இதனைக் கண்டித்து 1348 கருப்பினத் தொழிலாளிகள் வழக்கு தொடுத்து, 176 மில்லியன் டாலரை நட்டஈடாகப் பெற்றனர். இதன் சேர்மன் வேறு வழியின்றி தொழிலாளிகளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

அமெரிக்க மக்கள் தொகையில் கருப்பின மக்கள் 12 சதவீதம் இருந்தாலும் பன்னாட்டு நிறுவனங்களில் அவர்கள் ஒரு சதவீதத்திற்கும் குறைவாகத்தான் உள்ளனர். முக்கியமாக மேலாண்மை நிர்வாகிகளில் கறுப்பினத்தவர் அறவே இல்லை என்று சொல்லலாம். ஒரு வெள்ளையருக்கு 5 ஆண்டுகளில் பதவி உயர்வு கிடைக்குமெனில், அதே உயர்வுக்காக ஒரு கருப்பினத்தவர் 15 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

> **அமெரிக்காவில் நிலவும் வெள்ளை நிறவெறி தோலின் நிறம் பற்றிய பிரச்சினை மட்டுமல்ல. வர்க்க ஆதிக்கத்தின் உருத்திரிந்த வெளிப்பாடாகவும், அதனைப் பாதுகாக்கும் கவசமாகவும் அங்கே நிறவெறி உயிர் வாழ்கிறது.**

ஷெல் ஆயில், கொக்கோ கோலா போன்ற நிறுவனங்களின் நிறவெறிப் பாகுபாட்டை எதிர்த்தும் பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இந்தியாவில் கால் பதித்திருக்கும் இவ்விரண்டு நிறுவனங்களும் பார்ப்பனியத்தின் இயல்பான கூட்டாளிகள் என்பதை அவர்களது அமெரிக்க வரலாறே எடுத்துக் காட்டுகிறது.

அமெரிக்க அரசின் உயர்பதவிகளில் இருக்கும் பலரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் நிறவெறியைக் கக்கியிருக்கிறார்களை. விரிவஞ்சி அவற்றை இங்கே எடுத்துரைக்க முடியவில்லை. அரசு செயல்படுத்தும் பல நடவடிக்கைகளிலும் நிறவெறி அன்றாட விசயமாகத்தான் இருக்கிறது. விவசாயிகளுக்கு கடன் என்று அறிவித்தால், அதனைக் கருப்பின விவசாயிகள் பெற முடியாது. நிறவெறியின் காரணமாகவே பல கருப்பின விவசாயிகள் திவலாகியிருக்கிறார்கள்.

குடியரசுக் கட்சியின் அதிபர்களாக இருந்த ரீகன் மற்றும் தந்தை புஷ் காலத்தில் வெள்ளை மாளிகையை அப்பட்டமான நிறவெறி ஆட்டிப் படைத்தது. 1988 தேர்தலில் தந்தை புஷ் தனது பிரச்சாரத்தில் வெளிப்படையான நிறவெறி துவேசத்தைக் கக்கினார்.

நேரடி சாட்சியங்கள் இல்லாத ஒரு கொலையில் குற்றம் சாட்டப்பட்ட வில்லியம் ஹார்ட்டன் எனும் கருப்பின இளைஞனின் புகைப்படத்தைக் காட்டி அத்தேர்தலில் நிறவெறியைப் பல்வேறு வகைகளில் தூண்டிவிட்டது குடியரசுக் கட்சி. 'இத்தகைய கிரிமினல்களின் கையில் நாடு போக வேண்டுமா?' என்பதே தேர்தலின் முத்திரை முழக்கமாக இருந்தது. பின்லேடன், சதாம் ஹுசைன் போன்ற வெளிநாட்டு வில்லன்கள் இல்லாத போது கருப்பின மக்கள்தான் அமைதிக்கும் ஒழுங்குக்கும் எதிரான குறியீடாக அமெரிக்காவில் சித்தரிக்கப் படுகின்றனர்.

இப்படி எல்லாத் துறைகளிலும் வேர் கொண்டிருக்கும் நிறவெறிதான் அமெரிக்காவின் இயக்கத்திலேயே கலந்திருக்கிறது. ஒருசில கருப்பினத்தவர் மேல் நிலைக்கு வந்து விடுவதனால் மட்டுமே நிறவெறி எந்த விதத்திலும் அங்கே முடிந்துவிடப் போவதில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கழுத்து வெட்டப்படும் போதுதான், ஆப்பிரிக்க - அமெரிக்கர்கள் என்று அழைக்கப்படும் கருப்பின மக்களின் விடுதலையும் சாத்தியம்.

அதுவரை கன்டலீசா ரைஸ், காலின் பாவெல், பாரக் ஒபாமா, மைக்கேல் ஜாக்சன், மைக்கேல் ஜோர்டான், மாஜிக் ஜான்சன், டைகர் வுட்ஸ், டென்சில் வாஷிங்டன் முதலிய கருப்பின மேன்மக்கள் துரோகிகளாகவோ, ஒத்தூதிகளாகவோ, அல்லது கோமாளிகளாகவோ அமெரிக்க மக்களின் பொழுதைச் சுவாரசியமாக்குவதை மட்டும்தான் செய்யமுடியும்.

• இளநம்பி



படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

***வந்து உங்களைக் கூப்பிடு வாங்க?'' ஏதோ... நானும் கேள்விகள் கேட்டேன்.***

''பென்ஷன் பணம் வருது. அத்த வச்சிகினு சமாளிக்க முடியல. எப்பனா ஒரு வாட்டிதான் இது மேரி (மாதிரி) அடைப்பெடுக்க கூப்புடுவாங்க. அடையாறு பீலி யம்மன் கோயிலாண்டதான் ஊடு.

கூட்டமா கீறதால பஸ்ல ஏற மாட்டேன். அவுங்கள கொற சொல்லக்கூடாது. நம்ப மேல நாறுது. போயி பக்கத்துல நின்னா யாருக்குத்தான் கோவம் வராது. அதான் எங்கயிருந்தாலும் நடந்தே ஊட்டுக்குப் போயிடுவேன். போற வழியில அங்கங்க சொல்லி வச்சிரு வேன். எடத்துக்கு ஏத்த மாதிரி 100, 200 தருவாங்க.''

***''எப்படி இந்த வேலைக்கு வந்தீங்க?''***

''எல்லாம் கெவுருமண்டு வேலைக்காகத்தான். நான் ஜாதில நாயக்கரு. போயும் போயும் இந்த வேலைக்கு வந்துக்கிறீ யேடா?ன்னு எங்காளுங்க கேழி (வசைச் சொல்) கேட்டாங்க. எஸ்.சி. ஆளு ஒருத்தர்தான் இந்த வேலைல சேத்து உட்டாரு.

**''இவ்ளோ கஷ்டமும் யாருக்காக? பொண்ணுங்களுக்காகத் தான். அதுங்களுக்கு காலா காலத்துல ஒரு கல்யாணத்தப் பண்ணிட்டேன்னா நிம்மதியா கண்ண மூடிடுவேன்.''**

ஆரம்பத்துல படாத கஷ்டமெல் லாம் பட்டேன். ஒரு நாளைக்கு ஒம் பது வாட்டி வாந்தியா எடுத்துக் கெடந்தேன். சோத்த அள்ளி வாயில வச்சாப் போதும், அப்பத்தான் எங்கங்க கைய வச்சி அள்னமோ அதெல்லாம் ஞாபகத்துக்கு வரும்.

நாம இன்னாத்தான் சொன்னா லும் செரி, போடக் கூடாதெலாம் கக்கூஸ்ல போட்ருவாங்க. அப்பு றம் அடச்சிக்கும். ட்ரெய்னேஜ் மூடியத் தொறந்தாப் போதும், ஆயிரக்கணக்குல கரப்பாம் பூச்சிங்க, பூரான், தேளுன்னு என்னென்னமோ ஓடும்.

பல்லக் கடிச்சிக்கினு உள்ள எறங்கிடுவோம். நின்ன வாக்குல காலால தடவித் தடவிப் பாப் போம். அப்பிடியே வழியக் கண்டு புடிச்சி கண்ண மூடிக்கினு எறங்கிட வேண்டியதுதான். வேல முடியிற துக்குள்ள பத்து பாஞ்சி தடவையா வது முழுவி எழுந்திருச்சிடுவோம். சாதாரணத் தண்ணியா அது. காதெல்லாம் சும்மா 'கொய்ய்ய்ய்ங்'ன்னு அடைச்சிக் கும். கண்ணு, காது, மூக்கு, வாயின்னு ஒரு எடம் பாக்கியிருக் காது. இன்ன பண்றது? சோறு துன்னாவணுமே!

எங்கூட வேல செய்ற ஆளுங் கள்லாம் சரக்குப் போட்டுட்டுத் தான் காவாயில எறங்குவானுங்க. வாங்குற சம்பளத்த குடிக்கே... அழிச்சிருவானுங்க. எனக்கு அன்னிலருந்தே பீடி, குடி ரெண்டுமே கெடையாது. அதனால தான் இன்னிக்கி வரிக்கும் நான் உயிரோட கீறேன்.''

''இவ்ளோ கஷ்டமும் யாருக்காக? பொண்ணுங்களுக்கா கத்தான். அதுங்களுக்கு காலா காலத்துல ஒரு கல்யாணத்தப் பண்ணிட்டேன்னா நிம்மதியா கண்ண மூடிடுவேன்.''

**— நன்றி: திங்கள் சத்யா (இணையத்திலிருந்து)**



ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புக்கள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

படிப்பகம்

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)

www.padippakam.com

REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87

Regd. No: TN / CCN / 84 / '06-'08



# காதல் முதல் கருப்பை வரை வாடகைக்கு!

சேவைத்துறையின் வரம்புகள் எங்கே முடிகின்றன? அவுட் சோர்சிங் என்ற 'குத்தகை வேலை முறை' எந்த எல்லை வரை விரியவிருக்கிறது? அது இன்னும் எத்தனை தூரம் விரிந்தால் இந்தியா வல்லரசு ஆகும்?

சேலம்-சீரநாயக்கன்பட்டி. கணவனுடனும் இரண்டு குழந்தைகளுடனும் வீட்டுவேலைகள் செய்து பிழைப்பைத் தள்ளும் ஒரு ஏழைப்பெண்மணி - சாந்தி. இந்தப் பெண் அந்த வட்டாரத்தில் பிரபலமான ஒரு வாடகைத்தாய். இதுவரை ஐந்து குழந்தைகளை வாடகைக்குச் சுமந்து பெற்றுக் கொடுத்திருக்கிறார் சாந்தி. ஒரு குழந்தைக்கான வாடகை ரூ. 5000.

குழந்தையுடைய தந்தையின் உயிரணுவைக் கொண்டு சோதனைக் குழாயில் கருவை உருவாக்கி, பின்னர் அதனை வாடகைத் தாயின் வயிற்றில் இறக்கிப் பிரசவிக்கும் முறையில் சாந்தி இதனைச் செய்யவில்லை. மாறாக குழந்தையின் தந்தை, தனது உண்மையான மனைவியின் ஒப்புதலுடன், சாந்தியுடன் நேரடியாகவே பாலியல் உறவு வைத்துக்கொண்டு, கருத்தறிக்கச் செய்யும் முறை இது. வாடகைத் தாய் ஆவதற்கு முன் வாடகை மனைவி! குழந்தையின்மையால் துயருறும் பெற்றோருக்குக்காக தான் செய்து வரும் இந்தச் சேவை, விபச்சாரத்தைவிட மேலானது என்பது சாந்தியின் கருத்து.

வறுமையில் உழலும் மேற்குத் தமிழகத்தில்தான் இந்தத் தொழில் வளமாக நடக்கிறதாம். படுக்கைக்கு வாடகை மனைவி, கருப்பைக்கு வாடகைத்தாய், பிறகு பிரசவம் என அனைத்தையும் ஒரு பேக்கேஜ் ஆக மார்க்கெட்டிங் செய்கின்றன இந்த வட்டாரத்தின் தனியார் மருத்துவமனைகள். விலை ரூ. 2 லட்சம். இந்த வாடகைத்தாய் முறை சரியென்றோ தவறென்றோ கூற இதுவரை எந்தச் சட்டமும் இல்லை. நம்பிக்கைதான் இந்தத் தொழிலின் ஆதாரம்.

வாடகை மனைவி வேறு யாருடனும் உறவு வைத்துக் கொள்ளாமல் கண்காணிக்க வேண்டுமெனக் கூறுகிறார்கள் வாடகை கொடுக்கும் தாய்மார்கள். இதனை உத்திரவாதம் செய்ய பத்து மாதமும் தமது கண்காணிப்பிலேயே அவர்களைப் பராமரிக்கின்றன மருத்துவமனைகள்.

குழந்தை பிறக்காது என்பது உறுதியானால் தத்து எடுத்துக்கொள்ளலாம். ஆனால் பார்ப்பனியத்தில் ஊறி முதலாளித்துவ நுகர்வியத்தில் ஊதிப்புடைத்து வரும் இன்றைய ஆணாதிக்கம் 'தன் இரத்தம், தன் சொத்து' என்றுதான் சிந்திக்கிறது.

குழந்தைப் பேறுக்காக இரண்டாவது, மூன்றாவது என்று அடுக்கடுக்காகத் திருமணங்களைச் செய்து கொண்ட நிலப்பிரபுத்துவ ஆணாதிக்கம், பெண்ணை ஒரு பிள்ளை பெறும் எந்திரமாகக் கருதியது என்றால், இன்றைய முதலாளித்துவம் அவளை வெறும் கழிப்பறைக் காகிதமாகவே கருதுகிறது. பிள்ளை வேண்டுமென்பதற்காகக் கட்டிக் கொண்டாலும், இரண்டாவது மனைவி எனும் அடிமைக்கு காலம் முழுவதும் சோறு போட வேண்டும் என்ற நிலப்பிரபுத்துவ தார்மீக உணர்விலிருந்தும் கூட தந்தைகளை விடுவித்திருக்கிறது முதலாளித்துவம்.

வைப்பாட்டி முறைக்குப் பதிலாக விபச்சாரம் என்பதைப் போல, இரண்டாவது திருமணத்துக்குப் பதிலாக வாடகைத்தாய்! தாய்மை, தந்தைமை என்ற உணர்ச்சிப் பசப்புகளையெல்லாம் அகற்றிவிட்டு அவற்றின் உள்ளே பொதிந்திருக்கும் 'சொத்துடைமை' எனும் சாரத்தை, அதன் நிர்வாண வடிவில் நமக்கு அறிமுகப்படுத்துகிறது முதலாளித்துவம்.

உறவுச் சேவை மட்டுமல்ல, பிரிவுச் சேவையையும் வழங்குகிறது இந்தியா. அமெரிக்காவில் ஒரு காதலனோ, காதலியோ தன் காதல் உறவை முறித்துக்கொள்ள விரும்பினால், அதனை விளக்கவும் விவாதிக்கவும் 'அநாவசியமாக' நிறைய நேரத்தைச் செலவிட வேண்டியிருக்கிறதாம். இந்தத் தொந்திரவிலிருந்து அமெரிக்கர்களை விடுவிப்பதற்கான சேவையையும் இந்தியா வழங்குகிறது.

ஆஸ்க் சன்டே, கெட் ஃபிரைடே போன்ற அமெரிக்க நிறுவனங்கள் சில டாலர்களை கட்டணமாக வசூலித்துக் கொண்டு பெங்களூரிலும், ஹைதராபாத்திலும் உள்ள கால் சென்டர்கள் மூலம் இந்தச் சேவையை அமெரிக்கர்களுக்கு வழங்குகின்றன. இதன்படி ஒரு பெண்ணுடன் டேட்டிங் செய்து கொண்டிருக்கும் இளைஞன் அவளுடனான உறவைத் துண்டித்துக் கொள்ள விரும்பினால், கால் சென்டர்களில் வேலை செய்யும் இந்திய ஊழியர்கள், காதலனின் சார்பில் அந்தப் பெண்ணுடன் உரையாடி, அவளுடைய உணர்ச்சிப் பூர்வமான முறையீடுகளுக்கும் கேள்விகளுக்கும் பக்குவமாக விடையளித்து அந்த உறவை முறித்து வைப்பார்கள்.

சேவை என்ற சொல்லின் பரிமாணம் விரிந்து கொண்டே செல்கிறது. தாய்மை, காதல், உறவு, பிரிவு.. அடுத்து சந்தைக்கு வரப்போகும் மனித உணர்ச்சி எது?

• சூரியன்

படிப்பகம்